கடவுள் துணை.

ஜாதக கணிதாரம்பம்

என்னும்

சோதிட ஆசான்

(சோதிடர் உதவியின்றி கற்கும் முறை)

முதல் பாகம்

நூலாசிரியர்:

மு. மார்க்கலிங்க சோதிடர் அவர்கள்

குமாரரும் சிஷ்யருமான

பால ஜோதிட கணித நூற்புலவர்

மா. தெய்வசிகாமணி சோதிடரவர்கள்

பதிப்பாசிரியர்:

K. A. மதுரை முதலியார் அவர்கள்

இதன் விலை] 1934 [ரூபா 1

Registered Copy Right

முகவுரை

ஸ்ரீ சிவபெருமானது திருவருளை முன்னிட்டு, முழு முதற்கடவுளாலுண்டாக்கப்பட்ட வேதங்கள் ஆறினுள் நேத்திரமென்று சொல்லும் இச்சோதிடத்தை, அறிய பெரிய நூலாசிரியர்கள் எளிய நடையில் அநேகம் எழுதியுள்ளார். ஆயினும் என் சிற்றறிவுக் கெட்டியவாறு இந்நூல் அமைக்கலாயினேன்.

இப்பூவுலகில் ஆத்ம கோடிகளாய் பிறந்த 84 லக்ஷம் ஜீவர்களுள் மக்கட்பிறவியையுடைய நம்மிற் சிலர் செல்வமுடையோராகவும், சிலர் தரித்திரராகவும், சிலர் உருவத்தாலும் குணத்தாலும் நடக்கையாலும் வாழ்க்கை ஆயுள் முதலியவைகளாலும் ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருக்கிறோமே யொழிய ஒருவரைப்போன்றே மற்றவரை எண்ண இடமில்லை. இவ்வாறு நாம் பலவேறு விதங்களில் மாறுபட்டிருப்பது எல்லாம் வல்ல இறைவன் கட்டளையாயினும், சுகம் துக்க முதலியவைகளையும் கடவுள் தன் நேத்திரத்தால் பாராபக்ஷமாய் பார்ப்பாரா, ஒருகாலும் பார்க்கார். அவ்வாறு ஏகசொரூபமாயுடைய கடவுள் அனுக்கிரகம் பெற்ற நம்மில், சிலர் விசனம், கஷ்டம், தரித்திரம் முதலியவைகளையே அனுபவிப்போரும், மற்றும் சிலர் சந்தோஷம் சுகம் முதலியவற்றை அனுபவிப்போருமாய் இருப்பதற்கு காரணம் வேண்டுமாகையால் அவ்விதகாரணத்தையும், வருங்காலபலனையும் விளக்குவதே இச்சோதிடத்தின் முக்கிய கருத்தாகும். சோதிடம் என்பதை ஆதியில் பரமசிவன் தன்

பத்தினிக்குபதேசித்ததாய் வேதாந்தங்களிலே கூ
டிருக்கின்றனவாயினும், இந்நூலில் பொதுப்பாயிரத்
எழுதிய செய்யுளால் (அதாவது) பூமருவுபார
என்ற செய்யுளினால் வேத வியாசர் பூலோக ந
களைச்சொல்லவும், விக்னேஸ்வரர் தன் ஒற்றைக்கொம்பி
னால் மேருகிரியின்மேல் வடமொழியில் எழுதிவைத்ததாயும்
உரைப்பதையறியலாம்.

தற்காலத்தில் அநேக அரும்பெரும் சோதிட நூற்கள் வெளிவந்துள்ளன வென்று கூறியுள்ளேன். ஆயினும் அதிலுள்ள விஷயங்கள் வடமொழி நூற்களையறிந்த பெரியோரே யறியலாமன்றி எம்போன்றோர்க்கியலாதெனவறிந்தே யான் எளிய நடையில் இந்நூலெழுதலானேன். எப்படியெனில் ஓர் சிறிய குழந்தைக்கு ஓர் உபாத்தியாயர் "அ, ஆ" என்கிற அக்ஷரங்களை எவ்வாறுரைப்பாரோ, அவ்வாரே இந்நூலிலுள்ள விஷயங்கள் பெரும்பாலும் எளிதிலறியும் முறைப்படி கூறியதாகும். ஆதலால் இந்நூல் சிவசுப்ரமண்யர் கிருபையால் அனைவருக்கும் நன்கு பிரயோஜனமாகுமென்றும் நம்புகிறேன்.

இந்நூலிலே யுள்ள விஷயங்கள் யாவும், பெரும்பாலும் பற்பல வடமொழி சாஸ்திரங்களினின்று மொழி பெயர்த்து எழுதிய பல நூற்களினின்று ஒருங்கு சேர்த்து லக்கினஸ்புடம் செய்யும் விதம், லக்கினகாரகம், நக்ஷத்திர உரிச்சொல் லக்கினபலன். அஷ்டகவர்க்கம் திசை புத்தி அந்தரம் யோகம் அவயோகம் பாலாரிஷ்டம் சகடைதிசை புக்தி பலன், யோகமுண்டாகும், காலம் முதலிய அறிய விஷயங்களைத்தக்க உதாரணங்களுடன் விளக்கிக்காட்டி இருப்பதையறியலாம். சோதிட நூலின் மர்மமறியாத சிலர், சோதிடத்தை தூஷித்து நம்பிக்கை யில்லாதிருப்பது

அவர்களறியாமையின் பயனாகும். ஆயினும் இச்சோதிடமானது, எனது முன்னோர் எழுதிவைத்துள்ள பற்பல ஏட்டுபிரதிகளாலும், சோதிடத்தையே ஆபரணமாய் பூண்டுள்ள எனது தகப்பனார் காவேரிப்பாக்கம். மு. மார்க்கலிங்க ஜோதிடர் அவர்களின் சம்மதியாலும், என்னிடமிருந்துள்ள பற்பலபழய நூற்கள்சிதருண்டு போகாவண்ணமும்,சேர்த்து திரட்டியதாகும், மேற்சொல்லிய சோதிட நம்பிக்கையில்லாதோரும், இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பார்களாயின், இதனுண்மை விளங்கும். ஆதலால் சோதிடங் கற்க விரும்புவோர்.

பரவிய ஜோதிடந்தனை யாராய்ந்து
பகருவோ ரகமகிழ் வெய்தி
நெறியுட னித்தியக் கடனதைக்காலை
நினைவுடன் மாலையு முடித்து
தரைதனில் தூயஜல மதைக்கண்டு
தானுமே சுத்த நீராடி
கரிமுகனோடு குருபரன் றாளைக்கருத்தினில்
நிருத்தி நீற் தரித்து.

திருமகள் நாதன் திரிபுரை சமேதன்
திருகலைமா துரைவேதன்
திருமலர் கழல்கள் தியானமே செய்து
சிந்தித்து பாசனங் கொண்டு
குருவருள் பூண்டு கபடதை மறந்து
குறைவிலாக் காருண்ய ராகி
பெருகிய டம்பவேஷமும் நீக்கி
பேணுதல் ஜோதிடர் கழகாம்.

என்ற முறைப்படி சோதிடங்கற்க விரும்புவோர், அதிகாலையில் எழுந்து நித்திய கடனை முடித்து. சுத்த ஜலத்தில் நீராடி விக்நேஸ்வரர், சிவசுப்ரமண்யக்கடவுள், பிரம்மன், உருத்திரன், விஷ்ணு, முதலிய தெய்வ வழிபாடு செய்து கொண்டு கபடம் வஞ்ச முதலிய உலோபகுணங்களை மறந்தவராய், குருவருளைக்கொண்டு சோதிடத்தினால் பொருள் சம்பாதிக்கவேண்டுமென்கிற எண்ணத்தை மறந்து அனைவரிடத்திலும், காருண்ய முடையவர்களாய் பெருமையின்றியுரைப்பாராயின், நாளுக்கு நாள் கலைவளருவது போல் இச் சோதிடம் விருத்தியடைவதோடு, இப் பூவுலகெங்கும் பிரகாசிக்குமென்பதிற்கு சிறிதேனும் ஐயமில்லை.

இச்சோதிட நூல் நாளடைவில் தயாரித்தெழுதியதாயினும் இதனை வெளியிடுவோரின்றி இருந்ததை எனது நண்பரும் ஷண்முகானந்த புத்தகசாலை சொந்தக்காரருமான K. A. மதுரை முதலியாரென்பவர் விருப்பத்தின்படி இதனை வெளியிடக் கருத்துக்கொண்டதோடு இதனை அச்சிட்டுத்தந்த செல்வரங்கன் அச்சுக்கூடத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி செலுத்தக் கடவேனாகவும்.

இதில் ஏதேனும் எழுத்துப் பிழைகளிருக்குமாயின் வாசகர்கள் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளும்

தங்கள் அன்பன்

A. R. M. தெய்வசிகாமணி,

பாலசோதிட கணித நூற்புலவர்.

விஷய அட்டவணை.

நெ.	விஷயம்.	பக்கம்.
1	இராசிகளின் விபரம் ...	3
2	இராசிகளின் நாழிகைப் பிரமாணம்	3
3	மாத ராசிகள்	4
4	இராசியறியும் விபரம்... ...	6
5	காரக நிகண்டு	7
6	லக்கினஸ்புடம் செய்யும் விதம்...	10
7	திரிகோண நக்ஷத்திர விபரம் ...	11
8	சரஸ்திர உபயவிபர சக்கரம் ...	11
9	நக்ஷத்திர ஆத்யந்தம் ...	12
10	,, தியாஜிய காலம் ...	12
11	லக்கினபலன்	12
12	12 பாவக விபரம்	16
13	நக்ஷத்திரத் தரிக்கால் ...	21
14	ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகை முதலியன	22, 23
15	நவகிரக பார்வை	24
16	நோக்கினளவுகள்	24
17	மண்டலங்கள் அறிவது ...	25, 26
18	மண்டல பலன்	27, 28
19	கிரகசமய விபரம்	28
20	ஹோரா லக்கினமெடுக்கும் விபரம்	29
21	இராசி விபரசக்கரம்... ...	30
22	பாலாரிஷ்ட விபரம்... ...	30, 34
23	கிரகங்களின் குலம்	34
24	காதம் அரியவேண்டுவது ...	35

நெ.	விஷயம்	பக்கம்.
25	திதிகளின் பெயரும் விபரமும்...	36, 37
26	நவாங்கிசமரியும் விபரம் ...	38, 39
27	12 ராசிகளுக்கும் சுபன் அசுபன் மாரகன்	45
28	சத்திநவகோள் குருவணக்கம், அஷ்டகவர்க்கு விபரம்	46, 47
29	காலசக்கிரதிசை வருடம் ...	48
30	சூரியன் முதல் சனி வரையில் அஷ்டகவர்கு பரல்	49, 51
31	சூரியன் பரல் சமுதாயம் காணும் வகை	51
32	திரிகோணமறியும் விபரம் ...	55
33	இராசி குணகாரம் காணும் விதம்	57
34	கிரக குணகாரம் காணும் விதம்	53
35	கண்டாதிகண்ட விபரம் ...	61
36	சந்திர சூரிய அகாரமானம் ...	68
37	நக்ஷத்திர தேவதை ...	64
38	ஆகாச பாதாள சுக்கிரன் ...	64
39	அங்கிசபலன் விபரம் ...	65
40	ஸ்வயாங்க லக்கினம் ...	67
41	நவாங்கிச லக்கினம்... ...	67
42	,, அரியவேண்டிய சூக்ஷம சக்கரம்	68
43	சோதிட விளக்கம்	69
44	கெண்டாதி விளக்கம் ...	72
45	நவகோட்களால் உண்டாகும் வியாதி	74
46	பிதுர் கண்டம்	77
47	சாதி அபிஷேகம்	79
48	சமுகவேதை	80
49	தக்ஷணவேதை, வாமவேதை ...	81

நெ.	விஷயம்	பக்கம்.
50	கிரககாரக விபரம்	82
51	யோகினி நிற்கும் திசை ...	84
52	தாதுமூல ஜீவக்கோள் ...	85
53	தாதுமூல ஜீவராசிகள் ...	85
54	கருவி விபரம்	85
55	ரத்தின வர்க்கம்	85
56	உலோக விவரம்	85
57	நக்ஷத்திர நிகண்டு	86
58	ஸ்தான இயல்பு	90
59	அவயவ பின்னம்	90
60	சஷ்டி அம்சம்	93
61	கிரக அவஸ்தை	94
62	யோக விவரம்	95
63	யோக பாவம்	99
64	லகிக்ஞேதயம்	115
65	பாலாரிட்ட தோஷம் ...	115
66	யோக அரிட்ட தோஷம் ...	116
67	லக்கினத்தைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயம்	117
68	கிரகசேகர விவரமும் உச்ச விவரமும்	118
69	கிரக சேகரப்பலன்	121
70	உடுமகாதிசை	137
71	மகாதிசை விபரம்	141
72	அந்தர விவரங்கள்	144
73	சூரியதிசை அந்தர விபரம் ...	144
74	சந்திரதிசை அந்தர விவரம் ...	146
75	குஜமகாதிசை ,, ...	149
76	ராகுமகாதிசை ,, ...	151

நெ.	விஷயம்			பக்கம்.
77	குருமகாதிசை அந்தர விபரம்		...	154
78	சனிமகாதிசை	,,	...	156
79	புதன்மகாதிசை	,,	...	159
80	கேதுமகாதிசை	,,	...	161
81	சுக்கிரன்மகாதிசை	,,	...	164
82	திசாபுத்தி பிரிக்கும் விவரம்		...	166
83	திசை புத்தி விவரம்...		...	167
84	சூரியமாதிசை பொதுப்பலன்		...	169
85	சந்திரமகாதிசை	...	...	169
86	குருமகாதிசை	...	...	169
87	ராகுமகாதிசை	...	...	170
88	குருமகாதிசை	...	...	170
89	சனிமகாதிசை	...	...	171
90	புதன்மகாதிசை	...	...	171
91	கேதுமகாதிசை	...	...	172
92	சுக்கிரமகாதிசை	...	...	172

அரக்கோணம்
குப்புசாமி பாகவதர் எழுதிய
சாற்றுக்கவி.

சீர்பெரும் சோழமண்டல மதற்கே
    செப்பிய வடமேற்காகும்
தார்புகழ் காவேரிப்பாக்க மாநகரில்
    தன்யராம் ஜோதிட மரபில்
பேர்பெரும் மார்க்கலிங்கரின் தவத்தின்
    பேருறுக் கொண்டதோ வென்த
பார்மிசை யுதித்த பானுவைப் போன்று
    பகலிலோர் மதலையே தோன்ற
இன்னிசை தேய்வசிகாமணி யாமென்றி
    கற்றியே நாமமும் சூட்டி
பன்னியக் கல்விப்பகுதிற் பலவும்
    பயன்பெற கற்றிட விடுத்தார்
பின்னவர் ஜோதிடப் பெருங்கடல்
    தனிலோர் புறமரும் நீரதை யருந்தி
உன்னியே புவியிலவ ரவர்பலனை
    உரைத்திடத் தோன்றினா ரென்னே.

மண்புகழ் சென்னை மாநகர் தன்னில்
    மருவிய பெரும் புகழ்பெற்று
கண்யமாம் பலர்கள் கருதும் ஜாதகமாம்
    காட்டிய பலனதை யறிந்து
வுண்மையாய் பொருளை உறுதியா யுரைத்தோர்
    உலகினி லரும்புகழ் பூண்டோர்
வண்மையாய் ஜோதிடந்தனை யுணர்ந்தே
    வழுத்துவோ ரவர்புகழ் மிக்காம்.

வயதோரு பதினறது முதலிதுகார்
வழுத்தியே ஓங்கிடும் ததியில்
நயமுடன் மதுரை முதலியாரிவரை
நண்ணியே பரிவுடன் கேட்க
பயனுட ஜோதிட ஆசானேன்று—பட்டமும்
சூட்டியே வரைந்து
வியந்திட இருபத்தைந்தவர் வயதி
லோங்கிட உலகினில் விடுத்தார்.

ஆரிய சித்தாந்த கணித பஞ்சாங்க ஆசிரியரும்
கணிதசித்த ஜோதிடம்

C. V. அருட்பெருஞ் ஜோதி, B.A,

இந்நூலைப்பற்றி சிறப்பித்துப்பாடியது.

வரைந்தென்ன நாள்வாரம்
திங்கள் ஆண்டில்
வரும்பலனிற் நன்மையொடு
தீமை நோய்கள்
அறிந்துரைக்கத் தெள்ளியநற்
பதங்கள் சேர்த்து
அவரவர்க ளறிந்திடவும்
ஒருவர்க்கோத
நிறைந்திடு ஜாதக ஜன்ம
லக்கினத்தோடு
நிச்சயமாய் கோசாரம்
நேராய்க்காண
சிறந்திடு ஜோதிட ஆசானிதை
ப்பயின்றோர்
சித்தியோடு புத்தி அதி
சிறப்புற்றுய்வார்

இந்நூலமைத்தவரின் நகரச்சிறப்பு.

மாவொடுதென்னைக் கமுகொடுபுன்னை
மணங்கமழ் கோங்குமந்தாரை
தாவுமாதுளையும் தோன்றும்பலாவும்
துய்யநற் கொய்யாவும் கதலி
நாவினிற்கினிய நற்சீனிதிராக்ஷி
நலமுள அத்தி ஆலரசு
மேவியே குளிர்ந்து மிகுசிறப்புடனே
மேன்மையாம் சோலைசூழ் நகராம்.

பாயுநீரோடை பங்கயமல்லி
படர்ந்த தடாகநற்றுறவும்
ஆயநற்சிங்கபெருமாள் முத்தீசர்
அன்னையாம் செல்வியம்மன்
தூயஆலயங்கள் சிறந்துரும்காக்ஷி
சுந்திரகாஞ்சிமா நகர்க்கே
வாயுவில் காவேரிப்பார்க்க மென்றரையும்
வளர்சதுர்வேத மங்கலமாம்.

வேலூர் சோதிடர் சதாசிவ முதலியார்.

பிள்ளையார் கோவில் தெரு, வேலப்பாடி, வேலூர்.

இந்நூலானது பெரும்பாலும் எளிய நடையில் அரிய விஷயங்களைச் சேர்த்துத் திரட்டி ஓர் நூலென அமைத்திருப்பதால் இவை ஆரம்ப சோதிடர்களுக்கு பெரிதும் பயன்படு மென்பதில் சந்தேகமில்லை. இவ்வரிய நூலையமைத்த சோதிடம் தெய்வசிகாமணி என்பவருக்கு கடவுள் கிருபையால் நாளடைவில் இச்சோதிடம் விருத்திடையுமாறு கடவுள் உதவி செய்வார்.

வா. உ. தேசிகாச்சாரியார்

வானமாமலை

புண்ணிய பூமியாம் இப்பாரதகண்டத்தில் வேதகால முதல் இற்றை ஞான்றுவரையில் சோதிட நூல்கள் கணக்கில் அடங்காத அத்துணை அபரிமிதமாக மலிந்துகிடக்கின்றன, என்பது நாம் கூறுமலே விளங்கும். பண்டைக்காலம்போல் சொன்னதை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாது. எடுத்ததற்கெல்லாம் அது எப்படி இது எப்படி என்று கேள்வி கேட்கும். அறிவியல் வாதிகள், விஞ்ஞானமேதாவிகள், பூகோள ககோள விர்ப்பனர்கள் காலமாகிய இவ்விருபதாம் நூற்றூண்டில் ஒருபுறம் பல்லாயிர வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் சோதிடகலையையே (அதன்பலனையே) நம்புவதற்கு முடியவில்லை என்றும், மற்றொருபுறம் சோதிட நூற்களை சரியான முறையில் கணிக்கத்தெரிந்த சிறந்த கணித வல்லுனர் தற்காலம் இல்லை என்றும், வேறொருபுறம் பிழையற்ற கணித நூற்களே கலியுகத்தில் கிடையாதென்றும் பலவாறுகக்கூறிவரும் இது காலை சோதிடத்தின் தன்மையை செவ்வனே விளக்கவேண்டி சோதிட ஆசான் என்னும் இன்னூல் சோதிட பரம்பரையில் தோன்றியவரும். சோதிடத்தைத் தருவித்துருவி ஆராய்ந்து தேர்ச்சிப்பெற்ற மு. மா. தெய்வசிகாமணி சோதிடரவர்களால் மேற்கூறிய ஐப்பாடுகளை ஒழித்து நன்முறையில் தெள்ளிய நடையில் ஒழுங்குபெற அமைத்து யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய முறையில் எழுதியதை சென்னை பிரபல புத்தகவியாபாரியும் பலநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமைக்குரியவருமாகிய திருவாளர். K. A. மதுரை முதலியார் அவர்கள் நன்முயற்சியால் தன் சிரமத்தையும், பொருட்கஷ்டத்தையும் பாராது சோதிட உலகத்திற்கு சோதிட ஆசான் என்ற இந்நூலைத்தந்துதவியதற்கு சோதிடர்கள்

நன்மதிப்புக்கும் நன்றியறிதலுக்கும் உரியவராவர். இன்னும் பல நூல்களை வெளிப்படுத்துவான் வேண்டி சகல சம்பத்தும் நீண்ட ஆயுளையும் திடதுகாத்திரத்தையும் முழுமுதற்கடவுள் கொடுத்துதவ வேண்டி நிற்கும்.

திருப்பாபுலியூர்
பிரசண்ட உத்தண்ட
நம்பிலைய ஜோதிடரவர்கள் பாடிய.

நூற்பெருமை.

வெண்பா.

பன்னும் சீர் ஜோதிட நூற்பல உணர்ந்தேவதிற் சிறந்த
நன்னிய சாராம்சமதை நன்கறிந்தே—பின்திரட்டி
தரைதனி லெல்லோருணர்ந்து தாம்கற்க ஜோதிட நூற்
குருமலர் தாள் சிரமிசையிற் கொள்வாம்.

விருத்தம்.

அகத்தியர் புலிப்பாணி ஆதிபோகர்
அத்திரிமரீசி அங்கிராமர் வியாசர்
இகத்தில் பாரசர் வதிஷ்டர்
ரோமர் கற்கர்
இயம்பு புகர்நாரதர் காசிபர்
சவுனர்
ஜகத்தில் முனி கௌசிகனும்
ஜனகன் நந்தி
சாங்கோபமாய் புகன்றசகல
நூற்கள்
பருவிநயத் தோடுணர்ந்து
நுட்பமாக
பாந்தர்கள் கற்றுய்யவிதை
வரைந்திட்டாரே.

அருளுரை வணக்கம்.

திருமடந் தையர்வாழ் தொடுக்காட்டில் வாழ்
செல்வர் வீமேசுர ரருள் சேரவே
யுரியநாள் ராசிகேட்போர் நிகண்டு நன்
குற்றதாகுங் கணிதபஞ் சாங்கமு
மருணன் சோமன் குஜன் புதனந்தண
னறைந்த சுங்கன் சனி ராகு கேதுவும்
கருதும் வட்டமுந் தூமம் வின்னுட்பமும்
கணித சாரநிலை முதற்கா ட்டுமே

உலகிற்பிறந்த மானிடர்களுக்கு தன்வருங்கால பலனைத் தெரிந்து கொள்வதாயின்.

மன்னுகோன் நட்பாக்ஷி யுச்சநீச்சம்
வகுத்த தசவர்க்கு கிரியாக மனந்திக்கில்
உன்னுபயங் கிரகஉயித்தங் கிரகங்கூடல்
உதயமத்த மாம்பார்வை திசைகால சக்கரம்
பின்னுமங் கச்சக்கரம் கிரணப் பயிண்டிகமும்
பேசிலட்ட வர்க்கமுடன் சருவாட்ட வர்க்கம்
மின்னுதயம் பகலிரவி ராசிகுணகாரம்
வேதை நாட்டி திவருடம் முதற்பலன் சாதகமே.

என்ற சாதக சிந்தாமணியின் நூலுதவிய பொருள் என்ற 11 ஆம் செய்யுளின்படி நவகோட்களென்னும் சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவர்களும் அவர்களடையும், நட்பு, ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகை என்னும் விதங்களையும் கிரகங்களின்சேர்க்கையாலும், பார்வையாலும், உண்டாகும் சுபாசுபங்களாலும், பார்வைதிசை காலசக்கரம் அஷ்டவர்க்கம், சர்வா அஷ்டவர்க்கம் மண்டலம், சமயம் சாரம்பருவ மெனவரும், விதங்களையும் திதி நக்ஷத்திரம் கரண யோகம், வாரம் மாதம் வருடம் அயனம் முதலியவைகளைப் பற்றியும் ஆராய்ந்து சொல்வதே சோதிடர்களின் முக்கிய கடமையாகும்.

உ

கடவுள்துணை

ஜாதக கணிதாரம்பம்

என்னும்

சோதிட ஆசான்

பாயிரம்

பூமருவும் பாரதத்தை தவராச முனிராசன்
புகழ்ந்து கூற
மாமருவு மேருகிரி யேடாக எழுத்தாணி
வெண்கோடாக
தேமருவும் பொருளுணர்ந்து விரைந்தெழுது
ங்காரணத்தான் செவ்வேண்முன்னோன்
காமருவோர் கொம்பனிரு செவியன முக்கண்ணல்வ
யைங்கரத்தோன் காப்பாம்.

சோதிடம் என்பது இப்பூவுலகெங்கும் பிரகாசித்திருப்பது. கற்றறிந்தோர் நன்கு அறியலாமாயினும், சோதிடம் என்பதே தற்போது அதன் ஒளியற்று உருவங் குறைந்திருகிறது. ஏனெனில், ஓர் சோதிடனை ஆருடம் கேட்பாராயின், தற்போது ஜீவராசி நடக்கிறது; ஜீவனைப்பற்றிக் கேட்டாயா இல்லையா வென்று கேட்க வந்தோரை வினவ, கேட்க வந்தோர் ஜீவன் என்பது என்னவோ வென்று விழிக்க வேண்டியதாயும், சோதிட மென்பதை ஆரும்ந்து சொல்லாத ஆபாச சோதிடர்களிடம் கேட்டுக்கொண்டு

அதன்படி நடக்காவிட்டால் சோதிட மென்பதே பொய் என்றும், சோதிடத்தில் நம்பிக்கை யில்லாது சிதருண்டு கிடக்கின்றன. தற்காலத்தில் ஆயிரக்கணக்கான சோதிடங்கள் வெளிவந்துள்ளனவாயினும் அதனின்றிருக்கும் விஷயங்கள் வெளிப்படையாய் இல்லாது மறைப்பொருளாய் இருப்பதால் எம்போன்ற சிற்றறிவுடையோர்க்கு அவை பயன்படாதிருப்பது கருதியே யான் இந்நூலை வெளியிடலானேன். அரப்பளிசுர சதகத்தில்

துதிபெருகவரு மூன்றுகாலமும் அறிந்தபேர்
துய்யகோடியி லொருவராம்

என்றிருப்பதை நன்கு அறியலாம். மூன்று காலங்களையும் அறிந்த மக்கள் கோடிக்கொரு வரேயாகும். நம்போன்ற ஆத்துமாக்களுக்கு முக்கியமாய் அவரவர்களுக்கு ஆதார பூதமாய் இருப்பதான பிருதிவு, அப்பு, தேயு, வாயு என பஞ்சபூதமேயாம். இப்படிச் சொல்லும் பஞ்சபூதங்களை ஒரு மனப்பட்டு நிருத்தித் தன் வசமாக்கியவன் ஆத்மஞானி எனவும் கூறுவதுண்டு. சாதாரண மனிதர் சோதிடம் கற்க வேண்டுவோர் அதிகாலையிலெழுந்து காலைக்கடனைத் தமது குலாசாரவிதிப்படி நேம நிஷ்டைகளும் முடிக்காமுன்னர் சோதிட நூலைக்கையாலும் தொடப்படாதென்பது சாஸ்திர சித்தம் இவ்வாறிருக்கும். ஆத்மாக்களுக்கே சோதிடம் சித்திக்குட் என்பதற்கையமில்லை. சோதிடர்களுக்கு முக்கிய ஆதாரம். சூர்யோதயமும், அஸ்தமனமும் மறுபடியும் சூர்ய உதயமுமாகும். இன்று சூர்யோதயமாகும் நேரம் என்ன? அஸ்தமன நேரம் என்னவென்று அறிந்துகொண்டவரே சோதிட நிபுணர்கள் என்று கூறலாம். ககோளத்தை 360 பாகையாக பங்கிட்டிருப்பதை மேல் நாட்டாராலும் நம் நாட்டிலுள்ள கணிதவல்லுனர்களாலும் ஒத்துக்கொள்ளப்

படுகின்றன. மேற்சொன்ன பாகைகள் 360-க்கு ராசிகள்
2. எனக் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

மேடம்	துலாம்
ரிடபம்	விருச்சிகம்
மிதுனம்	தனுசு
கடகம்	மகரம்
சிங்கம்	கும்பம்
கன்னி	மீனம்

இவ்வகை ராசிகள் 12 உள்ளனவாதலால் ராசி ஒன்றுக்கு பாகை 30 என்பதை வாசிப்போர் நினைவிலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். மேற்சொன்ன ராசிகள்-12-க்கும். நாழிகையின் அளவைக் கூறவேண்டுவதாயின்,

பேரு மீனொரு நாலேகாகுமே
பெரியசால் விடை நாலெமுக்காலதாம்
வீறுதண்டரி தேள்அறலரைகாண்
மிக்கநாழி கையைந்தேனலாகுமே
தேறுகன்னிகோலும் மைந்துநாழிகை
சிலையுங் கொண்டலுமைந்தரை நாழிகை
மாறிலாதசிவன் ஞெடுக்காடர்தாள்
வணங்கார சீயுதயமுன்கூருமே.

மேடம்	௪வ	4	15
ரிடபம்	௪தெ	4	45
மிதுனம்	௫வ	5	15
கடகம்	௫½	5	30
சிங்கம்	௫வ	5	15
கன்னி	௫	5	
துலாம்	௫	5	

விருச்சிகம்	ருவ	5	15
தனுசு	ரு½	5	30
மகரம்	ருவ	5	15
கும்பம்	சதெ	4	45
மீனம்	சவ	4	15

மேற்சொன்ன ராசிகள் பன்னிரண்டையுமே 12 மாதங்கள் எனப்படும். அவையாவன:—

சித்திரை	ஆவணி	மார்கழி
வைகாசி	புரட்டாசி	தை
ஆனி	ஐப்பசி	மாசி
ஆடி	கார்த்திகை	பங்குனி

என்பனவாம். ஆதலால், சித்திரைமாதம் என்றால் மேடமாதம் எனவும், வைகாசி மாதம் என்றால் ரிடபமாதம் எனவும் மற்றும் முறையே கூறுவதுண்டு. சோதிடர்களின் கடமை என்னவெனில் ஒவ்வோர் மாதத்திற்கும் கோள பேதத்தால் ஏற்படும் நாட்களின் வித்தியாசப்படி ஏற்படும் நாட்களுக்குப் பங்கிட்டு ஒவ்வோர் நாளுக்கும் தெரிந்து கொள்வதேயாம்.

யாதாமொருவர் தனது புத்திரர்களுக்கு ஜாதகம் கேட்குமிடத்து முதன் முதலாக அவர்கள் சொல்லும் மணி,நிமிஷங்களைத் தெரிந்து அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஆண் எனவும், பெண் எனவும் கண்டு சொல்லவேண்டும். இதற்கு முக்யமாய் ஓரை, ராசி, கிரகம் இவை முக்யமாகும்.

இதை யறிவதெனில், முன்சொல்லிய கோளபேதத்தாலேற்படும், அன்றய சூர்யோதயம், எத்தனைமணிக்கு என அறிதல்வேண்டும். இதனை விசேஷமாய் ஒவ்வோர் வருஷமும் வெளிவரும் பஞ்சாங்கத்தில் காணலாம்.

உதாரணமாக, சூர்ய உதயம் 5-54 என்றால், அன்று பகல்மணி 2-க்கு குழந்தை பிறந்ததாயின், அப்போது 8-மணி நேரமும் 6 நிமிஷமுமாகும். இதனை தமிழ் நாழிகையாக்கவேண்டின், மணி ஒன்றுக்கு 2½-நாழிகையாக, நாழிகை 20, விநாடி 15 எனப்படும், இவ்வாறே ஒவ்வோர்நாளும், சில நிமிஷங்கள் குறைந்தும், அதிகமாகியும் சூர்யன் உதயமாவதினாலேயே 365¼-நாள் கொண்டது ஒருவருஷமெனப்படும். பொதுவாய் பகல் நாழிகை-30, இரவு நாழிகை-30 கொண்டது ஓர்நாள் எனப்படும். மேலே சொல்லியபடி உதயாதி நாழிகையைக் கணக்கிட்டு, முன் சொல்லியபடி அம்மாதத்திற்குறிய ராசியின் நாழிகை, எவ்வளவோ அதனை அம்மாதத்தின் மொத்த நாட்களுக்குப் பங்கிட்டு ஜெனனமான தேதிவரையில், எத்தனை நாட்கள் சென்றனவோ, அத்தனை பாகத்தைக் கழித்து விட்டு, மிகுந்த நாழிகை விநாடிகளுடன், ஜெனனநாழிகை வரையில், எத்தனை ராசிகள் நடக்கின்றதென வறிந்து கொள்வதே அவன் பிறந்த லக்கினமாகும்.

உதாரணமாக, ஸ்ரீமுக௵ ஆவணி௴ 13-ஆம் தேதியன்று அம்மாத ராசி நாழிகையில், சென்றது போக இருப்பு நாழிகையைக் காணவேண்டுவதாயின், முன்சொல்லியபடி ஆவணி மாதத்திற்குரிய ராசியான சிங்கராசியின் நாழிகையான 5-விநாடி 15-யை அம்மாதத்தின் நாட்களாகிய 31-க்கு பாகிக்கவேண்டுமாயின், மேற்சொல்லிய நாழிகை விநாடிகளை மொத்த விநாடியாக்கி பங்கிட்டுத் தெரிந்துகொள்வது நலம். எப்படி எனில், விபரம் பின்வருமாறு. சிங்கராசியின் நாழிகை 5, விநாடி 15-க்கு நாழிகை ஒன்றுக்கு 60 விநாடியாகக் கணக்கிடுவோமாகில் 365 விநாடியாகும்.

இதனை அம்மாதத்திற்குறிய நாட்கள் 31-க்கு பாகிக்க நாள் ஒன்றுக்கு வினாடி $11\frac{3}{4}$ ஆகும்.

முன்சொன்ன ஆவணிமாதம் 13 ஆம் தேதியன்று இருப்பு நாழிகையைக்காண 12 ஆம் தேதிவரையில் நாழிகை 2, வினாடி 21 சென்றனபோக

மிகுந்துள்ள நாழிகை 2 வினாடி 54

ஆக மொத்தம் 5 ,, 15

இப்பால் அவரவர்கள், உதயராசிக்கேற்றவாறு பின் வரும் ராசிநாழிகை வினாடிகளைக் கணக்கிட்டுத் தெரிந்து கொள்வதே இலக்கினம் எனப்படும். ஷை தேதியில் இரவு 4 மணிக்குப் பிறந்ததாயின் அப்போது சூர்யோதய நாழிகை 55 ஆகும். அந்த தேதியில்,

சிங்கராசியின் இருப்பு நாழிகை		2	வினாடி	54
இப்பால் கன்னி	,,	5	,,	0
துலாம்	,,	5	,,	0
விருச்சிகம்	,,	5	,,	15
தனுசு	,,	5	,,	30
மகரம்	,,	5	,,	15
கும்பம்	,,	4	,,	45
மீனம்	,,	4	,,	15
மேஷம்	,,	4	,,	15
ரிஷபம்	,,	4	,,	45
மிதுனம்	,,	5	,,	15
கடகம்	,,	5	,,	30
ஆகமொத்தம் நாழிகை		57	,,	39
பிறந்த சூர்ய உதயாதி நாழிகை		55	,,	0

கடகராசியில் இருப்பு நாழிகை 2 வினாடி 39

ஷை ராசியில் சென்றது 2 ,, 51

இவையே ஜெனனராசி சென்றது போக இருப்பு நாழிகையும் வினாடியுமாம்.

காரகநிகண்டு

மேடம்

மேடராசியானது ஆட்டின் உருவமும், இடங்களில் காடெனவும், ஜெந்துவில் நாற்காலெனவும், இராசியில் தாதுவெனவும், திசையில் கீழ்திசை என்றும், நிறத்தில் சிவப்பும், ஜாதி அரசனென்றும், ஆண்ராசி என்றும், குஜனுக்குச் சொந்த வீடென்றும் கூறுவர்.

ரிடபம்

ரிடபம், பசுவுருவமும், வெண்மை நிறமெனவும், கிழக்கு திசை என்றும், வேளாளஜாதி எனவும், நாற்கால், மூலராசி எனவும், பெண் இராசி எனவும், நிலைத்த ராசி என்றும், இராக்காலத்தில் விழிக்கும் தன்மையுடைய தெனவும், சுக்ரன் வீடெனவும் கூறுவர்.

மிதுனம்

மிதுனம், ஆணும் பெண்ணும் உள்ள உருவமாய், வீணை தடி முதலியவைகளைக்கொண்டும், வணிகனென்னும் சாதியாய், கருப்பு நிறமும், நீச்ச சாதி எனவும், புதன் வீடெனவும், தென்கீழ் திசை எனவும் சிரவுதயராசி எனவும், பகலில் விழிக்கும் ராசி எனவும், புதன் வீடெனவும் கூறுவர்.

கடகம்

கடகம், நண்டுருவமாயும், பிராமண குலமென்றும், தெற்கு திக்கென்றும், பகலில் தூங்கும் தன்மையையுடைய தும், தாது ராசி எனவும், வெள்ளை நிறமெனவும், சந்திர னுக்கு சொந்த வீடென்றும் கூறுவர்.

சிங்கம்

சிங்கம், சிங்கத்தைப்போன்ற உருவமும், மலைகளிருக்கும் இடமென்றும், தெற் குதிசை என்றும்,சிவப்பு நிறமென வும், பகலில் விழிக்கும் தன்மையும், மூலராசி எனவும் நாற் கால் எனவும், சூரியனுக்குச்சொந்த வீடென்றும் கூறுவர்.

கன்னி

கன்னி, என்பது பெண் உருவத்துடன் கனலேந்தியும், வேளாளஜாதி என்றும், தன்மேற்கு திசை எனவும், இரு காலுடைய தெனவும், உபயராசி என்றும், கருப்பு நிற முடைய தென்றும், புதனுக்கு ஆக்ஷி வீடென்றும் கூறுவர்.

துலாம்

துலாம், என்பது தராசைப்போன்ற உறுவமுடைய தும், வணிகனைப்போன்றதும், இரண்டுகாலுடையதும், வெள்ளை நிறமெனவும், வணிகஜாதி எனவும், தாது ராசி எனவும், மேற்கு திசை என்றும், இரவில் தூங்கும் தன்மை யையுடையதென்றும், சுக்ரன் வீடென்றும் கூறுவர்.

விருக்ஷிகம்

விருக்ஷிகம், என்பது தேளுருவமாகவும், கிணறு போன்றதென்றும், பலகால் ராசி எனவும், பிராமண ஜாதி எனவும் மேற்கு திசை என்றும், பெண் எனவும், பகலில் விழிக்கும் தன்மையும் பசுமை நிறமும், குஜனுக்குச்சொந்த வீடென்றும் கூறுவர்.

தனுசு

தனுசு, என்பது குதிரையின்மேல் மனிதனிருக்கும் தன்மையும், அதன் கையில், வில்லை ஏந்தி நிற்கும் உருவ மும், தோட்டம் மன்னவன் சிவப்பு நிறம் இருகால்களை யுடையதும், ஆண் ஜீவன் உபயராசி குருவுக்குச் சொந்த வீடென்றும் கூறுவர்.

மகரம்

மகரம், என்பது சுறு எனவும் வடதிசையும், நதி முத லிய இடமும், வேளாளஜாதி எனவும், பறவை என்றும், பெண் எனவும், தாது வெனவும், கருப்பு நிறமென்றும், இரவில் விழிக்கும் தன்மையுடைய தெனவும், சனிக்குச் சொந்த வீடெனவும் கூறுவர்.

கும்பம்

கும்பம், என்பது புருடனாகவும், கையில், குடத்தை ஏந்தி நிற்கும் பூமி எனவும், வாணிபனென்றும், இருகால் களையுடைய தென்றும், வடதிசை என்றும், பச்சை நிறத் தையுடையதும் பகலில் விழிக்கும் தன்மையுடையதெனவும், சனிக்கு ஆக்ஷி வீடென்றும் கூறுவர்.

மீனம்

மீனம், என்பது மீனைப்போன்ற வாலும் தலையும் உடையதாயும், வட்டவடிவமாயும், விழுவதும் எழுவதும் உடையதாய், பிராமணசாதி என்றும், வடகிழக்கு திசை என்றும், ஜலம் என்றும் பெண் எனவும், பச்சை நிறத்தை யுடையதும், பகலில் விழிக்கும் தன்மையுடைய தெனவும், குருவுக்கு ஆக்ஷி வீடெனவும் கூறுவர்.

இதுவரையில் இராசிகளின் காரகங்களைக்கூறி வந்த படி ஒவ்வொருவரும், முன்சொல்லியபடி கணக்கிட்டுக்

கண்ட ராசியின் காரகங்களை யறிந்து, பின்பு இராசிகளின் திக்குநோக்கைத்தெரிந்து கொள்வது அவசியம். எப்படி எனில்,

ஆடுகீழ்ப்பாலை நோக்கிடும் சிங்க
 மருஞ்சிலைத்தான் றென்கீழ் நோக்குங்
கூடுமிடபந் தென்றிசை நோக்குங்
 கூர்கன்னி மகரந்தென் மேற்கு
காடுறநோக்கு மிதுனமேல் நோக்கு
 நற்கும் பந்துலாம் வடமேற்காம்
ஊடுறநோக்கு ஜெண்டு மீன் றேளு
 முகந்துகீழ் வடதிசை நோக்கும்

(இ-ள்.) மேடம் கீழ்திசையும், சிங்கமும் தனுசும் தென்கிழக்கும், ரிடபம் தெற்கு திசையும், கன்னியும் மகரமும் தென்மேற்கு திசையும், மிதுனம் மேல் பார்வையும், கும்பம் துலாம் வடமேற்காயும், கடகம் விருச்சிகம் மீனம் இவைகள் வடகிழக்கு திசையாகவும் நோக்கும் என்பனவாம்.

லக்கினஸ்புடம் செய்யும் விபரம்

உதயாதி நாழிகையை 4 ஆல் பெருக்கி அதனோடு மேஷமுதல் ஜெனன ராசி வரையில் எண்ணிய தொகையும், ஜெனன ராசி சரமாகில், சரம் 5 ஸ்த்திரம் 10 உபயம் 15 எனவும் ஸ்த்திரமாகில் ஸ்த்திரம் 10 உபயம் 15 எனக் கூட்டியும் உபயமாகில் உபயம் 15 எனக்கூட்டியும் அந்த மொத்த எண்களை 27 ஆல் வகுத்த மீதியை ஜெனன காலப் போது சுக்ல பக்ஷமாகில். அஸ்வனி முதலாகவும் கிருஷ்ண பக்ஷமாகில், அவிட்ட முதலாகவும், எண்ணிவரும் நக்ஷத்திரம், ஜெனன நக்ஷத்திரமாகவாவது அதற்கொன்பதாம் நக்ஷத்திரமாகவாவது, வரின் அவை உதயாதி நாழிகை சரி

எனவும் மாறுகவரில், முன்சொன்ன உதய நாழிகையை முன் பின்னாகவும் கழித்தும் கூட்டியும், மேற்சொன்னபடி பார்ப்பதேயாம்.

ஜெனன நக்ஷத்திரத்திற்கு 9-க்கு 9-ஆம் நக்ஷத்திரம்

அஸ்வனி	மகம்	மூலம்
பரணி	பூரம்	பூராடம்
கிருத்திகை	உத்திரம்	உத்திராடம்
ரோகணி	அஸ்தம்	திருவோணம்
மிருகசிரம்	சித்திரை	அவிட்டம்
திருவாதிரை	சுவாதி	சதயம்
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி
பூசம்	அனுஷம்	உத்திரட்டாதி
ஆயில்யம்	கேட்டை	ரேவதி

மேற்சொன்னபடி 9-க்கு 9 ஆம் நக்ஷத்திரங்கள் வரின் அந்த நாழிகையே சுத்தம் என்பதாகும். இப்பால் ராசிகள் 12-க்கும் சரம், ஸ்திரம், உபயமென்பவைகள் பின்வருமாறு அறிந்துகொள்ளவும்.

உபயம் 15	சரம் 5	ஸ்தரம் 10	உபயம் 15
ஸ்திரம் 10			சரம் 5
சரம் 5			ஸ்திரம் 10
உபயம் 15	ஸ்திரம் 10	சரம் 5	உபயம் 15

இப்பால் நக்ஷத்திரங்கள் 27 உள்ளன. அவைகளின் பெயரும் ஆத்யந்த நாழிகைகளும்

அஸ்வனி	65	சுவாதி	65
பரணி	56	விசாகம்	61
கிருத்திகை	59	அனுஷம்	60
உரோகணி	56	கேட்டை	62
மிருகசிரம்	56	மூலம்	63½
திருவாதிரை	56	பூராடம்	62
புனர்பூசம்	62	உத்திரம்	55
பூசம்	52	திருவோணம்	65½
ஆயில்யம்	56	அவிட்டம்	66½
மகம்	54	சதயம்	53½
பூரம்	53	பூரட்டாதி	66½
உத்திரம்	56	உத்திரட்டாதி	63½
அஸ்தம்	57	ரேவதி	64
சித்திரை	60		

ஷை நக்ஷத்திரங்களின் தியாஜியகாலம்

அஸ்வனிக்கு 50, பரணி, பூராடம், உத்திரட்டாதிக்கு 24, கிருத்திகை, இரேவதி, மகம், புனர்பூசத்திற்கு 30, உரோகணிக்கு 40, மிருகசிரம், ரிஷபம், சோதி, விசாகம், கேட்டைக்கும் 14, திருவாதிரைக்கு 21, உத்திராடம், பூசம், பூரம், சித்திரை, மூலத்திற்கு 21, திருவோணம், அவிட்டம், அனுஷத்திற்கு 10, அஸ்தத்திற்கு 22, உத்திரம், சதயத்திற்கும் 18, பூரட்டாதிக்கு 16, ஆயில்யத்திற்கு 32-க்கு மேல் அந்தந்த நக்ஷத்திரங்களுக்கு விஷ கடிகை சேர்ந்து மூன்றே முக்கால் நாழிகை நிற்குமென்றறிக.

இராசிகள் 12-லும் பிறந்தவன் பலன்களாவன,

மேடம்

மேட லக்கினத்தில் பிறந்தவன், ராஜாக்களால் பூசிக்கப் படுவோனும், சஞ்சாரமுடையவனும், சமதேகனும், எல்லோருக்கும் தெரிந்தவனும், விசாலமான நேத்திரங்களையுடையவனும், எக்காரியங்களிலும் சமர்த்துடையவனும், பயிர்த் தொழில் செய்பவோனும், சத்தியமுடையவனும், ஈயாதவனும், தந்தரோகமும் ஸ்தூலித்ததேகனும், ராஜாக்களிடத்தும் துர்ச்சனர்களிடத்தும் பிரியமுடையவனும் ஆவான்.

ரிடபம்

ரிடப லக்கினத்தில் பிறந்தவன், கணித வித்தையும் அதிக பொசிப்பாளனும், தேவதாபிரியனும், திடமனத்தனும், அன்னியதாரங்களின்மீது இச்சையுள்ளவனும், சவுக்யதேகனும், அலங்காரத் தோடிருப்பவனும், யாவரும் போற்றத்தக்க கண்டித வார்த்தைகளை யுடையவனும், சத்யமுடையவனும், அழகனும், தன்பந்து ஜெனப்பிரியனும், குழந்தைகளைப்போல் விளையாடுபவனும், புத்திரப்பேறுடையவனும் ஆவான்.

மிதுனம்

மிதுன லக்கினத்தில் பிறந்தவன், ஸ்திரீகளின் மோக வலையிலாழ்ந்தவனும், வெட்கமுடையவனும், மிகுந்த பச்சை நிறத்தின்மீது ஆசையுள்ளவனும், பிரிய வசனத்தைச் சொல்லுபவனும், சொர்ன பூஷணங்களையுடையவனும், வாத பித்த தேகமுடையவனும், வாசனை நிறைந்த புட்பங்களின் மேல் பிறியமுள்ளவனும், சாஸ்திரப் பிரியனும், அன்னியரை தூஷணிப்பவனும் ஆவான்.

கடகம்

கடக லக்கினத்தில் பிறந்தவன், சீதள பூமியில் வசிக்கப் பிரிய முடையவனும், நற்குலத்தினை யுடையவனும், சஞ்சலனும், நல்ல நேத்திரங்களை யுடையவனும், பல பொன்னணியுங்

களை யடைபவனும், சாத்ரீகனும், அடையாளம் ஒன்றுடைய வனும், அன்னிய களத்ர ஆசையுடையவனும், சம்பத்தும் அனேக தான்யவகைகளை யுடையவனும் ஆவான்.

சிங்கம்

சிங்க லக்கினத்தில் பிறந்தவன், சர்வ ஜனப்பிரியனும், நல்லபுத்தியை யுடையவனும், தெய்வ பிராமணபக்தியும் தைரிய மனத்தனும், வெகு பொகிப்பாளனும், சம்பத்துடைய வனும், வயிற்று வலியை யுடையவனும், முற்கோபியும், கை கால்களில் மச்ச ரேகையுமுடையவனும் ஆவான்.

கன்னி

கன்னி என்னுமிலக்கினத்தில் பிறந்தவன், கிலேச நெஞ்சுடையவனும், சீலமுடையவனும், தன்பந்துஜனப் பிரியனும், நல்லொழுக்கமும் சகல காரியங்களிலும் சமர்த்தனும், முதலில் தரித்திரத்தை யுடையவனும், பின் வயதில் தனமும் தான்யமும் உடையவனும், சொந்த இல்லத்தை யடைப பவனும் ஆவான்.

துலாம்

துலா லக்கினத்திற் பிறந்தவன், எல்லா ஜனங்களிடத்தும் பிரிய முடையவனும், உயர் குலத்தோனும், சம்பத்துடைய ராஜபூஜிதனும், அபிமானியும், களத்திர ஜனத்திரளுள்ள வனும், கள்ளரால் கொஞ்சம் பயமுடையவனும் ஆவானென்றும் கூறுக.

விருக்ஷிகம்

விருக்ஷிக லக்கினத்தில் பிறந்தவன், மாதுரு பிதுரு கர்மியும், அபிமானியும், விரதசீலனும், பாக்யமுடையவனும், படப்புடையவனும், விஷவார்த்தையாளனும், தனது நண்பர் களிடத்தும் சினமுள்ளவனும், தன்வகையரா ஜனங்களின் மேல் ஆசையுள்ளவனும், தேவர்களின் திருப்பணி செய்ப வனும் ஆவான்.

தனுசு

தனுசுலக்கினத்தில் பிறந்தவன், மாதுரு பக்தியுள்ள வனும், சன்மார்க்க முடையவனும், சாஸ்திரங்களைக் கற்றுணர்பவனும் வாலிபமுதல் ஐஸ்வரிய முடையனும், கெண்டாதி பிணிகளையுடையவனும், அபிமானமுடையவனும், வாசனை நிறைந்த புஷ்பங்களின்மேல் மிகுந்த ஆசையுடைய வனும் ஆவான்.

மகரம்

மகரமென்னுமிராசியிற் பிறந்தவன், மச்சரேகையுடைய வனும், கருத்த நிறமுடையவனும், தன் காரியங்களில், மெத்த சமார்த்தியத் தோடிருப்பவனும், கோபமுடையவனும், பெரிய கண்களையுடையவனும், அபமிருத்து தோஷங்களையுடையவனும், ஆவான்.

கும்பம்

கும்பமென்னு மிராசியில் பிறந்தவன், பித்தரோக முடையவனும், சிறுத்ததேகனும், தான்கொடுத்தகாரியத்தை எவ்விதத்திலும் முடிக்கும் சக்திவாய்ந்தவனும், கிராம அதிகாரியும், சகல காரியவல்லவனும், பலமுடையவனும், சவுக்ய தேகனும், காகப்பார்வையை யுடையவனும் ஆவான் என்று கூறுவர்.

மீனம்

மீனராசியிற் பிறந்தவன் சத்யமுடையவனும் அழகுடையவனும் மோகத்திலாழ்ந்தவனும், அழகுடைய நேத்ர முடையவனும், தனவந்தனும், மாமிசப்பிரியனும், வித்தையில் வல்லவனும், அபமிருத்து தோஷங்களை யுடையவனும், இந்த லக்கினத்தோனுக்கு நூறுவயதென்றும் சோதிட வல்லோர்கள் கூறுவர்.

இதுவரையில் ஒவ்வோர் இராசிகளுக்கும் ஏற்றவாறு பலனைச்சொல்லி வந்தோம். ஆயினும் இவை பொதுப் பலனேயாம். ஓர் ஜாதகத்தைப்பற்றி பேசவேண்டுமாயின் முக்யமானது பாவம் என்பனவாம். அவையாவன :—

ஜெனன லக்கின முதல் 12 பாவம் எனப்படும்.

1 ஆம் இடம்

1. உதயம்
2. கீர்த்தி
3. மூர்த்தி
4. சீவனம்
5. கல்வி
6. தலை
7. சொரூபம்
8. சவுக்கபம்
9. புசித்தல்
10. ஆயுள்
11. செல்வம்
12. நெற்றி
13. நினைப்பு
14. கௌரவம்

2 ஆம் இடம்

வாக்கு	சத்திரசாமரம்
நேத்ரம்	சற்பாத்திரம்
குடும்பம்	குரு உபதேசம்
மதம்	ஜாதி
வித்தை	சாஸ்திரம்
பாத்ரம்	உத்தேசம்
உத்தாரம்	நன்மை
உபகாரம்	

3 ஆம் இடம்.

கேள்வி	பலம்
துணைவர்	குணம்
மார்பு	பேச்சு
கர்ணபூஷணம்	சகோதிரம்
காது	சத்துரு
உண்ணல்	புசிக்கும் பாத்திரம்
யுத்தம்	

4 ஆம் இடம்.

மாதுரு	தன்சுகம்
க்ஷேத்திரம்	மேன்மையான வித்தை
வாகனம்	இராகம்
பந்துஜெனம்	மூக்கு
உணவின் ருசி	
தடாகம்	

5 ஆம் இடம்.

மந்திரம்	உந்தி
தெய்வம்	தன்மை
மனைவியின் சோரம்	குருக்கள்
புத்தி	நேத்திரரோகம்
சத்தியம்	ஒருகண்
போஜனம்	ஆதரிப்போர்

6 ஆம் இடம்.

சத்ரு	மாதுலன்
ஜாதி	இடுப்பு
வியாதி	பற்கள் வீழ்தல்

கடன்	சுயதேசம், அன்னியதேசம்
ரணம், காயம்	போகுதல்
ஆக்கினைக்குள்ளாதல்	பீடை
கடைவாய்	பொருள்சிலவு

7 ஆம் இடம்.

களத்திரம்	தேசாந்திரமேகுதல்
காமம்	தனம் சம்பாதித்தல்
சூது	போகம்
கழுத்து	அன்னிய ஸ்ரீதிரி விரோதம்
வாய்	மனைவியின் காமம்
குய்யம்	
ஆசை	

8 ஆம் இடம்.

மரணம்	விசனம்
பீடை	அனியாய சிலவு
தவறிவீழ்தல்	விஷத்துன்பம்
வியாதி	அபஜெயம்

9 ஆம் இடம்

பாக்யம்	தன்னுடன் சேர்ந்தோர்
வஸ்திரம்	பெருமை [உண்டோர்
தவம்	தருமம்
குரு	பிதுருபயம்
பிதுரு	மகிமை
இருதுடை	விரோதமல்லாதார்
	கால் முதல் வயிரு

10 ஆம் இடம்

கருமம்	அரசசேவை	உண்ணல்
ஆக்கினை	ஜெயம்	தேவதாபக்தி
முழங்கால்	கீர்த்தி	செய்யும் தொழில்
பிழைத்தல்	அபிமானம்	ஞானம், தானம், பானம்

11 ஆம் இடம்

லாபம்	
உபயதாரம்	கன்னம்
திரவியம்	மூத்தசகோதரம்
புதைக்கும் தனம்	சந்தோஷம்
புதயலெடுத்தல்	கோள் சொல்லாமை
செவிடு	மூத்தவன் நடக்கை
கணைக்கால்	எவ்விதத்தால் லாபம்வரும்

12 ஆம் இடம்.

சயனம்	அபாயம்
சிலவு	நயனம்
உலோபம்	அன்னியதேசத்தில்பிழைத்
படுக்கு மெத்தை	தானம் [தல்
தனக்குவரும் ஆபத்து	புண்ணியம்
தூங்கல்	செய்தொழில் விருத்தி
பாத்திரஸ்தானம்	

இவை ஜெனனராசி எந்தராசியாயினும் அந்த ராசியே. (1) இடம் என்றும் அது முதல் (2) தனம், (3) சகோதிரம், (4) அன்னை, (5) மாதுலன், (6) சத்துரு, (7) களத்திரம் (8) ஆயுள், (9) பிதுர், (10) கருமம், (11) லாபம், (12) விரயம் என்பனவாம். இதனைக்கொண்டும் அந்தந்த வீட்டிற்க்

காக்ஷி நாதனுக இருக்கும் கிரகங்கள் வண்மையானுமே அவரவர்கள் பலனையுரைபபது நலம். இதனை யறிந்து



சொல்லவேண்டுமாயின் முன் சொன்னபடி இலக்கிண நிச்சயம் செய்து பிறகு அன்றய வருஷமாத தேதிப்படியும் பஞ்சாங்க சாரப்படியும் அந்தந்த கிரகங்களிருக்கும் நக்ஷத்திர பாதசாரங்களை அரிந்து பிறகு அந்தந்த நக்ஷத்ராங்களுக் கேற்றவாறு இராசிகளில் கிறகங்களை அமைக்கும் விபரம் பின்வருமாரு.

நக்ஷத்திர தரிக்கால்.

அஸ்வனி, பரணி, கார்த்திகை முதற்கால் வரையில்	மேஷம்
கார்த்திகை பின் முக்காலும் உரோகணியும் மிருக சீரிடத்து முன் அரையும்	ரிஷபம்
மிருகசிரிடத்துப் பின்னரையும் திருவாதிரையும் புனர்பூசத்து முன் முக்காலும்	மிதுனம்
புனர்பூசத்துப் பிற்காலும் பூசமும், ஆயில்யமும்	கர்க்கடகம்
மகமும், பூரமும், உத்திரத்து முதற்கால் வரை வரையில்	சிங்கம்
உத்திரத்துப்பின் முக்காலும் அஸ்த்தம் சித்திரை முன்அரையும்	கன்னி
சித்திரை பின்னரையும் சுவாதியும், விசாகத்து முன் முக்காலும்	துலாம்
விசாகத்துப்பிற்காலும் அனுஷமும், கேட்டையும்	விருக்ஷிகம்
மூலமும், பூராடமும், உத்திராடத்து முதற்கால் வரையில்	தனுசு
உத்திராடத்துபின் முக்காலும் திருவோணமும் அவ்விடத்து முன்னமையும்	மகரம்
அவிட்டத்துப் பின்னமையும் சதயம், பூரட்டாதி முன்முக்காலும்	கும்பம்
பூரட்டாதி பிர்க்காலும் உத்திரட்டாதியும், இரேவதியும்	மீனம்

இவ்வாறு நக்ஷத்திரத்திற்குத் தக்கபடி கிரகங்களை யமைத்துப்பின் அந்தந்த ராசிகளுக்குத்தக்க ஆக்ஷிஉச்சம், நீச்சம், பகை, சமம் முதலியவைகளையறிந்து அவரவர்களுக் கேற்றவாரு பலன் சொல்லவேண்டும்.

நவகிரகங்களின் ஆக்ஷி, உச்சம், நீச்சம் பகை முதலியன.

மேஷம்		கடகம்	
சூரியன்	உச்சம்	சூரியன்	பகை
சந்திரன்	பகை	சந்திரன்	ஆக்ஷி
குஜன்	ஆக்ஷி	குஜன்	நீச்சம்
புதன்	நட்ப்பு	புதன்	நட்ப்பு
குரு	பகை	குரு	உச்சம்
சுக்கிரன்	நட்ப்பு	சுக்கிரன்	பகை
சனி	நீச்சம்	சனி	பகை
இராகு	பகை	இராகு	பகை
கேது	பகை	கேது	பகை

ரிஷபம்		சிங்ரம்	
சூரியன்	பகை	சூரியன்	ஆக்ஷி
சந்திரன்	உச்சம்	சந்திரன்	பகை
குஜன்	நட்ப்பு	குஜன்	பகை
புத்ன்	நட்ப்பு	புதன்	பகை
குரு	நட்ப்பு	குரு	உறவு
சுக்கிரன்	ஆக்ஷி	சுக்கிரன்	பகை
சனி	நட்ப்பு	சனி	பகை
இராகு	நீச்சம்	இராகு	பகை
கேது	நீச்சம்	கேது	பகை

மிதுனம்		கன்னி	
சூரியன்	பகை	சூரியன்	பகை
சந்திரன்	நட்ப்பு	சந்திரன்	உறவு
குஜன்	நட்ப்பு	குஜன்	உறவு
புதன்	ஆக்ஷி	புதன்	ஆக்ஷி உச்சம்
குரு	நட்ப்பு	குரு	உறவு
சுக்கிரன்	நட்ப்பு	சுக்கிரன்	நீச்சம்
சனி	நட்ப்பு	சனி	உறவு
இராகு	நட்ப்பு	இராகு	உறவு
கேது	நட்ப்பு	கேது	உறவு

துலாம்		மகரம்	
சூரியன்	நீச்சம்	சூரியன்	பகை
சந்திரன்	பகை	சந்திரன்	பகை
குஜன்	உறவு	குஜன்	உச்சம்
புதன்	உறவு	புதன்	உறவு
குரு	உறவு	குரு	நீச்சம
சுக்கிரன்	ஆக்ஷி	சுக்கிரன்	உறவு
சனி	உச்சம்	சனி	ஆக்ஷி
இராகு	உறவு	இராகு	உறவு
கேது	உறவு	கேது	வுறவு

விருக்ஷிகம்		கும்பம்	
சூரியன்	பகை	சூரியன்	உறவு
சந்திரன்	நீச்சம்	சந்திரன்	பகை
குஜன்	ஆக்ஷி	குஜன்	பகை
புதன்	நட்ப்பு	புதன்	உறவு
குரு	பகை	குரு	உறவு
சுக்கிரன்	நட்ப்பு	சுக்கிரன்	உறவு
சனி	பகை	சனி	ஆக்ஷி
இராகு	உச்சம்	இராகு	பகை
கேது	உச்சம்	கேது	பகை

தனுசு		மீனம்	
சூரியன்	உறவு	சூரியன்	உறவு
சந்திரன்	உறவு	சந்திரன்	உறவு
குஜன்	பகை	குஜன்	பகை
புதன்	உறவு	புதன்	நீச்சம்
குரு	ஆக்ஷி	குரு	ஆக்ஷி
சுக்கிரன்	உறவு	சுக்கிரன்	உச்சம்
சனி	உறவு	சனி	உறவு
கேது	உறவு	இராகு	உறவு
இராகு	உறவு	கேது	உறவு

ஒவ்வோர் கிரகங்களுக்கும் ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகை முதலியவைகளை யறிந்த பிறகே ஜாதகப்பலன் சொல்ல வேண்டும்.

நவகிறக பார்வை.

இரவிக்கும் சசிக்கும் புகர்புதர்க்கும்
ராகுகேதுக்கும் ஏழேயாம்
கருணேதீயர் நான்குஏழு
எட்டுமாம்
கவிக்கும்பொன்னன் ஐந்தேழொன்
பதாம்
குவிக்கும்சனிக்கும் மூன்றேழு
பத்துமாம்

சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், இராகு, கேது இவர்கள் 7 ஆம் இராசியையே நோக்குவர்.

குஜன் நான்கு ஏழு எட்டு இம்மூன்று ராசியையும் நோக்குவான். குரு ஐந்து, ஏழு, ஒன்பது இம்மூன்று ராசியையும் நோக்குவான். சனி, மூன்று, ஏழுபத்து இம் மூன்று ராசியையும் நோக்குவான் என்பதாம்.

நோக்கினளவுகள்.

தோற்றுமதியும் பொன்னவனுமெதிராக நோக்கும்
சூரியனும் செவ்வாயும் கடைக்கண்ணால் நோக்கும்
சாற்றியமால் வெள்ளிதலேக்கவிழ்ந்து நோக்கும்
சனி பாம்புமொரு கண்ணாற்றான் பார்க்குமென்பர்
போற்றிய ரவிபுகர் செவ்வாயிராகு சனிதிங்கள்
புதன்பொன்னேன் கிழக்குமுதல் வரிசையாய் பார்க்
கும்.

என்ற சாதக சிந்தாமணியின் 122 ஆம் செய்யுளின், படி மேற்சொல்லியபடி பார்வையுண்டாயினும் சந்திரன், குரு இவர்கள் எதிராக நோக்கிவரென்றும் புதனும், சுக்கிரனும் கீழ்ப்பார்வை யுள்ளவரென்றும் சூரியன், குஜன் இவர்கள் கடைக்கண்ணல் நோக்குவரென்றும் சனி, இராகு, கேது இவர்கள் ஒரு கண்ணால் பார்ப்பாரென்றும் கூறுவர்.

இப்பால் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் இவர்கள் முழு நோக்கில் பலமுடையவராகவும், அங்காரகன் முக்கால் பார்வையில் பலமுடையவரெனவும் சனி அரைக்கால் பலத்தையுடைய வனெனவும், ராகு, குரு இவர்களும் அரைக்கால் நோக்கில் பலமுடையவர்களென்றே சாஸ்திரங்கள் கூறும்.

வெருவுறுசிங்கம் கன்னிகோற்சான் மீன்
விருக்ஷிக மிரவியின்கூறும்
மருண்மறிவிடையாழ் கடகமான் சிலேயில்
வாறு நற்சந்திரன் கூறும்.

என்ற வாக்கியப்படி சிங்கம், கன்னி, துலாம், கும்பம் மீனம், விருக்ஷிகம் இவை சூரியன் கூறெனவும். மேடம் கடகம், தனுசு, ரிடபம், மிதுனம், மகரம் இவைச் சந்திரன் கூறெனவும் கண்டு கொள்ளுக.

ஒவ்வொருவரும் பெற்ற மண்டலங்கள் அறிவது

இராசிகளில் முதன்மைபான மேஷம் முதல் ஜென்ன ராசி எதுவோ அந்த ராசிவரையில் எண்ணிக்கூட்டி எத்தனையாவது ராசியாக வருகிறதோ, அதனை லக்கின முதல் கிரகங்களிருக்கும் ராசிவரையில் எண்ணி அவ்விரண்டெண்களால் பெருக்கி 27 ஆல் வகுத்து நின்ற சேடமே மண்டலமெனப்படும்.

உராணமாக

சு பு	கு		
ரா சந்	இராசி		
சனி			அங் கே, கு
ல			

மேடம் முதல் ஜென்ன ராசியான தனுசு	9
லக்கின முதல் சூரியனின்ற ராசி	5
இவ்விரண்டையும் பெருக்க	45
இதனை 27 ஆல் வகுத்த மிச்சம்	18

இவை சூரியனுக்காம்

மேஷமுதல் ஜென்னராசி	9
லக்கினமுதல் சந்திரனின்ற ராசி	3
இவ்விரண்டையும் பெருக்க	27
இதனை 27 ஆல் வகுக்க மிச்சமில்லையாதலால்	
சந்திரனுக்கு	27
மேஷமுதல் ஜென்னராசி	9
ஜென்னராசி முதல் குஜன் நின்ற ராசி	9

இவ்விரண்டையும் பெருக்க 81 இதனை 27 ஆல் வகுக்க மிச்சமில்லை யாதலால் குஜனுக்கும் 27 இவ்விதமே மற்றுமுள்ள புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது இவர்களுக்கும் காண்க. கண்ட பிறகு மிச்ச எண்கள்,

எத்தனை வருகின்றனவோ அதற்கு கீழ்கண்டவாறு மண்டலமறிக :—

தேவர் மண்டலம்.	நறமண்டலம்.	அரக்கர் மண்டலம்.
1 அஸ்வனி	2 பரணி	3 கார்த்திகை
5 மிருகசீரம்	4 உரோகணி	9 ஆயில்யம்
7 புனர்பூசம்	6 திருவாதிரை	10 மகம்
8 பூசம்	11 பூரம்	14 சித்திரை
13 அஸ்தம்	12 உத்திரம்	16 விசாகம்
15 சோதி	20 பூராடம்	18 கேட்டை
17 அனுஷம்	21 உத்திராடம்	19 மூலம்
22 திருவோணம்	25 பூரட்டாதி	23 அவிட்டம்
27 ரேவதி	26 உத்ராட்டாதி	24 சதயம்

தேவர்மண்டலத்தின் பலன்.

உத்தம ஆ சொல் ஓங்குந்தேவர்கணம்
ஓதும்வித்தை பிறபலவாகனம்
வெற்றியாம் பொருள் வேந்தர் விரும்பிடும்
மோரைபூமியில் மேவும் வெகுதனம்
பத்தியாக நற்புதல் வரைத்தந்திடும்
பாரில்பாக்கியம் பந்து விரும்பிடும்
சத்திபாகர் வீமேசுரராகிய
சங்கரன் உரைசெய்த பலன்களே.

நறமண்டலப் பலன்.

பலஞ்சொலில் நறமண்டலத்தான் பலன்
பணிகள் பூஷணம் பாக்கியம் சேர்ந்திடும்

தலங்கள் பெற்றிடும் தற்மபூஜாபலன்
தானங்கள் அன்னதானமு மோங்கிடும்
புலன்கள் பெற்றிடும் பூமிபிரபலம்
பூமகள் சேர்வளாயிசு விருத்தியாம்
நலங்களைச் செய்யும் நாற்றிசையின் பலன்
நாடுவீமேச நாதரமைத்ததே.

அரக்கர்மண்டலப் பலன்.

அரக்கர் மண்டலமான திசைகளில்
அந்திர காலச்சக்கிரம் வந்திடில்
பெருக்கும்புத்திரர் பெண்ணு நட்டமாம்
பித்தரோகமும்பேய் பிடித்தாட்டிடும்
மறிக்குமாதர்கள்மக்கள் பிதாவுடன்
மாறகப்பிணி சோரமதாகிடும்
உறுக்கவீமேசர்தானை வணங்கியே
ஒங்குமிப்படி யுற்றபலன்சொலே

இவை வெள்ளைச்சொற்களாய் இருப்பதால் உரை எழுதவில்லை.

கிரகசமய விபரம்.

முன் கிரகமண்டலங்களுக் கென்றேற்பட்ட எண்களை அவரவர்கள் திசைவருடமெவ்வளவோ, அவ்வெண்களால் பெருக்கி மறுபடியும், 27 ஆல் வகுத்தமிச்சமே சமயமெனப் படும். எப்படியெனில் முன்பு சூரியனுக்கு மண்டல எண் 18 ஆகும் அதனை அவன் திசையாகிய வருடம் 6 ஆல் பெருக்க 108 ஆகும்.

இதனை 27 ஆல் வகுக்கமிச்சமில்லை யாதலால் சூரிய னுக்கு 27 எனப்படும். சந்திரனுக்கு மண்டல எண் 27 அதனை அவன் திசை வருடமாகிய 10 ஆல் பெருக்க 270

இதனை 27 ஆல் வகுக்க மிச்சம் இல்லையாதலால் சந்திர னுக்கும் 27 இவ்வாரே மற்றய கிரகங்களுக்கும் கணக்கிட்டு கீழ்கண்டவாறு சமயமரியவும்.

1	ஸ்நானம்	15	கோபம்
2	அலங்காரம்	16	தாம்பூலம்
3	விபூதிசந்தனம்	17	ராஜாங்கம்
4	ஜெபம்	18	கிரீடம்
5	சிவபூஜை	19	ஜலபானம்
6	ஔபாசனம்	20	ஆலிங்கனம்
7	விஷ்ணுபூஜை	21	சயனம்
8	பிராமணபூஜை	22	அமுதபானம்
9	நமஸ்காரம்	23	மதனலங்காரம்
10	பிரதக்ஷணம்	24	லீலை
11	வைசுவதேயம்	25	மத்யபானம்
12	அதிதிபூஜை	26	நித்திரை
13	போஜனம்	27	ரத்னபரிக்ஷை
14	புராணபிரங்சகம்		

ஹோரா லக்கினமெடுக்கும் விபரம்.

திண்டிறற் கதிரோனுதயமே முதலாய்
ஜென்ம லங்கினமட்டு மெண்ணி
கண்டநாழிகையை இரண்ட ரையதனிற்
கழித்ததேயோரை லக்கினமாம்
எண்டிசை யுதயமோசை யேயாகி
லங்கின முதலதா யெண்ணல்
அண்டிய உதயமுக்குமமாகி
லப்பிர தக்ஷணமாமே.

சூர்யோதயமுதல் ஜெனன லக்கினம் அல்லது நாழிகை வரையில் எண்ணிக்கண்ட நாழிகையை இரண்டரை இரண்டரையாக கழித்து, உதயராசிமுதல் எண்ணிக் கண்டதே ஓரை லக்கினமாகும்.

இராசிகள் விபரம்.

ஓர் குழந்தை ஜெனனமான உடன் லக்கினஸ்புடம்



பாலாஷ்டம் விபரம்.

செய்து கிரகங்களை அடைத்தவுடன் லக்கினாதிபதியார் என் றும், அவன் சுபனா அல்லது அசுபனாவென்றும் ஷ இலக்

கினாதிபதி ஜெனன லக்கினத்திற்கு எத்தனை யாவது ராசியி லிருக்கிறான் யாரால் பார்க்கப்பட்டான். எவருடன் கூடி இருக்கிறான். எவர்வீட்டிலிருக்கிறான். அவ்வீட்டில் ஆக்ஷியா உச்சமா நீச்சமா பகையா உறவாவென்று ஆலோசிக்கவேண் டும். பொதுவாக சூரியன், குஜன், இராகு, கேது, சனி இவர் கள்பாவர்கள் எனவும், சந்திரன், புதன், சுக்கிரன், குரு இவர்கள் சுபர்களெனவும், கூறுவர் மகரராசியில் ஜெனன மாகில் அவ்வீட்டோன் சனியாகையால் அந்த லக்கினத் திற்கு அவன் கொடியவனாகான், மேடலக்கினமாக ஜெனிக்க் அவ்வீட்டிற்குடையவன், குஜனாகையால் அந்த லக்கினத் திற்கு அவன் கொடியவனாகான். ஆயினும் அவர்கள் சேர்க் கையில் பார்வை முதலியவைகளால் கொடியவனாயினும் ஆவார். எப்படி எனில் பிரிதீவு, அப்பு, தேயு, வாயு, ஆகாய மென்னும் பஞ்சபூதங்களுக்கு ஆதாரமாய் பிருதீவு குரு வென்றும் அப்பு சுக்கிரனென்றும் தேயு குஜனென்னும், வாயு புதனென்றும், ஆகாயம் சனி எனவும் கொண்டு, உயிருக்குக்கர்த்தா சூரியனென்றும், உடலுக்குக்கர்த்தா சந்திரனென்றும் நிருத்தி மேற்சொன்ன பஞ்சபூதங்களின் சப்தமும் சனியினிடம், அதாவது ஆகாயத்தினிடமாய் செல்லவும், இரசம் சுக்கிரனிடம் (அதாவது) அப்புவினிட மாய்ச்செல்லவும், ரூபம் குஜனிடமாய் (அதாவது) தேயுவி னிடமாய்ச்செல்லவும், கந்தம் குருவினிடமாய் பிருதிவினிட மாய்ச்செல்லவும், இப்படித்தத்துவங்களை யமைத்து சூஸ் திரக்கயிற்றால் நவகிரகங்களைச் சரியாய் நிருத்தி நல்வினையும் சுவர்க்காதிமோக்ஷங்கள் சுபர்களாலும் தீவினை வருமை வாதை நறகம் முதலியவைகள் பாவகிரகங்களாலும். உண் டாகும் என்று கூறியபடி சுபர்கள் எனவும் அசுபர்களென வும் அறிந்தே மானிடர்களுக்கு வருகால் நல்வினைத் தீவினைப்

பலனும் ஆயுள் முதலியவைகளையும் கூறுவது அவசியமாகை யால் ஓர் குழந்தைப்பிறந்தயுடன் உடன் சகடைபால அரிஷ்டம் முதலியவைகளை நன்கு சோதித்தே பின்வரும்பலனைச் சொல்வது நலமாகையால், இங்கு பாலரிஷ்ட விபரங்களைக் கூறுவோம் பால அரிஷ்டம் என்பது குழந்தையில் கெண்டாந்தகாலம் எனபொருள்படும்.

மந்தன் சேயிருவர்கூடி யிருந்திடத்ததுவும் தீது
அந்ததெதிரிட்டுமாகா தருதியாய் தீம்புண்டாகும்

என்ற மணிகண்ட கேரள சோதிடத்தில் இரண்டாம் செய்யுளின் வாக்கியப்படி சனியும் குஜனும் கூடி ஓர் ராசியிலிருந்தாலும் தீது. அல்லது ஒருவர்க்கெதிராக அதாவது 7-க்கு 7 ஆக இருந்தாலும், ஒருவர்க்கொருவர் பார்வையுண்டாகையால் கட்டாயம் தீம்பு என்றனர்.

இவை பாலரிஷ்டதோஷம் என்பதாம், இவை யொரு புறமிருக்க சனியோடு குஜன் கூடினால் தீம்பு என்பதால் சனிக்கும் குஜனுக்கும் பகையுண்டு என ஏற்படுகிறது. (1) சனி ஆயுழ்காரகன் (2) ஜெனன ராசி மகரமாகில் லக்கினத்திற்குடையோனும் தனம் என்கிற இரண்டாம் ஸ்தானத்துக்குடையவனும் ஆவான், லக்கினாதிபதியே சனியாய் எந்த ராசியில் அவன் மேற்சொன்னபடி குஜனுடன் கூடி இருந்தால் அவனுக்கு எவ்விதமாய் ஆயுள் சொல்வது என்பதை நான் சொல்லாமலே விளங்கும் நவகோட்களில் யார் பெரியவர் அல்லது பலமுடையவர் என்று அறிதல்வேண்டும். அதைச்சோதிக்குமிடத்து புதன், சனி, இராகு, இவர்களின் தோஷங்களை குஜனே தீப்பவன் என சாதக சிந்தாமணியில் கூறியுள்ளார் ஆயினும் கிரகங்கள் ஒருவருக்கொருவர் பெரியவரேயாகும், இவை அவர்களிருக்கும் இராயிடம் சேர்க்கை பார்வை இவைகளைப் பொருத்ததாகும்.

ஆறுபன்னிறண்டிற் செவ்வாயிருந்திடிற் சிசுவரிட்டம்
வீறுளபத்திற் செவ்வாய்வெண்மதி கூடிநிற்கின்
மாறியவியத்திற் செவ்வாய் வருங்காலமகவுக்காகா
கூறியநற்கோணோக்கின் கொடிய நோய்வந்துதீரும்

என்ற வாக்கியப்படி 6, 12-ல் குஜன் நிற்கில் பிறந்த குழவிக்கரிட்டமெனவும். 10ஆம் ராசியில் குஜனுடன் சந்திரன் கூடி இருந்து தினசரிகோசாரப்படி 12 ஆம் ராசியில் குஜன் $1\frac{1}{2}$ மாதபிறவேச காலம் அக்குழந்தைக்கு ஆகாது எனவும். நற்கோட்களென்னும், குரு, புதன், சுக்கிரன், இவர்கள் பார்ப்பறேல் மேற்சொன்ன அரிட்டத் தைத்தவிர்த்து கொடிய வியாதி நேர்ந்து பரிகாரமாகும், என்பதனாலறிக. இவ்வாறு பாலரிஷ்டம் நேர்ந்தாலும் அதனைத்தீர்க்க வல்லார் யார் அல்லது தீரும் தீராதெனக்கண்டு கூறுவதோடு அதன் வயதையும் கூறவேண்டுவது அவசியம். மிதுனம், கன்னி, துலாம், கும்பம், இவற்றில் சந்திரனிருந்து அங்காரகன், சூரியன், சனி, இவர்கள் பார்ப்பார்களேயானாலும் சந்திரன் நின்ற ராசிக்குடையவன் மீனராசியிலிருந்தாலும் அந்த குழவிக்கறிட்டமாகும்.

சூரியனுடன் இராகுவும், சனியும், கூடில் பிதாவுக்கும் பிதுர் வங்கிசத்தாருக்கும் தோஷமுண்டு அவை இந்த ஜாதகன் ஜெனித்த 9 ஆண்டுகளுக்குள் கொல்லுமெனவும் கூறிவர்.

சுக்கிரன் சனியோடு, சூரியன் வந்துசேர அவர்கள் நின்ற இராசிக்கு 7 ஆம் ராசியில் புதனிருக்க தாயைப் பெற்ற மாமனும் மாதுரு வம்சத்தாரும் ஜெனித்த 3 வருடங்களுக்குள் இறந்து போவார்.

குருவும் சூரியனும் கூடிநின்ற ராசிக்கு 7 ஆம் ராசியில் செவ்வாய் நிற்கில் தீம்புண்டு இல்லையேல் புத்திர நாசமுண்

டாக்கும் ஷ்டி கிரகங்களுடன் சந்திரனும் கூடி இருக்கில் அவன் தாய்க்கும் 7 வருடங்களுக்குள் தீம்புண்டு.

புதனும், சுக்கிரனும் ஜெனன ராசிக்கு 3 ஆம் ராசியிலிருந்து நற்கோட்களாவது, சுபகோட்களாவது, பாராமலிருப்பாராகில் அவன் குலமே நாசமாய்போம் மனேயும் பாழாய்ப்போம்.

குஜனும் சனியும் கூடி ஓர் ராசியிலிருக்க அவர்கள் நின்ற ராசிக்கு 7 ஆம் ராசியில் சூரியனிருக்க அவன் பிறந்த 1 வருடத்தில் தீம்புண்டு.

ஜெனன ராசிக்கு 3 ஆம் ராசியில் குஜனிருக்க 9 ஆம் ராசியில் சனி இருக்க அவனுடன் பிறந்த ஜேஷ்ட சகோதரனுக்குக் கட்டாயம் கெண்டத்தைக்காட்டும் நான்கு மாதத்தில் பிதாவுக்கு கண்டமும் பகை கிரகங்கள் பார்க்கில் 5 வருடத்தில் தீம்பு விளேயும்.

இவ்வாறு பாலாரிட்டங்களேச்சோதித்து பிறகு அவனவன் யோகங்களேயும் ஆயுள் விபரங்களேயும் கூறுவது நலம் ஜெனன ராசி எந்த ராசியாளுலும் அந்த லக்கினமே 1 ஆம் இடமெனவும் கீர்த்தி மூர்த்தி எனவும் கூறுவதாவது முதல் கீழ்கண்டவாறு வர்க்கமரிந்து பலனேக்கூறுக.

கிரகங்களின் குலம் அறியும் விபரம்.

இரவியும் குஜனும், க்ஷத்திரிய ரெனவும் குருவும், மதியும் பிராமணனும் புதன் வைசியனும், இராகுவும், சுக்கிரனும், சூத்திரரெனவும் சனியும், கேதுவும், கீழ்சாதி எனவும் கொள்க.

இவை ஒவ்வொரு கிரகங்களுக்குறிய க்ஷேத்திர விபரங்களாகும்.



காதம் அறியவேண்டுவது.

தீரவே வீமநாதரைத் தேறமிற்
றினகர னெட்டனலேழ் பொன் னென்பதே
காரிநாலேந்து மாரிபன்னுரதாங்
காணுமிந்துவுக் கொன்றதாங்கமே
தாரமானொரு தாறனியே மூகோல்
சாடியாடளி பெட்டதாங்தையவில்
கூறமே பதினென்று தேணுங்குமீன்
கோலமா மிருபத்தேழு கொண்டதே.

புதனுக்கும் இரவிக்கும் 8 காதமும், குஜனுக்கு 7 காதமும்; குருவுக்கு 9 காதமும், சனிக்கு 10 காதமும், சுக்கிரனுக்கு 16 காதமும், சந்திரனுக்கு 1 காதமும், மிதுனம், ரிஷபத்துக்கு 6, காதமும் சிப்பத்துக்கு 7 காதமும் துலாம், கும்பம், மேஷம், கடகம்,இவைகளுக்கு 8 காதமும் கன்னி, தனுசுக்கு 11 காதமும், விருச்சிகத்திற்கு 4 காதமும், மீனத்திற்கு 27 காதமும், என்றறிவாயாக.

திதிகளின் பெயர்.



அமாவாசை என்பது பூரண இருள் மூடியகாலமாகும் சூரியன் மாதமொன்றுக்கு ஓர் ராசியிலிருந்து மறு ராசிக்கு மாறவேண்டும், சந்திரனோ, நாள் 2 நாழிகை 15-க்கு ஒரு முறை ஒவ்வோர் இராசிக்குச் செல்லவேண்டும். இதனாலே பிறதமை துதியை திருதியை சவுத்தி பஞ்சமி, சஷ்டி சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்தசி, பூரணிமை எனவும் கூறுவதுண்டு அமாவாசை திதி பிரந்தது முதல் பிரதமை வரையினும், அமாவாசைக்கு முன் திதியான சதுர்த்தசி 15 பாகை முடிந்த உடன் 16 ஆம் பாகையிலிருந்தே சூரியன் எந்த ராசியானாலும் அந்த ராசியில், சந்திரன் வந்து சேர்வான் சந்திரன் சேர்ந்து இரண்டேகால் நாள் கழிந்ததும், முறையே மற்றுமுள்ள 11 இராசிகளிலும் சஞ்சரிக்க வேண்டுமாகையால் ஒவ்வோர் ராசியாய் மாறிவரும் காலமே திதிகள் எனவழங்கப்படுகின்றன. இவ்வாறு 15 திதிகள் முடிவடைந்தால், ஓர் பக்ஷம் எனப்படும். சூரியனிருந்த ராசியைவிட்டு மறுராசியில் சந்திரன் பிரவேசித்தகாலம், இவ்விருவருக்கும்மத்தியில் 30 டிக்ரியள விருக்கும், ககோளத்தை 360 பாகை அல்லது டிக்ரி எனவும் இராசி ஒன்றுக்கு 30 பாகை எனவும் கூறுவது சாஸ்திரசித்தம், சூரியனுடன் எந்த தேதியில் எந்த நாழிகையில் சந்திரன் சேர்ந்தானோ அதையே அமாவாசை எனப்படும். இவ்வாறு ஒவ்வொரு ராசியாய் கடந்து சூரியனிருந்த ராசிக்கு 7 ஆம் ராசியில் சந்திரன் பிரவேசித்தகாலம் பூரணிமையாகும், அப்போது சூரியனுக்கும் சந்திரனுக்கும் 180 டிக்ரிதூரமிருக்கும் சூரியனிடனிருந்து மறுராசியில் அதாவது 30 டிக்ரியளவில் வந்த பிறகே நம்மோர்க்குச் சந்திரன் ஓர்வில் போன்றுகாணப்படும். அதனைபோ 3 ஆம் பிரைச்சந்திரன்

எனப்படும். 180 டிக்ரியைக்கடந்து அதாவது 7 ஆம் ராசியில் பிரவேசித்ததிலிருந்து டிக்ரி அதிகப்பட தன்கலைகளும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டேவரும். அதுமுதல் இரண்டாம் பக்ஷமும் கிருஷ்ண பக்ஷமுமென்கிற பிரதமை துதிகை, திருதியை, சவுத்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்தசி, அமாவாசைஎன மறுபடியும் உண்டாகிறது. அமாவாசை முதல் பூரணிமை வரைக்கும். பூர்வபக்ஷமெனவும் பூரணிமை முதல் அமாவாசையை அடைகிறவரையில், கிருஷ்ணபக்ஷமெனவும், இவ்வாறு பக்ஷங்கள் இரண்டு கொண்டதே ஓர் மாதமென்றும் கூறுவர் உத்திராயண தக்ஷணயன காலபேதத்தால், சில நாழிகைகள் முன்பின்னாகவும், மாறுவதுண்டு அமாவாசையில் ஓர் குழவிகள் ஜெனிக்குமாயின், அதற்கு சில குற்றங்கள் கூறுவதுண்டு அதே அமாவாசையில் பிறந்த குழவிகள் பூரண அயிஸ்வரியும் சம்பத்தும் உடையவர்களாகவும் இருப்பதுண்டு இதனைப்பின் வரும்யோகபடலத்தால் காணலாம்.

நவாங்கிசம் அறியும் விபரம்.

ஆய்ந்த நவாங்கிசந்தன்னை யறியும்வகைகூறில்
அச்சுவினிபறணி கார்த்திகை மூன்றுநாளுக்
கேயகார்பன்னிரண்டு மேடமுதன் மீன
மீறுகக்கா லொன்றுக்கோர நாசமாகும்
தூயவிருபத்தேழு நட்சத்திரந்தன்னைத்
தொகுப்பாகமும் மூன்றாய்ப்பிரித் தடைவிற்பார்க்கில்
வேயனையதோண்மாதே சொன்னநவாங்கிசந்தான்
விளங்கிடுமென்றே யுரைத்தார்மேற் கணிதநூலோர்.

பெருமையையுடைய நவாங்கிசம் அறியும் வகையை கூறவேண்டுவதெனில், அஸ்வனி, பரணி, கிருத்திகை, என்னும் 3 நக்ஷத்திரங்களுக்கும், 12 காற்களெனவும் மேற்சொன்ன பனிரண்டு காற்களையும் 12 ராசிகளாக மேடமுதல் மீனம்வரையிலெனவும், மறுபடியும் உரோகணி, மிருகசிரீஷபம், திருவாதிரை புனர்பூசம், எனவரும் 3 நக்ஷத்திரங்களுக்கும் 12 கால்களெனவும், அதையும் மேடமுதல் மீனவரை 12 இராசியாகவும், இவ்வாரே 27 நக்ஷத்திரங்களையும் மும்மூன்று நக்ஷத்திரங்களாகக்கணக்கிட்டு, மூன்று நக்ஷத்திரங்களுக்கும் 12 ராசி எனவும் கொண்டு பார்ப்போமாகில் நவாங்கிசமென்பதை யறியலாம்.

(இவை சாதக சிந்தாமணியின் 101 ஆம் செய்யுள்) மேலேசொன்ன நவாங்கிச ராசிக்குடைய கிரகமெதுவோ அதையே நவாங்கிசாதிபதி எனவும் கூறுவதுண்டு இராகு கேதுக்கள் நவாங்கிசாதிபதியாக வருவதில்லை ஆதலால் அவர்களுக்கு பலாபலனும் கிடையாது. இந்த அங்கிசமென்பதை ஜெனகாலமுதல் அந்தியவரையிலும் திசைபுக்தி அந்திர சூக்ஷமபலாபலன் சொல்லவும். உபயோக மாகும் எப்படி எனில்,

மிடற்றிடத்தாய் பதியாக மேவிலிது விவனு
மிதற்குள்காறகனும் வெகுபலமாய் மென்மேலும்
நடத்துவதுஞ்சுபமாகி நல்லவர்பெற்றிலகி
நட்புளகேந்திர கோணினண்ணி மனைநாதற்
குடற்கதனுக்கெட்டுளஞ் சுத்தமுமாகியிதனுக்
கொளியாமற் றேவவாக்கந்தாங்கி சத்துருயரிற்
றிடத்துடையாமாதுரு தீர்க்காயுவுமரோக
திடகாத்திரபுத்திர பவுத்திரமுமுடையவளே.

என்ற குமார சுவாமியம் நான்காம் பாவகப்படலத்தில் மாதுருபலன் என்னும் 138 ஆம் செய்யுளின்படி மாதுரு ஸ்தானமென்று சொல்லும் வீட்டிற்குடைய கிரகமும் அன்னைக்காரகனென்னும் சந்திரனும், எவ்விதத்திலேனும் பலம் பெற்று சுபகிரகங்களென்று சொல்லும் குரு, புதன், சுக்கிரன் இவர்களுடன். சகிதம் பெற்று தன் உறவினர்கள், அல்லது தன் சினேகக்கிரகங்களுடன் கூடியும் மாதுருஸ் தானத்திற்கும் ஜெனன ராசிக்கும், 4 8 ஆம் இடங்கள் பரிசுத்தமாயும் 9 8 2 இவ்விராசிகளில் குரு, தேவதாங்கிசமேனும் நற்கோட்களின் அங்கிசத்திலேனுமிருக்க, அவன் மாதுரு என்னுளும் நோயின்றி திடசரீரமாய் புத்திரப் பேருடன் பூரண ஆயுள் உடையவளாகவும் இருப்பாள் எனவும் கூறுவர். ஆனதால் ஜோதிடர்கள் எந்தெந்த கிரகங்கள் யாருடைய அங்கிசம் பெற்றன. அப்படி அங்கிசம் பெற்ற கிரகத்திற்கும். சத்துருவா (அ) மித்துருவா என அரிந்து பலாபலன் கூறுதல் நலம்.

சாதாரணமாக சூரியன், சுக்கிரன், அங்கிசம் பெற்றதாக வைத்துக்கொள்வோம். ஷெ சூரியனுக்கு, சுக்கிரனும், சனியும் பகைவராவார்கள் ஆனதால் சூரியனுடையபலம், குறைந்தன குரு, அங்கிசம் பெற்றால் சூரியன் தன்ஸ்தானத்திற்குத் தக்கபலனைக்கொடுப்பான் எனவும் கூறுவது நலம், இப்பால் ஜெனனராசியை உயிர் எனவும் சந்திரனின்ற ராசியை உடலெனவும் சாஸ்திரங்கள் கூறுவதாலும். சூரியன் எலும்பிற்கும், சந்திரன் இரத்தத்திற்கும், குஜன் அவனவன் சக்திக்கும், புதன் தசைக்கும், குரு அறிவிற்கும், சுக்கிரன் இந்திரிய சேஷ்டைக்கும், சனி நரம்புகளுக்கும், கர்த்தாவெனவும் கூறுவதால், சூரியன் சந்திரன் இவர்களை ஜெனன காலப்போது அவர்களிருக்கும் பலவன்மையைப்

பற்றி நன்கு ஆராய்ந்தறிய வேண்டும், இப்பால் குரு அரிவிற்கும் சந்திரன் இரத்தத்திற்கும், கர்த்தா என்பதினாலேயும்.

சந்திரனை பராசத்தி எனவும் போஜனம் குதிரை மாதுரு நித்திரை வெண்கலம் குடை அரிசி பருத்து மிளைத்து மிருக்கும் சரீரம், இடக்கண் உழவன் முத்து புடவை இவைகளின் வியாபாரங்களுக்கு சந்திரனே கர்த்தா எனவும்.

புத்திரர் சொர்னம் ரிஷபவர்க்கம், அரசர் புருடராக ரத்னம் பட்டப்பேர் விப்பிரவர்க்கம் இவைகளுக்கெல்லாம், கர்த்தாகுருவே எனவும். அனேக சாஸ்திரங்கள் கூறுவதனாலே சுபர்களில் முக்கிய கிரகம் குருவே எனவும், கூறுவதனால்,

மேலெழு வியாழன்நின்ற விராசிக்
காறீராறெட்டில்
மாலைவெண் மதியஞ் சேரில்
வந்தநாட் சகடயோகம்
பாலகன்பிறக்கிற் சாவாம்பழி
படுமணத்தைச் செய்யில்
ஞாலமேல் வழியைப் போகில்
நலமில்லை நறுமின் கொம்பே

என்றடிப கடகராசிக்கு உச்சனும், தனுர், மீனத்திற்கு, ஆக்ஷி நாதனுமான குரு எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்கு 6 ஆம் இடத்திலும், 12 ஆம் இடத்திலும், 8 ஆம் இடத்திலும், சந்திரனிற்கில், அவையே சகடயோக மெனவும், அஃகாலம் குழந்தை ஜெனிக்கில் மரணமாகு மெனவும், மணம் செய்யினும் பிரயாணம் செய்யினும். நன்மையில்லை எனவும் கூறியுள்ளார்.

சிலர் சகடையோகத்தில் ஜெனித்த அனேகர் பூரண ஆயுளுடனிருக்கிறார்களே என்று சந்தேகிக்கலாம். சகட யோகம் என்பதனாலேயே ஆயுளில்லை என்பது கூடாது. சகடை இல்லாவிடில் பூரண ஆயுளென்றும் எண்ணுவது தவரு ஆயுளை நிற்ணயிக்கப்பலவேறு வழிகள் உண்டுசகடையில் ஜெனித்த ஜாதகங்களை ஜெனன ராசிக்கு குரு எந்த ஸ்தானத்துக்குடையவன், அவன் எந்தஸ்தானத்திலிருக்கிறான் சந்திரன் ஜெனன ராசிக்கு எந்த ஸ்தானத்திற்குடையவன் அவனெந்த ஸ்தானத்திலிருக்கிறான். என்றும் இவ்விருவரையும் யார் பார்க்கப்படுகிறார் என்றும் கவனித்தல் வேண்டும். எப்படிப்பட்ட ஜாதகங்களாயினும், சூரியன் வலிபெற்றிருக்கில் அவனுக்கு வயது 50, சந்திரன் வலிபெற்றிருக்கில் வயது 70, குஜன் வலி பெற்றிருக்கில் வயது 16, புதனுக்கு வயது 20, குருவுக்கு வயது 30, சுக்கிரனுக்கு வயது 7, சனிக்கும், இராகுவுக்கும் வயது 100, இப்படி வலிபெற்ற கோட்களாலும். அஷ்டகவர்க்களாலும், கால சக்கிர திசை யந்திரத்தாலுமே வயதை நிலை கூறவேண்டும்.

பொதுவாக சூரியன், சனி, குஜன், இம்மூவரும் பாவி எனவும் சந்திரனும், இராகுவும் கூடி தனுர்மீனமான, குரு வீட்டிலிருக்க சுபரெனவும், சனி, அங்காரகன், இவர்கள் ஆக்ஷி வீடுகளில் சுபர்களிருந்தாலும் பாவர்களே இதனை உரவு தெரிந்துச் சொல்லுதல் வேண்டுமெனவும், 6, 8, 12 குடைய கோட்கள் கோணம் என்னும் 1, 5, 9 ஆம் இடங்களிலிருக்கில் சமன் எனவும் சனியும், குஜனும், புதன், சூரியனுடன்கூடி 1, 5, 9 ஆம் ராசிகளிருந்தாலும் சமன் என்று கூறியபடியும் கேந்திரம் என்று சொல்லும் 1, 4, 7, 10 ஆம் ராசியதிபர்களுக்கு 6, 8, 12 ஆம் ஸ்தானாதிபர்கள்

ஒருவர்பேரில் அவர்கள் பகைவராவார்கள் எனவும், ஒருவர்க்கொருவர் சமமின்றி நோக்குதலும் கூடாதெனவும், சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

ஆண், பெண் அறியும் விதமாவன.

பொதுவாக மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இவ்வாறு ராசிகளும் ஆண்ராசி எனவும், ரிஷபம், கடகம், கன்னி, விருக்ஷீகம், மகரம், மீனம் என்னுமிவ்வாறு ராசிகளையும் பெண்ராசி உனவும் கூறுவதுண்டு கிரகங்களில்.

சூரியன், குஜன், குரு	ஆண் கோள்	குரு, சனி, புதன், ராகு, சுக்கிரன்	இரட்டை
மதி, இராகு, வெள்ளி	பெண் கோள்		

சனி, கேது, புதன்	அலிக்கோள்	சூரியன், சந்திரன், குஜன்	ஒற்றை

இவ்வாறு கூறுவதாலும்.

ஞாயிரு, திங்கள், செவ்வாய், புதன் எனவரும் வாரங்களில் ஞாயிரு ஆண் நாள், திங்கள் பெண் நாள், செவ்வாய் ஆண் நாள், புதன் பெண் நாள், குரு ஆண் நாள், சுக்கிரன் பெண் நாள், சனி ஆண் நாள் எனவும், ஞாயிற்றுக்கிழமையில் சூர்ய உதயமுதல் தமிழ் நாழிகை $2\frac{1}{2}$ கொண்ட இங்கிலீஷ் மணி நேரம் ஒன்று வரையிலும், சூரியஓரை என்

றும் பிறகு புகர்புந்தி, இந்து மைந்தன், அந்தணன், சேய் என சப்தகிரகமும் மாறிவருமெனவும் சோதிட சாஸ்திரவல்லவர்களில் பலர் கூறியுள்ளார்.

ஓரை என்பவை முதன்முதலாக ஆண் ஓரையா பெண் ஓரையா என்றும், ஓராநாதன் இருக்குமிராசி என்னவென்றும். ஓராநாதன் ஆண், பெண் என்னும் கோட்க்களுள் எந்த சிரசத்தால் பார்க்கப்பட்டான் என்றும் கவனித்து அந்தந்த ஓரைக்குக்கீழ் சொல்லியபடி பலனைக்காண்பது அவசியம் ஓரையரியும் விபரம் என்றனர். எப்படியெனில், தினமும் ஓரைமாரிவரும் விபரமெப்படிதெனில் ஞாயிற்றுக்கிழமையான சூரிய வாரத்தன்று உதயமாகி 1 மணிநேரம் வரையில் சூரியஓரை பிறகு மேற்ச்சொன்னபடி மணிக்கொருவராக புகர் புதன், சந்திரன், சனி, குரு, குஜன் என 24 மணிநேரமும், 24 ஓராதிபர்கள் மாரி வருவாரெனவும். திங்கட்கிழமை, சோமவாரமாதலால், சந்திரன், சனி, குரு, அங்காரன், அருக்கன், சுக்கிரன், புதன் எனவும் இவ்வாறு ஒவ்வோர் வாரத்ததிபரே. அன்று சூர்யோதய ஓராநாதனை வைத்து 1 மணி நேரத்திற்கொருவராக மாற்றி, மேலே சொல்லியபடி ஓரா நாதர்களையரிந்து. சூரிய ஓரைக்குத் துன்பம் சந்திர ஓரைக்கு சந்தோஷம். அங்காரக ஓரைக்கு துயரம். புத ஓரைக்கு மக்கட்பேரு குருவுக்கு, தெள்ளிய நிலைப்பெரல் சுக்கிரனுக்கு இன்பம். சனிக்கு சிரைப்புகுதலெனவும், கண்டுகொள்க.

மேடமுதல் மீனம் வரையிலுள்ள 12 ராசிகளுக்கும் சுபன் அசுபன் மாரகன் யோகன் அரியவும்.

12 ராசி விபரம்.	போகன் பெயர்.	மாரகன் பெயர்.	பாபன் பெயர்.	சுபன் பெயர்.
மேஷம்	சந்திரன்	சனி புதன்	சனி சுக். புதன்	குரு சூரி.
ரிஷபம்	சனி	குரு சுக் சந்திரன்	குரு சு. சங்.	சனி, சூரி.
மிதுனம்		அங். குரு சூரி.	அங். குரு சூ.	சுக்கிரன்
கடகம்	அங்காரகன்	சுக். சனி சங்.	சுக். சனி சங்.	அங். குரு
சிங்கம்	,,	சுக். புதன்	சுக்கிரன் புதன்	அங்காரகன்
கன்னி	சுக்கிரன் புதன்	அங். குரு சங்.	அங். குரு சங்.	சக்கிரன்
துலாம்	சந்திரன் புதன்	குரு சூரி. அங்.	குரு சூரி. அங்.	சனி புதன்
விருச்சிகம்	சூரியன் சந்திரன்	புத. அங். சுக்.	புத. அங். சுக்.	சந்திரன்
தனுசு	சூரியன் புதன்	சங். சுக். குரு சனி	சுக்கிரன்	அங். சூரியன்
மகரம்	சுக்கிரன்	குரு சங். அங். சூ.	குரு சங். அங்.	சுக். புதன்
கும்பம்	சுக்கிரன்	சங். அ. சூ. பு. ச.	,,	சுக்கிரன்
மீனம்	அங்காரகன் குரு	சங். சுக். பு. சூரி.	சனி. சு. பு. சூரி.	அங். சந்திரன்

மேஷ லக்கினத்திற்கு சனியும், புதனும் மாரகாதிபர் என குறிக்கப்பட்டன. மேஷ லக்கினத்திற்கு புதன் 3, 6 இவ்வீட்டிற்குடையவனாகும். சனி 9, 10 இவ்வீட்டிற்கு குடையவராவார் 10 ஆம் இடம் என்பது காரியம், உத்தி யோகம், ஜீவனம், கருமம் என்னும் ஸ்தானங்களென முன்னமேயே கூறப்பட்டன. ஆதலால், சனி மாரகனா யினும் அவன் தன் சுயக்ஷேத்திரத்தில் ஆக்ஷி பெற்றும் 1, 4, 7, 10 என்னும் கேந்திரங்களிலேனும் இருப்பானாகில் சனி கொல்லான் ஆயினும் சுபகிரகங்கள் நோக்கிருக்க வேண்டும். ஷெ பாவகிரகங்கள் 9, 5 என்னும் திரிகோணத் திலிருந்து சுபகிரகங்களால் பார்கப்படவில்லையேண. அவன் மிருகங்களினாலாவது கயிற்றாலாவது விஷ ஜெந்துக்களினா லாவது மரணம் அடைவான். மேஷத்திற்கு இரண்டு ஏழுக்குடையோனான சுக்கிரனே கொல்வான் எனவும் கட்டாயமாய்க் கூறலாம்.

சத்திகள் நவகோள் குருவணக்கம்.

காயத்திரி சாவத்திரியும் கலைவாணி கங்கைநாமம்
மேயநல்லுலக மாதரெழுவகை விரும்பிப்போற்றி
ஆயநற்கதிர் நவக்கோளவைகளை வணக்கஞ்செய்து
தூயநற்கணிதம் யாவும்சொல் குருவணக்கஞ்செய்வாம்

அஷ்டகவர்க்கு என்பது, எட்டுவர்க்கம் என்பது பொரு ளாகும். அவையாவன சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி இலக்கிணம் என்பனவாம். சூரியன்

அஷ்டகவர்க்கத்தால் பிதாவின் ஆயுள் பலன் கொண் டாதி கொண்டங்களும் சந்திரனால் மாதாவுக்கும், குஜனால் சகோதர சகோதரிகளுக்கும், புதனால் (தாய் மாமனுக்கும்,) குருவால் அவன் புத்திர புத்திரிகளுக்கும், சுக்கிரனால் மனை யாளுக்கும், சனியால் அந்த ஜாதகனுக்கும் மேல்க்கண்ட விஷயங்களும் மாதந்தோறும் நடக்கும் பலாபலன்களும் நன்கு அறிய ஏதுவாகும். அஷ்டகவர்க்கின் மொத்தபரல் 337 ஆகும். அவைகளில் சூரியனுக்கு 48 சந்திரனுக்கு 49 குஜனுக்கு 39, புதனுக்கு 54, குருவுக்கு 56, சுக்கிரனுக்கு 52, சனிக்கு 39 ஆக மொத்தம் 337 ஆகும். அஷ்டக வர்க்கினால் அறியும் முறையை ஆதிமுதலாகிய சிவனுக்கு உபதேச சற்குரு தேசிகனாகிய சிவசுப்ரமண்யக் கடவுள் அகத்தியமா முனிக்குக்கூறியபடி சூரியன் முதல் சனி 7-ம் லக்கினம் (1) ஆக 8ம் மேடாதி 12 ஆல் பெருக்க நேறும் 84 வீட்டினும் நிருத்தி அதிக திட்பநுட்பமாய்பல னுரைத்தல் வேண்டும் அஷ்டகவர்க்கினை யறிய விரும்பு வோர் வடக்கு முகமாய் அமர்ந்து கிழக்கு மேற்காக ஓர் காகிதத்தில் 12 அரைகளைச்செய்து அதனை மேஷ முதல் மீனம் வரையிலுமுள்ள 12 அரைகளெனக்கொண்டு அவரவர்கள் ஜாதகப்படி எந்தெந்த ராசியில் எந்தெந்த கிர கங்களிருக்கிறதெனவரிந்து அந்தந்த கிரகங்களுக்கு வரும் நெம்பர் வரிசைபடி ஒவ்வொரு கிரகமிருக்குமிடமே 1 ஆம் இடமெனக்கொண்டு நெம்பர் வருமிடத்தில் ஒவ்வோர் கோடுகளைக்கிழித்து மொத்தமாய்க்காண்பதேயாம். இவை பின்வரும் அஷ்டகவற்கு விபரத்தால் காணலாம்.

காலசக்கிரதிசை வருடம்.

விபரம்.



அஷ்டகவர்க்குப் படலத்திலுள்ளபடி

சூரியன் அஷ்டகவர்க்குப் பரல் 48-க்கு விபரம்

சூரியன்	1, 2, 4, 7, 8, 9, 10, 11	8
சந்திரன்	3, 6, 10, 11	4
அங்காரகன்	1, 2, 4, 7, 8, 9, 10, 11	8
புதன்	3, 5, 6, 9, 10, 11, 12	7
குரு	5, 6, 9, 11	4
சுக்ரன்	6, 7, 12	3
சனி	1, 2, 4, 7, 8, 9, 10, 11	8
லக்கினம்	3, 4, 6, 10, 11, 12	6
		48

சந்திரன் அஷ்டகவர்க்குப் பரல் 49-க்கு விபரம்

சூரியன்	3, 6, 7, 8, 10, 11	6
சந்திரன்	1, 3, 7, 10, 11, 12,	6
குஜன்	2, 3, 5, 9, 10, 11	6
புதன்	1, 3, 4, 5, 7, 8, 10, 11	8
குரு	1, 2, 4, 7, 8, 10, 11	7
சுக்கிரன்	3, 4, 5, 7, 9, 10, 11	7
சனி	3, 5, 6, 11	4
லக்கினம்	3, 6, 10, 11, 12	5
		49

அங்காரகன் அஷ்டகவர்க்குப் பரல் 39-க்கு விபரம்

சூரியன்	3, 5, 6, 10, 11,	5
சந்திரன்	3, 6, 11,	3
குஜன்	1, 2, 4, 7, 8, 10, 11,	7
புதன்	3, 5, 6, 11,	4
குரு	6, 10, 11, 12,	4
சுக்கிரன்	6, 8, 11, 12,	4
சனி	1, 4, 7, 8, 9, 10, 11,	7
லக்கினம்	1, 3, 6, 10, 11,	5
		39

புதன் அஷ்டகவர்க்குப் பரல் 54-க்கு விபரம்

சூரியன்	5, 6, 9, 11, 12,	5
சந்திரன்	2, 4, 6, 8, 10, 11,	6
குஜன்	1, 2, 4, 7, 8, 9, 10, 11,	8
புதன்	1, 3, 5, 6, 9, 10, 11, 12,	8
குரு	6, 8, 11, 12,	4
சுக்கிரன்	1, 2, 3, 4, 5, 8, 9, 11,	8
சனி	1, 2, 4, 7, 8, 9, 10, 11,	8
லக்கினம்	1, 2, 4, 6, 8, 10, 11,	7
		54

குருவின் அஷ்டகவர்க்குப் பரல் 56-க்கு விபரம்

சூரியன்	1, 2, 3, 4, 7, 8, 9, 10, 11,	9
சந்திரன்	2, 5, 7, 9, 11,	5
குஜன்	1, 2, 4, 7, 8, 10, 11,	7
புதன்	1, 2, 4, 5, 6, 9, 10, 11,	8
குரு	1, 2, 3, 4, 7, 8, 10, 11,	8
சுக்கிரன்	2, 5, 6, 9, 10, 11,	6
சனி	3, 5, 6, 12,	4
லக்கினம்	1, 2, 4, 5, 6, 7, 9, 10, 11,	9
		56

சுக்கிரன் அஷ்டகவர்க்குப் பரல் 52-க்கு விபரம்

சூரியன்	8, 11, 12,	3
சந்திரன்	1, 2, 3, 4, 5, 8, 9, 11, 12,	9
குஜன்	3, 5, 6, 9, 11, 12,	6
புதன்	3, 5, 6, 9, 11,	5
குரு	5, 8, 9, 10, 11,	5
சுக்கிரன்	1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11,	9
சனி	3, 4, 5, 8, 9, 10, 11	7
லக்கினம்	1, 2, 3, 4, 5, 8, 9, 11,	8
		52

சனிக்குரிய பரல் 39-க்கு சோதனை விபரம்

சூரியன் 1, 2, 4, 7, 9, 10, 11.
சந்திரன் 3, 6, 11.
குஜன் 3, 5, 6, 10, 11, 12,
புதன் 6, 8, 9, 10, 11, 12
குரு 5, 6, 11, 12,
சுக்கிரன் 6, 11, 12,
சனி 3, 5, 6, 11,
லக்கினம் 1, 3, 4, 6, 10, 11,

(1) சமுதாயங்காணும் விதமெப்படி எனில் கீழ் கண்டவாறு ஓர் காகிதத்தில் அறைகள் வரைந்துகொண்டு கிரகங்களிருக்கும் ராசிகளுக்கேற்றவாறு எண்களை யமைத்துக்காண்க. விபரம் கீழ்வருமாறு:—

சூரியன் அஷ்டகவர்க்கு பரல் 48-க்கு சமுதாயம் காணும் வகை

கிரகங்கள்	மேஷம்	ரிடபம்	மிதுனம்	கடகம்	சிங்கம்	கன்னி	துலாம்	விருச்சி	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்	ஆகை
	ச				சூ அசு	பு வி	ம					ல	
சூரியன்	1	1	1	...	1	1	...	1	...	...	1	1	8
சந்ரன்	...	...	...	1	1	...	...	...	1	...	...	1	4
குஜன்	1	1	1	...	1	1	...	1	...	...	1	1	8
புதன்	...	1	1	1	1	...	...	1	...	1	1	...	7
குரு	...	1	...	1	...	...	...	...	...	1	1	...	4
சுக்	...	...	...	1	...	...	...	...	...	1	1	...	3
சனி	1	1	...	1	...	...	1	1	1	1	1	...	8
லக்	...	1	1	...	1	...	...	...	1	1	1	...	6
ஆக	3	6	4	5	5	2	1	4	3	5	7	3	48

ல	சனி		
	இராசி சக்கிரம்		
			அ சு சூ
		சங்	பு குரு

4	3	6	4
6	சமுதாய விபரம்		5
5			5
3	4	1	2

ஒவ்வோர் வர்க்கத்தாருக்கும் அதாவது பிதா, மாதா, சகோதரன், அம்மான், புத்திரன், களத்திரம், ஜாதகன் என்னும் வர்க்கத்தாற்குரிய கிரகங்களான சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி என்னும் சப்த கிரகங்களின் அவ்ஷ்டகவர்க்க சமுதாயத்தைக்கொண்டு பலன் சொல்லுவதெப்படி யெனில், சூரியனஷ்டக வர்க்கத்தால் ஜெனன லக்கினமுதல் 9 ஆம் இடமானபிதுர்லக்கினம் வரையிலிருக்கும் பிந்துகள். 30-க்குக் குறையாதிருந்தால். பிதாவுக்கு கெண்டம் சம்பவிக்கும். உடனுயிராகிய இரண்டு ராசியிலும். ஏதேனுமொரு ராசியில் நான்கு பிந்துக்குக் குறைந்தபரலுடன் சூரியன் நீச்சமடைந்து இருப்பரேல் பிதாவுக்கு அரிட்டம் காட்டும்.

சந்திரஷ்ட கவர்க்கத்தால். சந்திரனின்ற ராசியிலேனும் ஜெனன ராசிக்கு 4 ஆம் இராசியிலேனும். நான்கு பிந்துகட்குக் குறைந்த பிந்துக்கள். இருக்குமாயின். அவன் மாதாவுக்கு அற்ப ஆயுளேயாம். சந்திரனின்ற ராசிக்கு 4 ஆம் இராசியில் எத்தனை பிந்துகளிலிருந்தனவோ. அவையே அவன் தாயுடன் பிறந்த சகோதரமாம்.

குஜன் அஷ்டகவர்க்கினால். குஜன் நின்ற ராசிக்கு 3 ஆம் ராசியதிபதி எவனோ, அந்த கிரகமிருக்கும் ராசியில் எத்தனை பிந்துகளிருந்தனவென்றுப் பார்த்து, அந்தந்த ஜாதகனின் சகோதரபலன்களைச் சொல்லவேண்டும். பலன் சொல்லும் விபரம். 60 ஆம் பக்கத்தில் காண்க. குஜன் நின்ற ராசிக்கு 3 ஆம் ராசியில். எத்தனைப் பிந்துகளிருந்தனவோ. அத்தொகையே அந்தந்த ஜாதகனுக்குச் சகோதர சகோதரிகளெனப்படும். அதனை ஆண் பெண் என்னும் கிரகங்களால் ஆண் எனவும் பெண் எனவும் பிரித்துச் சொல்லவேண்டும்.

புதன் அஷ்டகவர்க்கத்தால். புதனிருக்கும் நன்மை தீமையறிந்தும். புதனின்ற ராசியிலேனும். அவன் நின்ற ராசிக்கு 4 ஆம் ராசியிலேனும். பிந்துக்கள் 3-க்குக் குறைந்திருக்குமாயின். தாய், மாமனுக்குக் கஷ்டம், நிஷ்டூரம், விருத்தி குறைவு முதலிய கொடியபலனைக் காட்டும். இவை க்ஷேத்திரத்திரத்திற் கேற்றவாறு பிந்துக்களால் மதிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

இவ்வாரே குரு, சுக்ரன், சனி இவர்களுக்கும், அந்தந்த கிரகங்களிருக்கு மிடத்திலும் சூரியனிருந்த ராசிக்கு, 9 சந்திரனிருந்த ராசிக்கு 4, குஜனிருந்த ராசிக்கு 3, புதனிருந்த ராசிக்கு 5, குருவிருந்த ராசிக்கு 5, சுக்ரனிருந்த ராசிக்கு 7, சனி இருந்த ராசிக்கு 8, இந்த ராசியிலிருக்கும் பிந்துக்களால் கீழ்க்கண்டவாறு பலன் சொல்லுதல் வேண்டும்.

1. திரவிய நாசம்.
2. அவமானம், பீடை, துவேஷம்.
3. சஞ்சலம், வித்தை நாசம்.
4. லக்ஷிமிகரம், காரியசித்தி.

5. தனப்பிராப்தி, விவாகசவுக்கியம்.
6. வித்தைலாபம், லக்ஷிமி விலாசம்.
7. ஐசுவரியம், அதிகலாபம். என்க

இவை திரிகோணமறியும் விபரமாகும்

திரிகோணம் என்பது சமுதாய சக்கரத்தைக் கொண்டே காணவேண்டியதாகும். திரிகோணம் என்றால் மூன்று கோணங்கள் எனப்பெயர் பெறும். இதனாலேயே நமது நூலாசிரியரிலொருவர்.

உறுவதாடரிவின்மாடு பெண்கலை
யுற்றவியாழதுலை சாலளிதேன்கயல
செரிவதேதிரி கோணவிந்திற்சரி
சேரின் மீட்கக்குறையிற்சரி செய என்றனர்.

மூன்று கோணங்கள் என்னும் மேஷம், சிங்கம், தனுசு, ரிடப, கன்னியா, மகரம், மிதுன, துலா, கும்பம், கடக, விருக்ஷிக, மீனம் இவைகளுக்கு இராசிகள் மூன்றிலும் ஒன்றிற்கொன்று பிந்துக்கள்ஏற்றக்குறைச்சலாக இருந்தால்குறைந்த பிந்தின்படி அதிகமிருக்கும் பிந்தை சரிசெய்யவேண்டும். மூன்று இராசிகளிலும். பிந்துக்கள் ஏற்றக்குறைச்சலின்றி சரியாக இருக்குமாயின். மூன்று ராசியிலுமிருக்கும் பிந்தை எடுத்து விடவேண்டும். இராசிகள் மூன்றினுள் ஏதேனுமொரு ராசியில் பிந்தில்லாமலும், அல்லது இரண்டு ராசியில் பிந்தில்லாதிருந்து, ஓர் ராசியில்மட்டும் பிந்திருந்தாலும் அந்த மூன்று ராசியுமே சோதனை செய்யாமல் விட்டுவிடவேண்டும். எப்படி எனில் முன்களைந்த சூரியனஷ்டகவர்க்கில் மேஷத்தில் 3, சிங்கத்தில் 4, தனுசில் 2 ஆகையால் தனுசு ராசியிலேயே பிந்துக்கள் குறைந்திருக்கின்றன.

ஆனதால் தனுசிலுள்ள இரண்டு பிந்தைப்போலவே மேஷத்தையும் சிங்கத்தையும் சரிசெய்யவேண்டுமாயின் மேஷத்தில் ஒன்றும் சிங்கத்தில் இரண்டும் எடுத்து விடுவோமாயின் மேஷம், சிங்கம், தனுசு, இம்மூன்றிலும். இரண்டிரண்டு பிந்துக்களாகும் பிறகு ரிடபம், கன்னி, மகரம், இம்மூன்றையும் பார்ப்போமாகில் ரிடபத்தில் 6, கன்னியில் 2, மகரத்தில் 5, உள்ளன. இம்மூன்று ராசிகளினுள் கன்னி என்னுமிராசியில் பிந்து குறைந்திருக்கின்றன. ஆனதால் ரிடபத்தில் 4, மகரத்தில் 3, எடுத்துவிடுவோமாயின் கன்னியிலுள்ள இரண்டைப்போலவே, மற்றிரண்டு ராசியிலும் இரண்டிரண்டாகும், இவ்வாறே மற்றுமுள்ள மிதுனம், துலாம், கும்பம், கடக, விருச்சிகமீனம் இவற்றிற்கும் காண்க.

பிறகு திரிகோண பரலைக்கொண்டே ஏகாதிபத்திய சோதனைச் செய்யவேண்டும். ஏக ஆதிபத்தியம் என்றால் ஒரே, ஆதிபத்யம் என்பது பொருள் இதனை,

மறிதறிக் கறிக்கான் மகரஞ்சால் கன்னியாழ்
மாடு கோற்றனு மீன்சரி சோதனை
கிரகராசியில் விந்துவை வைத்திடு
கிளைத்தகா ரரிவையிதிற் கிட்டிடா

என்றபடி, எதிரெதிர் உள்ள ராசிகளை சரிசெய்வதே முறை. எப்படி எனில் (மேஷம், விருச்சிகம்) (ரிடபம், துலாம்) (மிதுனம், கன்னி) (தனுசு, மீனம்) (மகரம், கும்பம்) என்பவையே கடகம், சிங்கம் இவ்விரண்டையும் சோதிப்பதில்லை, முன்சொன்ன இரண்டு ராசியிலும் கிரகமில்லாதிருந்து பிந்துக்கள் ஏற்றக் குறைச்சலாயிருந்தால், முன்சொன்னபடி குறைந்ததைப்போல் சரிசெய்யவேண்டும், கிரகமில்லாதிருந்து பிந்துக்கள் சரியாயிருக்கு மாயின் எடுத்துப்போடவும், இரண்டு ராசியிலும், கிரகமிருக்குமாகில், பிந்துக்

கள் இருந்தபடியே விட்டுவிடவேண்டும், ஒரு ராசியில் கிரகமிருந்து, ஒரு ராசியில் கிரகமில்லாவிடில், கிரகமில்லாதிருக்குமிராசியிலிருக்கும் பிந்துக்களெல்லாம் எடுத்துப்போடவும். கிரகமிருக்கும் வீட்டில் பிந்து குறைந்தும், கிரகமில்லாத வீட்டில் பிந்து அதிகமாயுமிருந்தால், குறைந்தபடி சரிசெய்யவும்.

ஏகாதிபத்திய சோதனையின் கருத்தென்ன வெனில் மேஷம், விருச்சிகம் குஜனுக்கும், ரிடபதுலாம் சுக்ரனுக்கும், மிதுன கன்னி புதனுக்கும், தனுர்மீனம், குருவுக்கும், மகர கும்பம், சனிக்கும், ஆக்ஷிவீடாகையால் ஒரே ஆதிபத்தியர் எனவும் ஒருவர் வீட்டிலேயே பிந்துக்கள் குறைந்தும் அதிகமாயு மிருக்கக்கூடாது. எனினும் கிரகசேர்க்கையாலிருக்கலாம். என்றும் அதைக்கொண்டே பலன் சொல்லுதல் வேண்டும் என்பதுவாம் அதனாலேயே ஏகாதிபத்திய சோதனை எனவும் பெயராகும்.

இராசி குணகாரம் காணும் விதம்

கிட்டுமோரை குணகாரமாடு கோல்
கிளைக்கு மேழிலெரு தரிபத்தில் யாழ்
துட்டனெட்டளி நால்கலை கன்னியுஞ்
சொல்லுமைந்து வில்லொன்பது கும்பமே
இட்டபன்னொன்று முந்நான்கு மீனமே
யிருத்த விந்திவ்வடைவே பெருக்கியே
திட்டமாய்த் தொகையொன்றாக்கி நெஞ்சமே
தேசிகன் வியகாதனைச் சிந்தியே.

என்ற வாக்யப்படி மேஷத்திலும் துலாத்திலுமுள்ள எண்களை 7 ஆல் பெருக்கியும், ரிஷபத்திலும் சிங்கத்திலும் உள்ள பிந்தைப் பத்தால் பெருக்கியும். மிதுனத்திலும்,

விருச்சிகத்திலும் உள்ள பிந்தை 8 ஆல் பெருக்கியும். கடக ராசியிலுள்ள பிந்தை 4 ஆல் பெருக்கியும். கன்னியிலும் மகரத்திலு முள்ளபிந்தை 5 ஆல்பெருக்கியும். தனுசிலிருக்கும் பிந்தை 9 ஆல் பெருக்கியும். கும்பராசியிலிருந்த பிந்தை 12 ஆல் பெருக்கியும் மீனராசியிலுள்ள பிந்தை 12 ஆல் பெருக்கியும் காண்பதே இராசிகுணகாரமாம்.

கிரக குணகாரம்.

சிந்தையே வீமநாதரி ருகனுஞ்
செய்யாமல் கன்னிருந்தோரை விந்துவை
யைந்தினு பெருக்கிக் குசனெட்டினு
லந்தணனுருபத்து நீரேழுகா
விந்தக்கோளின் குணகாரம் ராசியி
லெய்து மத்தொகை ஏகமாய்க்கூட்டியே
இந்த முன்னூற்றிருபத்து நாலினி
லேற்றிமுன் னூற்றருபத் தைந்துக்கீயே.

(இ-ள்.) கிரககுணகாரம் செய்யும் விதமெப்படி எனில், மேல்சொன்ன யேகாதிபத்தியச் சக்கரத்துள், சூரியன், சந்திரன், புதன், சனி இவர்களிருந்த பிந்தை 5 ல் பெருக்கிப்போட்டும். குஜனிருந்த ராசிபிந்தை 8 ல் பெருக்கிப்போட்டும். குரு இருந்த ராசிபிந்தை 10 ல் பெருக்கியும் சுக்ரனிருந்த ராசிப்பிந்தை 7 ஆல் பெருக்கிக்காண்பதே கிரககுணகாரமாம்.

இப்பால் அஷ்டகவர்க்கைக்கொண்டு ஆயுள் சொல்லுவதெப்படி எனில். இராசி குணகாரம் கிரககுணகாரம் இவ்விரண்டிலுமுள்ள எண்களை ஒன்று கூட்டி, ஆக குண சமுகமெனக்காணவேண்டும் அதன் விபரமெப்படி எனில். இராசி குணகாரத்தில் மேஷமும், கிரககுணகாரத்தில் மேஷத்திலுமுள்ள பிந்தைக்கூட்டி ஆககுண சமுகத்தில்

போடுவதேயாம். இவ்வாரே ரிடபம் மிதுனம் முதலிய 12 ராசிகளையும் கூட்டிக் காண்க. ஆகுண சமுக பிந்தைக் கொண்டே வயது சொல்ல வேண்டும். எப்படி எனில் உதாரணம் பின்வருமாறு. இதனை சூரியன் அஷ்டகவர்க்காக வைத்துக்கொள்வோம்.

2	4	5	3
4	சமுதாயும் 48		6
3			3
2	7	4	5

2	2	3	3
3	திரிகோணம் 30		2
3			2
2	2	3	3

	2		3
	ஏகாதி 12		2
			2
			3

	14		24
	இராசி குணகாரம்		8
			20
	.		15

	10		15		24		39
	கிரக குணகாரம்				இவ்விரண்டையும் கூட்ட ஏக சமுகம்		
			40				60
			45				60

	ல சனி	ரா	சந்
	இராசி		
			சூ அ சு
	கே		பு குரு

6-வது சக்கரமான (ஆகுண) சமுகத்திலிருக்கும் எண்களை, ஒன்று கூட்டியே, ஆயுள் சொல்லவேண்டுமெனக் கூறியபடி. ஆகுண சமுகத்திலுள்ள எண்களை ஒன்றாய்க் கூட்டி அதை, 324, ஆல் பெருக்கி, 365, பேருக்குப் பங்கிட்டு மிகுந்துள்ளதை 27, பேருக்குப்பங்கிட்டும், அதில் மிகுந்துள்ளதை, 12 ல் பெருக்கி 27, பேருக்குப் பங்கிட வேண்டும். மேலே 365 பேருக்குப் பங்கிட்ட மீதியை 27 பேருக்கு பங்கிடவரும், வட்டம் வருடமெனவும் 27

பேருக்கு பங்கிட்ட மீதியை 12 ல் பெருக்கி 27-ல் வகுத்த வட்டம் மாதமெனவும். மிகுந்த சேஷத்தை 30 ல் பெருக்கி 27 ல் வகுத்த வட்டம் நாளெனவும். 60 ல் பெருக்கி 27 ல் கழித்த வட்டம் நாழிகை எனப்படும். மிகுந்துள்ளதை 60 ல் பெருக்கி மறுபடியும் 27 ல் வகுத்தது விநாடி எனவும். இவ்வாறே வருஷம், மாதம், நாள் நாழிகை, விநாடி, எனவும் காண வேண்டும். இப்படியே சப்த கிரக அஷ்டகவர்க்கையும் சோதித்து, வரிசையாய்வைத்து, அவரவர்கள் ஜாதக இராசி கிரகப்படி இரண்டு கிரகங்கள் சேர்ந்து ஓர் ராசியிலிருப்பாராகில். அந்த கிரங்களுக்கு முன் சொல்லியபடி கண்டவருடம் மாதம் தினத்தில் அரைபாகம் தள்ளிப் போடவும். நீச்சமடைந்த கிரகம் எந்த கிரகமாயினும். அவர்களுக்குக் கண்டவருடம் மாதம் தினத்தில் அரைபாகம் தள்ளியும், ஒரு கிரகம் பலமடைந்திருந்து அவனுடன் சேர்ந்த கிரகம், பல ஈனமடைந்திருந்தால் அவர்களுக்கு உரியவருடம் மாதம் தினத்தில் கழிக்க வேண்டியதில்லை. கடகராசியில் இரண்டு கிரகங்களிலிருந்தால் அவர்களுக்குரிய வருடம் மாதத்தில் அரைபாகமும் ஒரு கிரகமிருந்தால் மூன்றிலொருபாகமும் பாவகோட்டக்கள் பகை நீச்சம் பெற்றிருந்தால். 8-ல் ஒரு பாகமும் இவ்வாறே 7 கிரகங்களுக்கும் கழித்ததுபோக மிகுதியுள்ளதை ஒன்று சேர்த்து காண்பதே, அவனுக்குரிய ஆயுளாகும். இவ்வாறே (ஒவ்வோர் கிரகங்களுக்கும்) ஜாதகங்களுக்குங் கூட்டி அவரவர்கள் ஆயுள் விபரங்களைச் சொல்லுக.

கண்டாதி கண்டமறியும்படி

இரவிக்குத் திரிகோணசோதனையும் ஏகாதிபத்திய சோதனையுமான பின்பு ஏகாதிபத்திய பிந்து மொத்தமு

மறிந்து அவ்வெண்களை இரவிநின்றராசிக்கு 9ஆம்இராசியில் இருந்த பிந்துவால் பெருக்கி 27-ல் வகுத்ததுபோய் மிகுந் துள்ள எண்களை ஜாதகன் ஜனித்தபோது சுக்லபக்ஷமாயின் அஸ்வனிமுதலும், கிருஷ்ணபக்ஷமாகில் அவிட்ட முதலும், எண்ணிக்காண்பதே கெண்டாதி நக்ஷத்திரம். இவ்வாறே சந்திரனஷ்டகவர்க்கு ஏகாதி பிந்தை சந்திரனின்ற ராசிக்கு நான்காமி ராசியிலிருக்கும் பிந்தாலும் குஜனஷ்டகவர்க்கு ஏகாதிபத்தியத்தைகுஜனின்றராசிக்கு 3, ஆம்இராசியிலிருக் கும் பிந்தாலும், புதனஷ்டகவர்க்கை புதனின்ற ராசிக்கு 10 ஆம் ராசியிலிருக்கும் பிந்தாலும், குரு அஷ்டகவர்க்கை குரு நின்ற ராசிக்கு, 5 ஆம் ராசியிலிருக்கும் பிந்தாலும், சுக்கிர னஷ்டகவர்க்கைச் சுக்ரனின்ற ராசிக்கு 7 ஆம் இராசியிலிருக் கும் பிந்தாலும், சனி அஷ்டகவர்க்கை, சனிநின்ற ராசிக்கு 8 ஆம் ராசியிலிருக்கும் பிந்தாலும், பெருக்கி 27 ஆல் வகுத்து நின்ற சேஷத்தை முன் சொன்னபடி கிருஷ்ணபக்ஷ மாகில் அவிட்ட முதலாயும் சுக்ல பக்ஷமாகில் அஸ்வனி முதலாயும் எண்ணி அந்தந்த நக்ஷத்திரங்களுக்குரிய ராசியிலும் திரிகோண நக்ஷத்திரம் திரிகோண ராசியிலும் சனி வரும்போது அந்தந்த வகையராக்களுக்கு கிரகங்கள் சஞ்சரிக்கும் காலம் வரையில் கெண்டாதி பீடைகாட்டும், சுபகிரகங்கள் வாசம் செய்யும் காலம் நற்பலன் விளையும்.

திரிகோண நக்ஷத்திரங்கள் என்பது 11 ஆம் பக்கத்தில் காட்டியபடியாக ஒவ்வோர் கிரகத்திற்கும் யேகாதிபத்திய பிந்தை மேற்ச்சொல்லியபடி கிரகம்நின்ற ராசிக்கு ஸ்தானங் கள் சொல்லியபடி சமுதாய பிந்தினல் பெருக்கி 27-ல் கழிக்கவேண்டும்.

சர்வா அஷ்டக வர்க்கமறிய

ஒவ்வோர் கிரகத்திக்கும் அவையாவன சூரியன் முதல் சனி வரையிலுள்ள 7 கிரகங்களுக்கும் மேஷ ராசியிலுள்ள சமுதாய பிந்தை எல்லாம் கூட்டி சர்வா அஷ்டகவர்க்க மேஷ ராசியிலும், ரிடப ராசியிலுள்ள பிந்தை எல்லாம் கூட்டிச் சர்வா அஷ்டகவர்க்க ரிடப ராசியிலும், இவ்வாறே மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருக்ஷீகம், தனுசு மகரம், கும்பம், மீனம் ஆகிய 12 ராசியிலுமுள்ள பிந்தை கூட்டிக்காண்பதேயாம். அப்படிக் கூட்டிக்காணும்போது 10 ராசியிலுள்ள பிந்தைவிட 11 ஆம் ராசியிலுள்ள பிந்து உயர்ந்தும் 11 ஆம் ராசியிலுள்ள பிந்தைவிட 12 ஆம் ராசி யில் பிந்துக்கள் குறைந்துமிருந்தால் நல்லயோகமுண்டு 12 ஆம் ராசி முதல் 3 ஆம் ராசி வரையில் கூட்டிக்கண்ட பிந்து அதிகமாகில் ஆதியிலும் 4 ஆம் ராசிமுதல் 7 ஆம் ராசி வரையில் கூட்டிய பிந்து அதிகமாகில் மத்தியிலும், 7 ஆம் ராசிமுதல் 12 ராசி வரையில் கூட்டிக்கண்ட பிந்து. அதிக மாகில் கடைசியிலும் யோகமுண்டு இன்னும் மற்றமுள்ள விஷயங்கள் 2, 3 ஆம் பாகத்திலின்னும் விரிவாய்க்காண லாம்.

	சந்திரன் அகரமானம்.	சூரியன் அகரமானம்.	
சித்திரை	1, 13, 4	11, 13, 15	2
வைகாசி	7, 9, 11	19, 21, 22, 24	3
ஆனி	12, 13, 14	24, 25, 24	4
ஆடி	14, 13, 12	24, 23, 22, 21	5
ஆவணி	12, 10, 98	19, 17, 15, 13	6
புரட்டாசி	8, 6, 4, 3	11, 8, 6	7
ஐப்பசி	1, 2, 3	2, 1, 3, 5	8
கார்த்திகை	6, 7, 4, 10	6, 8, 90	9
மார்கழி	12, 13, 14, 14	10, 11, 11	10
தை	14, 13, 12	11, 9, 8, 7	11
மாசி	12, 9, 8	6, 4, 12	12
பங்குனி	7, 5, 2	2, 4, 9, 10	1

27 நக்ஷத்திர தேவதைகள்

1	அஸ்வனி—சரஸ்வதி	15	சுவாதி—லக்ஷிமி
2	பரணி—துர்க்கை	16	விசாகம்—சுப்ரமண்யர்
3	கார்த்திகை—அக்கினி	17	அனுஷம்—வாயுபகவான்
4	உரோகணி—பிரம்மன்	18	கேட்டை—தேவேந்தின்
5	மிருகசிரம்—சந்திரன்	19	மூலம்—அசுரர்
6	திருவாதிரை—ஈஸ்வரன்	20	பூராடம்—வருணன்
7	புனர்பூசம்—பலதேவதை	21	உத்திராடம்—விக்னேஸ்வரர்
8	பூசம்—வியாழன்	22	திருவோணம்—விஷ்ணு
9	ஆயில்யம்—ஆதிசேடன்	23	அவிட்டம்—இந்திராணி
10	மகம்—சுக்ரன்	24	சதயம்—இயமன்
11	பூரம்—பார்வதி	25	பூரட்டாதி—குபேரன்
12	உத்திரம்—சாத்தான்	26	உத்ரட்டாதி—காமதேனு
13	அஸ்தம்—சூரியன்	27	ரேவதி—சனிபகவான்
14	சித்திரை—விஸ்வகர்மா		

ஆகாச பாதாள சுக்கிரன்.

1	பிரதமை—இந்திரன்	1	பிரதமை—வாயு
2	துதியை—அக்கினி	2	துதியை—குபேரன்
3	திருதியை—இயமன்	3	திருதியை—ஈசானியம்
4	சவுத்தி—நிருதி	4	சவுத்தி—ஆகாச
5	பஞ்சமி—வருணன்	5	பஞ்சமி—பூமி
6	சஷ்டி—வாயு	6	சஷ்டி—இந்திர
7	சப்தமி—குபேரன்	7	சப்தமி—அக்கின
8	அஷ்டமி—ஈசானியம்	8	அஷ்டமி—இய
9	நவமி—அகாசம்	9	நவமி—நிருதி
10	தசமி—பூமி	10	தசமி—வருணன்
11	ஏகாதசி—இந்திரன்	11	ஏகாதசி—வாயு
12	துவாதசி—அக்கினி	12	துவாதசி—குபேரன்
13	திரயோதசி—இமயன்	13	திரயோதசி—ஈசானியம்
14	சதுர்தசி—நிருதி	14	சதுர்தசி—ஆகாசம்
15	பூரணிமை—வருணன்	15	அமாவாசை—பூமி

அங்கிசபலனையறிக

சூரியனங்கிசம்

ஆதித்தனங்கிசத் தானஞ்சாது வழிநடப்பன் [சான்
போதித்த தொந்தியுள்ளோன் பொய்சொல்லான் நடக்கவஞ்
வேதிக்கும் குணத்தோனவன் உத்தமன் மோகிசீமான்
வாதித்த வியாதியில்லான் வல்லவன் சிவப்பனுமே.

சந்திரன் அங்கிசம்

சந்திரனங்கிசத்தில் பிறந்தவன், பச்சை நறம்புகளை யுடையவனும், யானையைப்போன்ற சிறுத்த விழிகளை யுடையவனும், தன்னையடுத்தோரை மோசம் செய்யாத வனும், அழகிய கருத்து நீண்ட உரோமத்தையுடைய வனும், சந்தோஷவார்த்தைகளைப் பேசவல்லவனும், பல வார்த்தைகளை யுடையவனும், ஆவான்.

குஜனங்கிசம்

செவ்வாயங்கிசத்தில் பிறந்தவன், முற்கோபியும் கடுமையான வசனங்களை யுடையவனும், பயிர்செய்து ஜீவிப்போனும் சிவந்த சரீரமும், அடிக்கடி உண்பவன், தனக்கு தெரியாவிடங்களில் மறு உடையவன், அக்கினியி னிடம் பிறியமுடையவன், கொடிய சொற்களைப்பேசு பவன், அதிக நித்திரையாளனுமாவான்.

புதனங்கிசம்

புதனங்கிசத்தில் பிறந்தவன் தருமம் செய்ய ஆசைப் படுவோன், சங்கீதம் பாடவல்லவன், நல்ல அழகுடையவன்,

தெள்ளிய செந்தமிழால் பேசவல்லவன், சண்டை முகத்தில் புறங்காட்டி ஓடும் தன்மையில்லாதவன், யாவரையும் சமமாகப் பாவிக்கவல்லவன், நன்மையே செய்பவன் தனது பந்துக்களின்மேல் ஆசை யதிகமுடையவன்.

குரு அங்கிசம்

ஞானமார்க்கங்களை யறிய வல்லவன், அதிக புத்திர புத்திரிபேருடையவன், என்னுளும் நீராடப்பிறிய முள்ளவன், தனது காரியத்தில் மிக்கஜாக்கிறதை யோடிருப்பவன், மந்திரித்தொழில் செய்பவன், நூதன காரியங்களைக்கண்டு பிடிப்பவன், நல்லொழுக்கமும் அறிவையுமுடையவன் நீண்ட முகத்தையுடையவன், என்றும் கூறுக.

சுக்கிரனங்கிசம்

மந்திர தந்திரங்களைக்கற்பவன், பின்வருங் காரியங்களை முன்னறிந்து சொல்லுபவன், ஏதேனுமொரு காரியத்தை உத்தேசித்து குறித்தகாலத்தில் நிறைவேற்றுபவன், எந்தகாலத்தும் கடவுள் பக்தியை மறவாதவன், நன்மையைச்செய்ய ஆசைப்படுவன், தனது சொந்த ஜனப்பிறிய முடையவன்.

சனியங்கிசத்தில் பிறந்தவன் பலன்

அடிக்கடி பொய்பேசும் குணத்தன், போஜனமருந்துவதிலாசையுடையவன், வறுமையுடையவன், கொடுங்கோபி, வெட்டிப்பேச வல்லவன், எவருக்கும் தீங்கையே செய்ய எண்ணமுடையவன், பலவித விசாரங்களை யுடையவன், ஆடை விருப்பன் என்றும் கூறுக.

ஸ்வயாங்க லக்கினம்

ஜெனித்த ராசியை இரண்டு கூறிட்டு, ஜெனன ராசி மேடம், மிதுனம், சிங்கம், துலாம் தனுசு, கும்பம் என்னும் ராசிகளின் முற்கூறில், ஜெனிக்கில் இரவி எனவும் பிற்கூறில், ஜெனிக்கில் சந்திரனெனவுங் கொள்க. ரிடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என்னும் ராசியாகில் முற்கூறு சந்திரனென்றும், பிற்கூறு சூரியனென்றுங் கொள்க.

நவாங்கச லக்கினம்

மேஷமுதல் மீனம் ஈராக, எந்த ராசியிலுதித்தாலும், உதித்த ராசி நாழிகையை 9 கூறுசெய்து, ஜெனன ராசியில் சென்ற நாழிகை எத்தனைக் கூறு கழிந்தனவென்றும், மீத முன்கூறு எத்தனை என யறிந்து கடந்த நாழிகை விநாடிகளைக் கீழ்கண்டவாறு அறிக.

எந்த ராசியில் ஜெனனமானாலும் அதனை 9 கூறிட்டுக் காட்டும் ஜாபிதா கீழ்கண்டவாரென்றறிக.

நவாங்கிச லக்கினமறிய வேண்டிய சூக்ஷம சக்கரம்

நெ	இராசியின் பெயர்.	இராசிக் குறியநாழி கையை	9 பேருக்கு பாகிக்க	ஒவ்வோர் பாகம்		விநாடி	விஷயம்
1	மேஷம்	4 வி 15	ஒவ்வொன்றையும் ஒன்பது பேருக்கு பாகிக்கவும்.	0	28	¼ 1/16	மேடமுதலாக
2	ரிடபம்	4 ,, 45		0	31	½ 1/8	மகரமுதலாக
3	மிதுனம்	5 ,, 15		0	35		துலாமுதலாக
4	கடகம்	5 ,, 30		0	36	½ 1/8	கடகமுதலாக
5	சிங்கம்	5 ,, 15		0	35		மேடமுதலாக
6	கன்னி	5 ,, 0		0	33	¼ 1/16	மகரமுதலாக
7	துலாம்	5 ,, 0		0	36	¼ 1/16	துலாமுதலாக
8	விருக்ஷிகம்	5 ,, 15		0	35		கடகமுதலாக
9	தனுசு	5 ,, 30		0	36	½	மேடமுதலாக
10	மகரம்	5 ,, 15		0	35		மகரமுதலாக
11	கும்பம்	4 ,, 45		0	31	½ 1/8	துலாமுதலாக
12	மீனம்	4 ,, 15		0	28	¼ 1/16	கடகமுதலாக

உதயராசியில், ஜெனனகாலங்களில் சென்ற பாகம் பங்கிட்டுக் காட்டியப்படி எத்தனை பாகம் உள்ளனவென்றறிந்துகொண்டு, மேல்கண்ட சக்கரத்தில் விஷயமென்னும், கலத்தில் கண்டபடி எண்ணி அம்சா லக்கினம் காணவும்.

அம்சா கிரகம் எடுக்கும், அடைவுமுன் அங்கிச விபரம் காட்டிபடியே, அஸ்வனி முதல் கிருத்திகை நான்குபாதம் வரையில், 12 மாதங்களுக்கும், மேஷமுதல் 12 இராசி எனக்கொண்டு எந்தக்கிரகம் எந்த நக்ஷத்திரம் எத்தனையாவது காலில் நின்றனவோ, அதனைமேற்கண்டவர் யறிந்து 12 ராசிகளிலும் அடைத்துக்காணவும்.

சோதிட விளக்கம்.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம்' விசுத்தி ஆஞ்ஞை, என அருவகை: ஆதாரங்களுக்கும் விநாயகர், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மஹேசுவரன் சதாசிவன் ஆகிய இவர்கள் அதிதேவதை எனவும் இவ்வகைப் பட்ட தேவதைகளுக்கே ஐம்பத்தோரக்ஷர மென்றும் உலக தத்து வார்த்தங்களை யறிந்த, உத்தமசீலர்களாகிய மரீசீ புருகுச் சர்புகர், சவுனகர் காசிபர், இனர், வசிஷ்டர், கற்கர், எவுனர் ரோமசர், பராசர், மநு, நாரதர், வியாசர், போதகர், அங்கிராமர், அத்திரி முதலானோர்களும், அவரவர்கள் தம் தம் அறிவிற்கேற்றவாறு ஓராசாரம், காலப்பிரகாசி, பாகிதம், சவுரிய பராக்கிரமம், சாராவளி, கிஷ்டணியம் சித்தாந்த வாக்கியம் பகிதம் நவநீதம் வாராமோரை நவநிதியம், லீலா வதி ஜாதகம், பாரிசாதம், வியோகாருணவம், யோகதசமஞ் சரி, ஞானப்பிரிதி, சந்திராபரண வோரை, முதலிய நூற் களும், குமார சுவாமியம் வீமேஸ்வர உள்ள முடை யான் சுடாமணி உள்ளமுடையான் சாதக சிந்தாமணி சாதக அலங்காரம், துய்யகேரளம் மணிகண்ட கேரளம், முதலிய நூற்களையும் ஏர்ப்படுத்தி அதினின்று, ஆயுள் விப ரங்களைநன்கு அறிவதற்கு சனி நின்ற தாரதரத்தாலும் சந் திரனிருக்கும் தன்மையாலும் உதயராசியின் சுபாசுபத்

தாலுமே ஆயுளை நிற்ணயிக்கவேண்டுமென்று கூறியதோடு ஜெனனகாலங்களில் ஜலஉதயம், சிர உதையம், பிண்ட உதயம் இவைகளையும் நன்கு அறிதல் வேண்டுமென கூறுகின்றனர். இதனை கற்ருேர், எல்லா சாஸ்திர நூற்களையும் ஆருய்வதோடு ஜெனகால நிற்ணயம் முக்கியமாய் கவனித்த பிறகே யோகத்தைப்பற்றியும், ஆயுள் முதலியவைகளைப் பற்றியும் ஆருய்ந்து சொல்லுதல் வேண்டும். சிலருடைய கொள்கை என்னவெனில் மேஷலக்கினம் முதல் பாதத்தில் ஜெனித்தால் அவன் ஜெனித்த அடையாலம் கிழக்குமேற்கு வீதி, வீட்டிற் கருகில் ஜலதடாகமாவது நீரோடையாவது இருக்கும். ஜெனித்தவீட்டிற்கு இரண்டு பக்கத்திலும், சந்துவுண்டு, மேற்கு திசையில் கோவில் உண்டு என்ற அடையாளங்களைச்சொல்லி விடுவார்களே யாஞல், அந்த லக்கினமே நிச்சபமென நம்பிவிடுகின்றனர். ஓர் இலக்கினத்திற்கு, நாலேகால் நாழிகைக்குமேல் ஐந்தரை நாழிகை வரையில் ஒரே ராசி நடக்கும் என்பதை இப்புத்தகத்தின் இரண்டாம் பக்கத்தில் காணலாம். நாம் இவ்வாறு $4\frac{1}{4}$ க்குமேல் $5\frac{1}{2}$ க்குள் ஒவ்வோர் ஜாதகம் அல்லது ஓர் லக்கினத்திற்கு நான்கு ஜாதகம் என கொள்வோமாஞல் உலகிற்பிறந்த ஆத்துமாக்கள் பலரில் ஒருவருக்கொருவர் உருவம் குணம் செய்கை வயது முதலியவைகள் பலவிதங்களில் மாருபடக் காரணமில்லை யாதலால் அநேக சாஸ்திர நிபுணர்கள் ஓர் விநாடிக்கு ஓர் ஜாதகமுண்டென கூறியிருக்கிருர். அப்படி ஓர் விநாடிக்கு ஓர் ஜாதகமெனவைத்துக் கொள்வோமாயின் உதயகாலத்தை சரியாய் நிற்ணயித்து பார்க்காமலுரைக்கும் சாஸ்திரங்கள் எவ்வாறு உண்மையாகுமென்பதை வாசகர்களே அறிந்து கொள்ளலாம். இதைக் கொண்டே சங்கரனவர் உமாமயேஸ்வரியை நோக்கி,

சந்திரன்பானி லக்கணமுங் கோளுநாளுந்
தயங்கிய பக்கங்கரண மியோகம் வாரம்
வந்துசொலும் சோதிடத்தை யறியாதார்கள்
மனநினைவா யறியும் வகையுளதோ வென்ன.

என கூறியுள்ளார். ஆனதால் உதயகாலத்தை நன்கு நிச்சயிப்போமாயின் சோதிடம் பொய்யாது உண்மையாகும். உதயகாலத்தை நன்ருய் நிச்சயிக்கவில்லையேல் காலபலன்கள் குறித்த காலத்தில் நடவாது. சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதமக்களும் தற்போது சுலப நம்பிக்கையோடிருப்போர்க்கும் நாளடைவில் சோதிடமே பொய் எனக்குறை கூறுவர் என்பதையமில்லை ஆனதால் சோதிடங்களில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது உதயகாலம். சோதிட ஆசியருள்ளொருவரான அகஸ்தியர் கூறியதாவது.

இதைவிடவேரே இல்லை
யேதேதுபார்த் திட்டாலும்
அறையவர் நின்றதீம்பு
அனைத்துமே மதியாலாய்ந்து
உதையமுஞ் சனிநின்
ருேருக்கொரு வரையூடுதாக்கிச்
சிதைபதம் சொல்லலாகும்
செகத்தினி லுதித்தபேர்க்கே.

என்று கூறியதால் நன்கு அறியலாம். அநேகர் ஆயுள் பாகம் சொல்ல சூரியனையும் சனியும் சந்திரனுமே முக்கியமானவரென்று கூறிய தன்காரண மென்னவென்று சந்தேகிக்கலாம், சூரியனுனவன் இவ்வுலகத்தில் வியாபக முற்றவன் சுத்தமான வெண்ணிறத்தையுடையவன் ராசியில் ஸ்திர ராசியையுடையவன் சுழி முனை அக்கினி முதலிய

சகல கருமங்களையும் அழிக்கும் பொல்லாதவன், கண்கண்ட தெய்வம், சந்திரனானவன் குளிர்ந்த பிரசத்தையுடையவன், நம்மனத்திற்கு சந்தோஷத்தையும் அறிவையும் விளைப்பவன் 15 நாளையில் வளர்ந்து மறுபதினைந்து நாளையில் தன் உறுக்களை குறைத்துக்காட்டுபவன். பரமசிவன் சிரசில் இருப்பவன், சனியோ இயமன் பிரம்மாதி தேவர்களையும் விடாது வாட்டுபவன், வைராக்கியமுடையவன், ஆனதினால் தான் இம்மூவரைப்பற்றியே வெகு முயற்சியாயும் ஜீவர்களுக்கு ஆயுளை நிற்ணயிக்கும் முக்கிய ஆதார வஸ்துக்கள் எனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட கோட்களினாலேயே சருவஜீவர்களுக்கும் ஓர் எருதுக்கு மூக்குக் கயிர் கோர்த்து ஆட்டுவிப்பது போல நம்மோற்கு நன்மையும் தீமையும் விளைகிறதென்பதிற்குச் சிறிதேனும் ஐயமில்லை என்பதை கற்றறிந்தோர் நன்கு உணர்வராகையால் சிற்றறிவுடையேன் கூறுவது கடினமென விடுத்தனம். ஆனதால் மறுபடியும் யான் சொல்வதாவது ஜெனனோதய காலத்தை நன்கு நிச்சயித்த பிறகே மற்றுமுள்ளவைகளை கவனிக்குமாறு தண்டுகிறேன் இங்கு கெண்டாதி கெண்ட விஷயங்களை சில எழுதியுள்ளேன் மற்றுமுள்ளவைகள், இனி வரும், 2, 3, 4 ஆம் பாகத்தில் காண்க.

கெண்டாதிகெண்ட விளக்கம்

(1) ஒவ்வோர் ஜாதகர்களின் கெண்டாதி கெண்டங்களை யறியவேண்டில் ஜெனனராசிக்கு, 6 ஆம் இடமான ரோகஸ்தானாதி ஸ்புடத்தையும், 8 ஆம் இடமான ஆயுள் ஸ்தானாதிபதி ஸ்புடத்தையும், 12 ஆம் இடமான விறய ஸ்தானாதிபதியினது ஸ்புடத்தையும் கூட்டிக்காணும் ராசியினோடு சனி குளிகன் இவர்கள் ஸ்புடத்தையும் கூட்டி, 9 ல்

பெருக்கிக்காணும் நவ அங்கிசராசியில் தினசரிப்படி சனி வாசகாலம் கெண்டம் செய்யும்.

(2) சனி, குரு, குளிகன் இம்மூவர்களின் ஸ்புடத்தையும், 9 ஆல் பெருக்கி மறுபடியும், 9 ஆல் வகுத்துகாணும் ராசியில் சனிவருங்காலமும் கெண்டம் செய்யும்.

உடலாதி என்னும் சந்திரன் ஸ்புடத்தை 8 ஆல் பெருக்கிக் குளிகன் ஸ்புடத்தைக் கூட்டிக்கண்டது தேகம். லக்கினஸ்புடத்தை 5 ல் பெருக்கி குளிகன் ஸ்புடத்தை கூட்டிக்காண்பது ஜீவன், குளிகன் ஸ்புடத்தை 7 ல் பெருக்கி சூரியன் ஸ்புடத்தைக் கூட்டிக்காண்பது மிருத்து. தேகத்திற்கு பிராணன் அதிகமாகில் அற்ப ஆயுள்.

" " சமமாகில் மத்திப வயது

" " குறைந்திருக்கில் தீர்க்க வயது

சூரியன் 10 லும் குஜன் 4 லும் நிற்க அவன் மலைமேலேரி வீழ்ந்திறப்பான், சனி 4 லும் 8 ல் சந்திரன் 10 ல் குஜன் நிற்கில் கிணற்றில் வீழ்ந்திறப்பன், சூரியனும் சந்திரனும் கன்னியா ராசியிலும் அவர்களோடு சனி இராகு கேது நிற்க அவர்கள் பந்துவினால் மரணம்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவ்விராசிகளில் சூரியனும் சந்திரனுமிருக்கில் ஜலத்தில் மரணமடைவான்.

கடகத்தில், சனி மகரத்தில் மதி மீனத்தில் புதன் நிற்க கொடிய நோயால் மரணம்.

மகரம் கும்பம் கடகம் இவ்விராசிகளுக்குள் ஷெ ஆக்ஷிநாதர்களோடு பாவகோட்கள் சகிதம் பெற அக்கினியால் மரணம்.

குஜன் 4 லும் 7 ல் சூரியனும் நிற்கில் இராஜாக்களால் மரணமடைவானென்று சோதிடவல்லோர்கள் கூறுவர்.

நவகோட்களாலுண்டாகும் வியாதி

சூரியனுக்கு வயிற்றுவலி, அரையாப்பு, சொரி, சிரங்கு உஷ்ணசம்மந்த ஜாட்டியம்.

சந்திரனுக்கு, அஜீரணம், சீதம், வயிர்போக்கு, உதிர சம்மந்த வியாதியுண்டாகும்.

அங்காரகனுக்கு வாந்தி, கிருணி, தலைவலி, மண்டையிடி.

புதனுக்கு கைகால் முடக்கலென்னும் வாய்வு சம்மந்த வியாதி, கழுத்தில் புண் உண்டாதல், கறங்களில் வாதையும் காட்டும்.

குருவுக்கு ரோகம் மர்ம ஸ்தான வியாதி உதிரப் போக்கு அரசர்களால் காயமுண்டாதல்.

சுக்கிரனுக்கு கட்டிப்பிளவை (ஸ்ரீமூல நோய்) பெண்களாகில் புருஷநோய், ஒரு கண்வலி, சூலைநோய்.

சனிக்கு வாதரோகம் சூலைநோய், க்ஷயம், எனும்புருக்கி நோய் முதலியவைகளும்.

இராகு கேதுக்களுக்கு விஷம் புசித்தல் மயக்கம் பிசாசுபீடை துற்பிணி இவைகளும் உண்டு.

கெண்டாதி கெண்டங்களை பற்பலவிதமாக கூற வேண்டியதவசியம். அமாவாசையில் ஓர் குழந்தை பிறக்கில் அமாவாசை பிறந்த 10 நாழிகைக்குள் பிள்ளைக்கும் 10 க்கு மேல் இருபதுக்குள் மாதாவுக்கும் 20 க்கு மேல் 30 க்குள் பிதாவுக்கும் 30 க்கு மேல் 40 க்குள் அம்மானுக்கும் 40 க்கு மேல் 50 க்குள் ஜெனித்த பிள்ளைக்கும். தோஷமெனவும் வீமேஸ்வர உள்ள முடையான் அரிஷ்ட படலம் 12 ஆம் செய்யுளிலும் இன்னும் அநேக நூலிலும் காணலாம். ஆயினும் மேற்சொன்னது பொது விஷயமே யாகும் அமா[illegible]சை, நக்ஷத்திரம், இவைகளால் கெண்டாதி கெண்டம் கூறலாமாயினும் கிரக அடவியைக்கொண்டே அதனை நிலை கூறுவது முக்கிய கடமை யாகும் கேரளசோதிடம் பிரதி அரிஷ்ட காண்டம் 40 ஆம் செய்யுளில் பூரண பலத் தினோடு புண்ணியர் சுபமேயா கிற்காரண மில்லை சாதக கனிக்கவே வயது முண்டு என்பதனாலரியலாம்.

பின்னும்.

சீரணமதியேயானால் செல்வருந்தாழ்ந்து நிற்பர்
கூரனிப்பாபர் மேலாய் கொல்லுவர் கொஞ்சநாளில்
என்றனர்.

ஆனதால் கெண்டாதி கெண்டங்களை பலவிதமாய், [illegible]சித்துச் சொல்லவேண்டும். அமாவாசை கெண்டம், நக்ஷத்திரகெண்டம் இவைகளை முதன்மையாக வைத்து மற்றுமுள்ள பாவக, படலத்தாலும் காலசக்கரம் திசைபுக்தி, அஷ்டகவர்க்கம், இவைகளால் அவை நீங்கும் நீங்காதெனவும், நீங்கிவிடுமாயின். இன்னும் எத்தனை வருஷம் பூமியிலிருப்பான் என்று அறிவது சிலாக்கியம் இதற்காகவே.

செகத்தினி லுதித்தபேர்க்கு
செல்வமும் பகையும் காண
மிகுந்ததோர் துயரந்தன்னின்
மிகயோக முதிப்புங்கண்டு
யுகத்தினி னடக்குங்கர்மம்
வேதனுண்டாக்கிச் சொன்ன
விதத்தினிலுள்ள பேர்க்கு
விவரமே தெரியச்சொல்வாய்.

எனவும் முன்னோர் கூறி இருப்பதை யறிகிறோம். இரவில் ஜெனித்தோர்க்கு சரராசிகளென்னும் மேஷம், கடகம், துலாம், மகரம் இவை பலமெனவும், பகலாகில், ரிடபம், சிம்பம் விருச்சிகம், கும்பம் என்னும் ஸ்திர ராசிகளே பலமெனவும், மாலை வேளையில் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்னும் உபயராசிகளே, மிக்கபலமெனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. 2, 7 ஆம் இடங்களே முழுமாரகஸ்தானமெனவும் சாஸ்திரங்கள் கூறுவதோடு பலராலும் சம்மதிக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வோர் ராசிக்கும் மாரகாதிபர்களை முன்கூறிய பக்கத்திலுள்ளபடி எந்த மாரகாதிபர்களை நிலைகூறுவது எனபார்ப்போமாயின் கிரகங்களிருக்கும் தராதரத்தினாலே அதனை நிலை கூறுவது அவசியம். உதாரணமாக மேஷராசிக்கு சனியும், சுக்கிரனும், மாரகாதிபர், சுக்கிரனுக்கு நேத்திரதோஷமின்றி, 5 ஆம் இடங்களிலிருந்து, குஜன் அல்லது சந்திரனால் பார்க்கப்பட்டு இருந்தால் சுக்கிரன் கொல்வானென்பதை எவரும் சம்மதிக்க முடியாது. மற்றும் யார் கொல்வான் அவனுடைய அங்கிசம் பெற்றவர். அல்லது அவன் வீட்டிலிருந்தவர்கள் மேஷராசி யதிபதியை சேர்க்கையாலே பார்வையாலே, அவன் வலுவை பறித்தவரே கொல்வார்.

பூசம் சித்திரை பூராடம், இந்நக்ஷத்திரத்தின் மூன்றாங்காலிர்ப் பிறந்தவனுக்கு உடனே கெண்டாதி தோஷமுண்டென்றும், உதய ராசிக்கு ரோகம் சப்தமம் அஷ்டமம் விரயமென்னும் 6, 7, 8, 12, அமிராசிகளில் கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனிருந்து. அவனோடு சனி, ராகு, கேது, இவர்கள் சேர்க்கையுற்றும், குரு, புதன், சுக்கிரன், இவர்கள் பார்வை இல்லாமலும் 4, 8 என்னும் ராசிகளில் கொடிய

கோட்களிருக்கவும், ஜெனித்த ஜாதகன், ஜெனித்த 5 ஆண்டுகளுக்குள்ளிறந்து போவான்.

ஜெனன ராசியில் சுபகிரகமிருக்கினும் தனுர், மீனத்திற் காக்ஷிநாதனான குருவோடு, சனி, இராகு, கேது இவர்கள். சம்மந்த முற்றிருக்க, சூரியனின்ற ராசிக்கேழாம் இராசியில் புதன் நிற்க சுக்கிரனுக்கு ஆராம் ராசியில் ராகுவிருக்க அவன் ஜெனித்த 16 வருஷத்திலிறந்து போவான். சூரியன் நின்ற ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் சந்திரனிற்கவும், ஆயுழ்காரகனென்னும் சனி நின்ற ராசிக்கு 8 ஆம் ராசியிலும், சந்திரனின்ற ராசிக்கு 8 ஆம் ராசியிலும், குருநிற்க ஷை சந்திரனின்ற ராசிக்கு 7 ஆம் ராசியில் உதயாதிபதி நிற்கினும், அவன் ஜெனித்த $10\frac{1}{2}$ வருடத்திலிறந்து போவான்.

இவ்வாறு அற்ப ஆயுளுடையவனா, அல்லது தீர்க்க ஆயுளுடையவனா என்று ஆராய்ந்த பிறகு பின்வரும் யோகபடலத்திள்ளபடி யோகபாவங்களை யாராய்ந்து, கிரகங்களுக்கேற்றவாறு, பலாபலன் சொல்லவேண்டும். இதுவரை சொல்லி வந்த கெண்டாதி கெண்டங்கள் நீங்கும் நீங்காதெனவும், ஆராய்ந்தறிய வேண்டுமாதலால், இனிவரும் தோஷ நிவர்த்திப்படலத்தினால் அறிந்து அஷ்டகவர்க்கம், கால சக்கரம், முதலியவைகளாலும், திசை புக்தியாலும் அளவறிந்து கூறுக.

பிதுரு கெண்டப் அறியும்படி.

ஒன்பதாம் ராசியைக்கொண்டே பிதாவின் அந்தஸ்தும், பிதுருபலம் முதலியவைகளையும் ஆராய்ந்து கூறுதல் வேண்டுமென முன் கூறிய, ஆம் பக்கத்தில் காட்டியுள்ளோம் பிதுரு லக்கினத்திற்கு 8 ஆம் ராசி எந்தராசியோ

அவையே பிதாவுக்கு ஆயுள் சொல்லும் க்ஷேத்திரமாகும். பிதுரு காரகனுகிய சூரியனுக்கு, 8-ல் சனி, குஜன், நிற்கில் பிதா மரணம், அந்த மரணகால மறியவேண்டில் எட்டாமதி பன் திசையில் மேற்சொன்ன சனி, குஜன் இவர்கள் புக்தி வருங் காலங்களிலும் சனி, குஜன், இவர்கள் திசையில் பிதுரு ஸ்தானத்திக்கு அஷ்டமாதிபன் புத்தியிலும் கெண்டம் செய்யும். பிதுரு ஸ்தானத்திற்கு 12 ஆம் ராசி யில், இராகு நிற்கினும் பிதாமரணமென்பது சாஸ்திர சித்தம் அவை ராகுதிசையின் போதென்பதாம்.

சர ராசிகளாகிய மேஷம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்னும் ராசிகளில் கொடிய கோட்களோடு, பிதுரு காரகனுகிய, சூரியன் சகிதம் பெற்றிருப்பானே யாமாகுல் அவன் பிதா விஷத்தையுடையதாகிய அரவத்திஞலாவது நஞ்சை புசித்தாவது, ஆயுதங்களினுலாவது தன் உயிரை மாய்த்துக்கொள்வன், மேற்சொல்லியவர்களே குஜன், முழு நோக்குடன், நோக்குவானுகில் அவன், பிதா அன்னிய தேசங்களிலே மரணமடைவானென்றும் கூறுவர்.

(பிதுரு காரகனே) அல்லது ஸ்தானுதிபதியோ ஜெனன ராசிக்கு எந்த இராசியிலிருந்தாலும், அவனை இருபுறமும் கொடிய கோட்களாவது நீச்சம் பகைப்பெற்ற கிரகங்களா வது சூழ்ந்திருப்பாரேயானுல், அவன் பிதா கொடிய நோயாலும் துன்பங்களாலும், அவஸ்தைப் படுவதோடு சிரைவாசம் செய்பவனுகவு மிருப்பான்.

பிதுரு ஸ்தானுதிபதி அஸ்த மயமடைந்தும், பிதுரு காரகன் பகைக்ஷேத்திரங்களி லிருந்து சுக்கிரன், சனி, இவர்களால் பார்க்கப்படும். பிதுருஸ்தானத்தை, அஷ்ட மத்திலிருந்த ராகுவால் பார்த்து மிருந்தால், அவன் பிதா இக்குழவி ஜெனித்த 3 வருஷத்தில் மரணமடைவான் என் றும் கூறுவர்.

சாதி அபிஷேகம்

நித்தியகிரக வேதை

தாற்காலிய கிரகவேதை

சந்திரனின்ற நாளுக்கு	7ல்	செவ்வாய்	ரவிநின்ற நாளுக்கு	15ல்	கேதுநிற்பதும்
செவ்வாய்க்கு	4ல்	புதன்	கேதுவுக்கு	18ல்	புதன்நிற்பதும்
புதனுக்கு	5ல்	குரு	புதனுக்கு	17ல்	சனிநிற்பதும்
குருவுக்கு	6ல்	சுக்கிரன்	சனிக்கு	12ல்	குருநிற்பதும்
சுக்கிரனுக்கு	8ல்	சனி	குருவுக்கு	12ல்	இராகுநிற்பதும்
சனிக்கு	9ல்	சூரியன்	இராகுவுக்கு	12ல்	குஜன்நிற்பதும்
சூரியனுக்கு	9ல்	ராகுகேது	குஜனுக்கு	12ல்	சந்திரன்நிற்பதும்
இராகு கேதுக்கு	9ல்	சந்திரன்	சந்திரனுக்கு	12ல்	சூரியன்நிற்பதும்

நக்ஷத்திரங்களுக்குள்ள சமுகவேதை தக்ஷணவேதை வாமவேதை விவரம்

இன்ன நக்ஷத்திரதிற்கு	சமுகவேதை
அசுபதி	பூரம்
பரணி	உத்திரம்
கிருத்திகை	அஸ்தம்
ரோகணி	சித்திரை
மிருகசிரம்	சுவாதி
திருவாதிரை	விசாகம்
புனர்பூசம்	அனுஷம்
பூசம்	கேட்டை
ஆயிலியம்	மூலம்
மகம்	பூராடம்
பூரம்	உத்ராடம்
உத்திரம்	திருவோணம்
அஸ்தம்	அவிட்டம்
சித்திரை	சதயம்
சுவாதி	பூரட்டாதி
விசாகம்	உத்திரட்டாதி
அனுஷம்	ரேவதி
கேட்டை	அசுபதி
மூலம்	பரணி
பூராடம்	கார்த்திகை
உத்திராடம்	ரோகணி
திருவோணம்	மிருகசிரம்
அவிட்டம்	திருவாதிரை
சதயம்	புனர்பூசம்
பூரட்டாதி	பூசம்
உத்திரட்டாதி	ஆயில்யம்
ரேவதி	மகம்

தக்ஷணவேதை	வாமவேதை
கேட்டை	ரோகணி
மூலம்	மிருகசிரம்
பூராடம்	திருவாதிரை
உத்திராடம்	புனர்பூசம்
திருவோணம்	பூசம்
அவிட்டம்	ஆயில்யம்
சதயம்	மகம்
பூரட்டாதி	பூரம்
உத்திரட்டாதி	உத்திரம்
ரேவதி	அஸ்தம்
அசுபதி	சித்திரை
பரணி	சுவாதி
கார்த்திகை	விசாகம்
ரோகணி	அனுஷம்
மிருகசிரம்	கேட்டை
திருவாதிரை	மூலம்
புனர்பூசம்	பூராடம்
பூசம்	உத்திராடம்
ஆயில்யம்	திருவோணம்
மகம்	அவிட்டம்
பூரம்	சதயம்
உத்திரம்	பூரட்டாதி
அஸ்தம்	உத்திரட்டாதி
சித்திரை	ரேவதி
விசாகம்	அசுபதி
அனுஷம்	பரணி

குறிப்பு:—எந்த நக்ஷத்திரமாயினும் அந்த நக்ஷத்திரத்திற்கு நான்காவது நக்ஷத்திரம் வாமவேதை என்றும், 11-ம் நக்ஷத்திரம் சமுகவேதைஎன்றும், 18 ம் நக்ஷத்திரம் தக்ஷணவேதைஎன்றும் கொள்க. உதாரணம் மேல்காட்டியபடியாம்.

கிரககாறக விபரம்

சூரியனுக்குறியகாரகம்
பருத்தசிரம்
சிலும்பினமயிர்
பைத்தியசரீரம்
பால் மிளகு
ரசவாத வேலை
மருத்துவம்
கோதுமை
ஒற்றைத்தலைவலி
ஆணை, சதாசிவம்
பஞ்சலோகம்
வலதுவிழி
பிரயாணம் செல்லல்
பகல்காலம்

சந்திரனுக்குறியகாரகம்
ஈஸ்வரி
அன்னமுண்ணல்
அஸ்வம்
தாயார்
உறங்குதல்
வெண்கலம்
உப்பளவர், வண்ணார்
வெண்ணை
குடை அரிசி
பனிப்பயறு
உப்பு
பருத்துமிளைத்துமிருக்கு[ம்
சரீரம்
இடதுவிழி
உழவுத்தொழில்
நீர்வாழும்மச்சம்
பெண்களின் ஆடை
முத்துவர்க்கம்

அங்காரனுக்குறியகாரகம்
சுப்ரமண்ணியர்
விக்நேஸ்வரர்
துவரை
பவளம்
கோபத்துட னிருத்தல்
குலாலன்
கருமாரத்தொழில்
சண்டைசெய்தல்
உதிரம்
கடன்வாங்கல்கொடுத்தல்
நாற்கால்களையுடைய
ஆட்டுவர்க்கம்
சுசியானபதார்த்தம்
ரசவஸ்து
புஷ்பங்கள்
காயமடைதல்
துற்தேவதை

புதனுக்குறியகாரகம்
விஷ்ணு
ரதமோட்டி
அம்மான்
வித்தை
பச்சை
இளங்கன்றுபிராணி
வைசியன்

தனாதிபதி
தூதுசெல்லல்
கணிதவேலை
ரதம்
நூதனகதைகளைஜோடித்தல்
காவியம்செய்தல்
கூத்தாடல்
சோரம்
தாசிமோகம்
கண்டிதவார்த்தை
எல்லாமறிதல்
தரா
வெந்தியம்

குருவுக்குறியகாரகம்
புத்திரர்
சொர்னம்
தேன்வர்க்கம்
பசுவர்க்கம்
கடலை
ராஜாக்கள்
புருடர்
திரண்டபட்டம்
சீரகம்
வைடூரியம்
பிரம்மா
பிராமணன்
பரிதேசி

சுக்கிரனுக்குறியகாரகம்
கீர்த்திப்பிறதாபம்
வீடு
பகலில்மாதுருகாரகன்
தாசி
பசு
களத்திரம்
சிநேகர்
வாகனாதிகள்
சப்தபேரிகை
சங்கீதம்
நாட்டியம்
சந்தோஷம்
துவசம்
வெளிச்சம்
நாவிதர்
வாசனைத்திரவியம்
கட்டில்மெத்தை
சயனகூடம்
வெண்சாமரை
போகம்
அழகிய சிறுபிராயம்
மொச்சை, புளி
ஈயம்
தயிர், பால், அன்னம்
விகடவார்த்தை
ஆதரித்தல்
தேவலோகமாதர்
இலக்குமி
வெள்ளி

சனிக்குறியகாரகம்
மரவேலைசெய்தல்
திருடல்
பூரண ஆயுள்
ஜீவவதை
எருமை
சிறைவாசம்

நிசிகாலபிதாகாரகன்	[illegible]
வெட்கமில்லாமை	**இராகுவுக்குரியகாரகம்**
வியாதி	திருடல்
பிரயோஜனமில்லாத வார்த்தை	படபடப்பு
இம்சை	அதிகபேச்சு
இரும்பு	சகலவேலை
தொழிலாளர்	வேடத்தொழில்
அபகரித்தல்	பயந்தவித்தை
கடுகு	**கேதுவுக்குரியகாரகம்**
வயல்சூழ்ந்தநிலம்	கபடம்
நீலரத்தினம்	மோக்ஷம்
தீயத்தொழில்	விஷவாக்கு
அடிமைத்தொழில்	தைரியம்

யோகினிநிற்கும் திசை

பிரதமை, நவமி	கிழக்கு	சதுர்த்தி, சஷ்டி	மேற்கு
ஏகாதசி, திருதியை	தென்கிழக்கு	பூரணை, சத்தமி	வடமேற்கு
திரயோதசி, பஞ்சமி	தெற்கு	தசமி, துதியை	வடக்கு
துவாதசி, சதுர்தசி	தென்மேற்கு	அஷ்டமி	வடகிழக்கு

இப்படி நிற்கும் திசை நோக்கையால் சுபகாரியங்கள் விலக்கப்படும். பின்புறமும் வலமும் நன்றெனக்கொள்க.

தாது மூல ஜீவக்கோள்.

சந்திரன்	தாதுக்கோள்	சூரியன்	மூலக்கோள்
குஜன்	,,	சுக்கிரன்	,,
இராகு	,,	புதன்	ஜீவக்கோள்
கேது	,,	குரு	,,
சனி	,,		

தாது மூல ஜீவராசிகள்

மேஷம்	தாது	துலாம்	தாது
ரிஷபம்	மூலம்	விருச்சிகம்	மூலம்
மிதுனம்	ஜீவன்	தனுசு	ஜீவன்
கடகம்	தாது	மகரம்	தாது
சிங்கம்	மூலம்	கும்பம்	மூலம்
கன்னி	ஜீவன்	மீனம்	ஜீவன்

கருவி விபரம்.

1 சூரியன், 2 சனி, 3 குஜன், 4 சுக்கிரன்	ஒருவாய் கருவி	5 மதி, 6 புதன், 7 குரு	இருவாய் கருவி

இரத்தின வர்க்கம்.

சூரியன்	சூரியகாந்தம் மாணிக்கம்	குரு	பொன்
சந்திரன்	சந்திரகாந்தம் வஜ்ஜிரம்	சுக்ரன்	முத்து வைடூரியம்
குஜன்	பவழம்	சனி	நீலம்
புதன்	மரகதம்	இராகு	கோமேதகம்
		கேது	கோமேதகம்

உலோக விபரம்

சூரியன்	பஞ்சலோகம்	சுக்ரன்	பொன்
சந்திரன்	ஈயம்	சனி	வெள்ளி
குஜன்	வெண்கலம்	இராகு	இரும்பு
புதன்	செப்பு	கேது	இரும்பு
குரு	தரா		

இவை தாதுவாய் வந்த கிரகங்களின் உலோகம்.

சூரியன்	மாம்பூ	சுக்ரன்	கிழங்குக்கொடி
சந்திரன்	,,	சனி	பனை, மஞ்சள்
குஜன்	சிறு தூறு	இராகு	வெற்றிலை
புதன்	படரப்படுவன	கேது	முள்ளுடையது
குரு	புன்னை, கரும்பு		

இவை மூலமாய் வந்த கிரகங்களுக்காகும்.

நக்ஷத்திர நிகண்டு

அஸ்வனியின் பெயர்
1 பரி
2 மா
3 வாசி
4 புரவி
5 துரகம்
6 சென்னி
7 குதிரை
8 முந்நாள்
9 இரலை

பரணியின் பெயர்
1 தாழி
2 பூதம்
3 அடுப்பு
4 தராசு
5 கங்குல்
6 கிழவன்
7 சோறு

கிருத்திகையின் பெயர்
1 ஆரல்
2 அழல்
3 அங்கி
4 அளகு
5 இறால்
6 அறுமீன்
7 ஆவி

உரோகணியின் பெயர்
1 அயநாள்
2 வையம்
3 பண்டி
4 தேர்
5 உருளை
6 சகடு
7 பாரு

மிருகசீரிடத்தின் பெயர்
1 ஐந்தானம்
2 மார்கழி
3 மதி
4 கேராளன்
5 நரிப்புரம்
6 மும்மீன்
7 தேங்காய்

திருவாதிரையின் பெயர்
1 இறை
2 செங்கை
3 யாழ்
4 வில்
5 மார்கழி

புனர்பூசத்தின் பெயர்
1 பிண்டி
2 கார்
3 திரள்
4 மூங்கில்
5 மாலை
6 கரும்பு
7 ஆவணம்
8 விண்டம்
9 புனர்தம்
10 பாலை

பூசத்தின் பெயர்
1 குடம்
2 தரா
3 கொடிறு
4 தையம்
5 மதி
6 குருநாள்
7 காற்குளம்

ஆயில்லியத்தின் பெயர்
1 அரவினாள்
2 கௌவை
3 பாம்பு
4 பணி

மகத்தின் பெயர்
1 முயற்சனி
2 வாய்க்கால்
3 வேட்டுவன்
4 எழிலி
5 ஏமலி
6 மாசி
7 கொடுநுகம்

பூரத்தின் பெயர்
1 துர்க்கை
2 நாவிதன்
1 எலி
2 இடைச்சனி

உத்திரத்தின் பெயர்
1 பாற்குளி
2 பங்குனி
3 கடைச்சனி
4 பாற்குளம்

அஸ்தத்தின் பெயர்
1 அங்கை
2 ஐம்மீன்
3 உத்தமன்
4 களிறு
5 நவ்வி
6 கௌத்துவம்

சித்திரையின் பெயர்
1 கன்னி
2 ஆடை
3 ஆம்பரன்
4 பயறு
5 நெய்
6 மீன்
7 செவ்வி

சுவாதியின் பெயர்
1 மரக்கால்
2 பதுமம்
3 தீபம்

விசாகத்தின் பெயர்
1 வைகாசி
2 முற்றில்

3 சுளகு
4 முறம்

அனுஷத்தின் பெயர்
1 புல்
2 தாளி
3 தேள்
4 பெண்ணை
5 பிணை

கேட்டையின் பெயர்
1 வல்லாரை
2 வாளி
3 துடங்கொளி
4 ஒளி
5 நாழி

மூலத்தின் பெயர்
1 கொக்கு
2 தேட்கடை
3 ஆனி
4 குருகு

பூராடத்தின் பெயர்
1 குளம்
2 பொய்கை
3 வாவி
4 உடை

உத்திராடத்தின் பெயர்
1 ஊர்தி
2 மணி
3 தானம்
4 முடி

திருவோணத்தின் பெயர்
1 சோணை
2 சிரவணம்
3 உலக்கை

அவிட்டத்தின் பெயர்
1 புள்
2 பறவை
3 காக்கை
4 ஆவணி

சதயத்தின் பெயர்
1 சுண்டன்
2 குன்று
3 செக்கி

பூரட்டாதியின் பெயர்
1 கொழுங்கோல்
2 நாழி
3 புரட்டை
4 ஞாளி

உத்திராட்டாதியின் பெயர்
1 முரசு
2 வேந்தன்
3 அறிவன்

ரேவதியின் பெயர்
1 நாவிதன்
2 கடைமீன்
3 தோணி
4 மரக்கலம்
5 சூலம்
6 நாவாய்
7 கிரகநிகண்டு

(சூரியன் பெயர்)
1 பக்கரை
2 பரியேழுர்த்தி
3 பகலவன்
4 பருதி
5 என்றாழ்

6 புண்டரீகன்
7 திவாகரன்
8 அருக்கன்
9 பானு
10 மார்த்தாண்டன்
11 ரவி
12 ஆதித்தன்
13 ஞாயிறு
14 அலரி

(சந்திரன் பெயர்)
1 பிறை
2 இந்து
3 சந்திரன்
4 சசி
5 சோமன்
6 மதிநாள்
7 கேழ்வன்
8 அம்புலி
9 நிலா
10 திங்கள்

(அங்காரகன் பெயர்)
1 சேய்
2 நிலமகன்
3 அங்குசன்
4 தீ
5 ஆரல்
6 பூமன்
7 வக்கிரன்
8 குருதி
9 செவ்வாய்

(புதன் பெயர்)
1 கணக்கன்
2 புந்தி
3 மதிமகன்
4 அருணன்
5 மால்
6 புலவன்
7 தூதன்
8 மேதை
9 பொறையன்
10 சாமன்

(குருவின் பெயர்)
1 பொன்
2 சீவன்
3 பீதகன்
4 இறைவன்
5 பார்ப்பான்
6 மந்திரி
7 வியாழம்
8 அந்தணன்

(சுக்கிரன் பெயர்)
1 புகர்
2 பிருகு
3 சுங்கன்
4 வெள்ளி
5 சிதன்
6 மழைக்கோள்
7 பார்க்கவன்

(சனியின் பெயர்)
1 முதுமகன்
2 முடவன்
3 நீலன்
4 பங்குகாரி
5 கரியவன்

6	கதிர் சேய்	(இராகுவின் பெயர்)
7	மந்தன்	1 கரும்பாம்பு
8	சுன்	(கேதுவின் பெயர்) 1 செம்பாம்பு

ஸ்தான வியல்பு.

கேந்திரம்	1, 4, 7, 10
பனபரம்	2, 5, 8, 11
ஆபோக்லீபம்	3, 6, 9, 12
திரிகோணம்	5, 9
உபஜெயம்	3, 6, 10, 11
மறைவு	6, 8, 12

அவயங்களின் பின்னம்

1. சந்திரன் உச்சம் பெற்றிருக்க,இரண்டாம் ராசியில் எட்டாம் வீட்டோனிருக்க 2, 3, 5, 9, 12-ல் சனி, இராகு, கேது இவர்களிருக்க இம்மூவரும் நின்ற ராசிக்குடைய கோட்களும் பலயீனம்பெற லக்னாதிபதி நின்ற ராசிக்கு 5-ல் கேது நிற்க—ஊமையாய் ஜெனிப்பன்.

2. விருச்சிகம் நாலாங்கால் ஜெனனமாக அவ்ராசியில் பாவக்கோளிருக்க சேய், சனி, சந்திரன் இவர்கள் கூடி இருக்க—குறளுருவமாய் ஜெனிப்பன்.

3. லக்கினாதிபதிக்கு 5, 8-ல் சனி நிற்க சனி நின்ற ராசிக்கு 12 ஆம் ராசி, ஜெனனராசியாக 12-ல் செவ்வாய் நிற்கினும், மீனலக்கினமாக ஜெனித்தோருக்கு சனி, சந்திரன்கூடி இருக்கினும், ஜெனன நக்ஷத்திரம் ஆயிலியமாக லக்கினத்தில் கேது நிற்க—மூடமாய்ப் போவான்.

4. குரு, புதன், சந்திரன் இவர்கள்கூடி ஓர் ராசியிலிருக்க (அல்லது) ஜெனனராசிக்கு 5 ஆம் ராசியிலிருக்க 5, 8 ஆம் ராசியில் இராகு நிற்க, லக்கினத்தில் சந்திர நிற்கினும் 3, 11 சனி இராகு நிற்கினும்—செவிடாகப் போவான்.

5. மகர ராசி ஜெனன ராசியாக அவ்ராசியில் சனி, சந்திரன் செவ்வாய் இவர்கள்கூடி இருக்கப்பிறந்தவன்—கூனுடையவனாவான்.

6. கடக ராசியில் ஜெனனமாக சந்திரனை, குஜனும் சனியும் சேர்ந்து நோக்கினாலும், மேற்படி சந்திரனோடு சகிதம் பெற்று நிற்கினும்—கூனுடையவனாவான்.

7. மேடராசியில் ஜெனிக்கில் மேடராசியில் சனி நிற்க 3 அல்லது 4 ஆம் ராசியில் புதனிருக்க—குறளுருவமாம்.

8. உத்திர நக்ஷத்திரத்தில் ஜெனிக்க ஜெனனராசி எந்த ராசியானாலும் அவ்ராசியில் சுக்கிரனிருக்க—மூடவனாவான்.

9. சுக்கிரனோடு சந்திரன்கூடி இருக்க ஜெனனராசிக்கு இரண்டாம் வீட்டுக்குடையவன் ஜெனன ராசியில் சேர குஜன், சனி இவர்கள் பார்த்தாலும் கார்த்திகை, மூலம் இந்நாட்களில் கேதிருந்தாலும், ரேவதி, பரணி, ஆயிலியம், பூசம், சித்திரை சோதி. இந்நாட்களில் சனி நிற்கினும். மேற்சொல்லிய கோட்கள் 2, 6, 8, 12 இவ்ராசிகளிலிருக்கினும்—கண் குருடாவன்.

10. ஜெனனராசிக்கு 1, 2, 7, 8 முதலிய ஸ்தானங்கள் ரிடபம், சிங்கம், கும்பமாக அவ்ராசிகளில் ஒன்றில் சூரியன் கொடிய கோட்களுடன்கூடி இருக்க. மேற்சொன்ன ஸ்தானாதிபதிகள் 3 ஆம் இடத்திலிருக்க—வலது விழியை இழப்பான்.

11. 1, 6, 7, 12 முதலிய ஸ்தானுதிபர்கள் மறைந் திருக்கில் அந்த ஜாதகன்—இடது விழியையும் இழப்பான்.

12. இரண்டாம் ராசி நாதன் ஜெனன ராசியிலிருக்க. சூரியன் சிங்கராசியில் ஆக்ஷிபெற. அவனைப்பாவக் கோட் கள் பார்ப்பரேல்—மாலைக் கண்ணுவான்.

13. லக்கினம் மேடராசியாக சூரியன் சந்திரனேடு பாவகோட்கள்கூடி இருக்க குஜனுல் பார்க்கப்பட்டால்— சேய்படலைக் கண்ணேன்ப.

சனி பார்க்கில்—கரும்படலைக் கண்.

சுக்கிரன் பார்க்கில்—பூம்படலைக் கண்.

இரவியுடன் சந்திரன் சேர்ந்து க்ஷீணம்பெற—கால ருந்துபோம்.

அமாவாசை தோஷம் பின்வரும் பக்கம் பார்க்கவும்.

மதியுடனே கேது நிற்கில்—தலை யருந்துபோம்.

12 ஆம் இராசியில் சூரியனும், சந்திரனுமிருந்து நீச் சம், பகைப்பெற்றுமிருந்தால். மத்திய வயதில் இரண்டு கண்களும் மத்தியமாம்.

இரவிக்கு வலது கண்ணென்றும் சந்திரனுக்கு இடது கண்ணென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. விழிகளின் பின்னங்களை. மேற்சொன்ன கிறகங்களையோ ஸ்தானங் களையோ, குரு பார்க்காதிருக்கில் கட்டாயமாய் கண் குரு டாவா னென்றும். ஷை குரு நோக்கில் திசைக்கேற்றபடி சில நாளிருந்து நீங்குமென்றும் கூறவேண்டும்.

ஓர் ராசியை அறுபதாகப் பகிர்வது சஷ்டியாம்ச மென் றும் பெயர். ஒற்றை ராசியாயின் ஜெனன ராசிக்கு நேரா

யும் இரட்டைக்கு விகிர்த்தமாயும் நடத்துவது முறையாகும்.

சஷ்டியாம்சம் பெயர் கீழ்வருமாறு.

1. கோரம்
2. இராக்கதம்
3. தேவம்
4. குபேரம்
5. இராகதபோகம்
6. கின்னரம்
7. இட்டகுலசோபம்
8. விஷம்
9. அக்கினி
10. அகளங்கம்
11. மாயாந்தம்
12. பிரேதபுரிபரவம்
13. அதிதேவம்
14. கணேசம்
15. காலம்
16. சர்ப்பம்
17, அமிர்தம்
18. அபிராமம்
19. கிருது
20. கோமடம்
21. பிரபலம்
22. சுவாசம்
23. ஈசும்
24. வாகீசம்
25. திகம்பரம்
26. தேவேந்திரம்
27. கவிதை
28. நாசம்
29. பூபதி
30, கமலம்
31. சனிசுதம்
32. பவாத்தகம்
33. அக்கினிகோரம்
34. எமகண்டம்
35. சுதம்
36. அமிர்தபூரணம்
37. சத்திரம்
38. மதிமயக்கம்
39. சௌபாக்கிய
40. குலநாசம்
41. முக்கியம்
42. வங்கிசநாசம்
43. உத்பாதம்
44, காலரூபம்
45. சௌமியம்
46. மிருதம்
47. சுசிதவம்
48. திமிரம்
49. திவா
50. சந்திரமுகம்
51. பிரதக்ஷணம்
52. காலாக்கினி
53. தண்டம்
54. நிருமலம்
56. சுபம்
56. அசுபம்
57. அதீதம்
58. பயோததி
59. சுழல்
60. சந்திரதேகமாம்

மேற்சொன்னபடி ஜெனனராசியை அருபதாகப் பங்கிட்டு எந்த பாகத்திலுதித்தானோ அந்த எண்ணின்படி மேல்காட்டிய யோகப்பெயர்களை கண்டுகொள்க.

கிரஹ அவஸ்தை

ஒவ்வொரு ஜாதகத்திற்கும் அமைந்துள்ள கிரகங்களுக்கு அவர்கள் ஏறிய நக்ஷத்திரபாத சாரப்படி வாலீபமென்றும் குமாரமென்றும், விருத்த பருவமென்றும், போஜன கெமன, ராஜ்ஜிய, நித்திர, மிருதமென பிறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் போஜன காலமாகில் நிற்சன போஜனம், அன்னதானம், சுயம்பாகம், உறவினரோடுண்டு மகிழ்தல், இஷ்டமான அன்னங்களையுண்டு களித்திருத்தல், சவுக்கியபோஜனமென்றும் கூறுவர்.

(கெமனு), காலமாகில் சஞ்சாரம், வெகுவாகனம், தீர்த்த யாத்திரை இடம் விட்டுப்பேருதல், கலியாண விஷயமாய், அன்னிய கிராமங்களுக்குச் செல்லல், வாகனங்கள் பூட்டிய சாரதிமூலமாய் யாத்திரைவாசம் செய்தல் முதலியவைகளும்.

(இராஜாதிபத்தியமாகில்), ஓர் தேசத்திற்காவது, கிராமத்திற்காவது, (அ) ஓர் வீட்டிற்காவது, அதிபதியாகுதல் பற்பலபண்டு பண்டாரங்களைச்சேர்க்குதல் யானை குதிரை முதலிய வாகனங்களை யடைதல் மனசந்தோஷமாய் இருத்தல் முதலியவைகளும்.

(நித்திரைகாலமாகில்), மனைவியால் வியாகூலமும், எந்த நேரமும் மயக்கம் சோம்பல், நித்திரையும் மனைவி மூலமான சந்தேகம், பயம் முதலியவைகளும் சயனமூலமான, சந்தோஷங்களும், அன்னியதாரங்களையோ (அல்லது) ஸ்ரீகளையோ சேர்தலும் உண்டாகும்.

(மிருதகாலமாகில்), தீரேக நலி, ஜாட்டியம். கவனபிழை, ஆபத்துண்டாதல், இராஜாக்களால் தொந்தரவு தண்டனையடைதல், விஷந்தீண்டல், விஷப்பிணி கருவிகளால் காயமும் ரோகமும் உண்டு.

குறிப்பு:—இதனால் ஒவ்வோர் கிரகங்களுக்கும் 5 பருவம் உண்டென ஏற்படுகிறது. ஆகையால் அப்பருவங்களை நக்ஷத்திர பாதங்களாலும், கலைகளாலும், பகிர்ந்து எந்த பாகமெனத்தெரிந்து, பாகத்திற்கேற்றவாறு. மேற்சொன்ன போஜன கெமனு; இராஜாதி நித்திரை மிருத மெனக்கொண்டு பலன் சொல்லுக. இவை திசைபுக்திகாலங்களிலும் ஏற்றவாறு பலன் சொல்லலாம்.

யோகவிவரம்

காடே வீடாகக்கொண்டு, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சர்யம் முதலியவைகளையும், கள், காமம், பொய், கொலை, களவு முதலிய பஞ்சமாபாதகங்களையும் அடியோடகற்றி மழை வெய்யல் பனி முதலியவைகளைப் பொருட்படுத்தாது. எந்நேரமும், குருதேவசகாயமென்னும் திருநாமத்தையே பாராயணம் செய்து, வாசனைக் கமழாநின்ற செவ்வாம்பலைப்போ லழகிய, திருவாயையுடைய, சிவசுப்ரமண்யக் கடவுளால் பூமியிலுதித்த மானிடர்கள். யோகங்கள் என்னென்ன வென்று கேட்க சிவசுப்ரமண்யர் திருவாய்மலர்ந்தருளிய தாவது. பரிசுத்தர்களே பூமியிலுதித்த மானிடர். புண்யாத்மாக்கள். அருக்கன் மண்ட

மார்க்கமாய் மோக்ஷமடைவாரென்றும் பாப ஆத்துமாக்கள். சந்திரமண்டலமார்க்கமாய், சென்று மறுஜெனனமாகி பூமியிலுதித்தபோதும். அவரவர்கள் வினைக்கேற்றவாரே, நவகோட்களால் பலனையனுபவிப்பார். என்றும் கூறியதோடு யோகங்களில் பற்பல யோகமுள்ளன அவைபாவன.

பிரம்மயோகம், விஷ்ணுயோகம், உருத்திரயோகம், அம்பிகாயோகம், லாவண்யயோகம், சற்பயோகம், கெந்துருவயோகம், மிருகயோகம், தூமயோகம், சித்திரயோகம். தீபயோகம், சண்டிகாயோகம், கார்முகயோகம், சடாமகுடயோகம், வீணையோகம், இராஜயோகம், அறுவகை இராஜயோகம், நக்ஷத்திரயோகம், பாசகயோகம், மீன்யோகம், ஜலயோகம், கேதாரயோகம், பூதலயோகம், அன்குலியோகம், அசுரயோகம், கஜயோகம், மாரியோகம், தண்டயோகம், ரிஷபயோகம், சக்கரயோகம், கந்துகயோகம், சரயோகம், சந்திரிகாயோகம், மேகயோகம், வாவியோகம், பூதரயோகம், தந்துயோகம், சாபயோகம், படவுயோகம், நாபியோகம், விதண்டயோகம், புஷ்பயோகம், சுபயோகம், அசுபயோகம், வேதாந்தயோகம், கிரீடயோகம், சுவாசயோகம், பத்திரயோகம், காமினியோகம், இந்திரயோகம், மிருகயோகம், கருடயோகம், பசுயோகம், தாமயோகம், சரஸ்வதியோகம், சண்டயோகம், இரலையோகம், சேஷயோகம், சமுத்திரயோகம், கனயோகம், பாதாளயோகம், சாஸ்திரயோகம், வசனயோகம், அக்ஷயோகம், நாசிகாயோகம், கர்ணயோகம், ருசகயோகம், பத்திரயோகம், அங்கிசயோகம், மாளவியோகம், சகசயோகம், கடகயோகம், மிருதங்கயோகம், லக்ஷிமியோகம், சங்கயோகம், கூர்மயோகம், சாரதயோகம், ஏர்காளயோகம், இருவகைக்காளயோகம், பேரிகையோகம், சாமரையோகம், கமலாயோகம், திரிமூர்த்தியோகம்,

பரமானந்தயோகம், பருப்பதயோகம், மச்சயோகம், இகராமாலிகாயோகம், வாசியோகம், வேசியோகம், உபசரியோகம், அபையோகம், சுபயோகம், துருதுரையோகம், கெசகேசரியோகம், நீசபங்கராஜயோகம், கோளகையோகம், பூபயோகம், சூலயோகம், கேதாரயோகம், தூமன்னியயோகம், சிரியோகம், உதகயோகம், தடாகயோகம், பாரணயோகம், வச்சிரயோகம். சமுத்திரயோகம், ஞானயோகம், முயல்யோகம், சக்கரயோகம், எனவும் இன்னும் பற்பலயோகங்களுமுண்டு. எனவும் இவ்வாறு பலபெயர்களைக்கொண்ட யோகங்களையே முன்சொன்னபடி அவரவர்கள் வினைக்கேற்றவாறு ஒவ்வோர் யோகத்தை அனுபவிப்பார்களென்றும், எவ்விதயோகங்கள் வரினும், 3, 4, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17-வருஷம் வரையிலுமிருக்குமென்றும் எவ்விதயோகம், வரினும் 3 வருஷங்களுக்கு குறையாதிருக்குமென்றும், பிருகபாணி அருளிபபடியே, இந்தயோகம், மானிடர்களுக்குச் சித்திக்குமென்று சாஸ்திரங்களில் கூறியபடி நாம் ஓர் ஜாதகத்தைப்பார்த்து குருவும் சந்திரன் ஓர் ராசியிலிருந்தால் குரு சந்திரயோகமென்றும், அதன்பலன் மேதாவி, உற்சாகி, பலராலும் போற்றப்பட்டவன், புஷ்பக்கட்டிலிலுறங்குபவன் என்றும் அளவிடமுடியாதயோகம், உண்டாய்விடுமென்று வர்ணித்துவிடுவது மிக்கதவரென்பதை, அறிவிப்பதோடு ஜோதிடர்கள் முதன்முதலாக ஜாதகம் எழுத ஆரம்பிக்கும்போது,

ஜெனித்தஜென்ம சவுக்யானும் வர்த்தனிகுல

சம்பதாம்பத விபூர்வபுண்யானும், என்று எழுதிய பிறகே மற்றுமுள்ள விஷயங்களை எழுதுவதுசகஜமாயிருப்பதால் மேற்சொன்ன செய்யுளின் கருத்தென்னவென்று ஆராய்ந்து பார்க்கும்போது, எவ்விதமானயோகம்

வரினும், அவனவன் புண்ணியம், அல்லது பாவத்திற்கேற்ற வாரே பலனையனுபவிப்பார்க ளெனத்தோற்றுகிறது. ஓர் பரம ஏழையின் குடும்பத்தில் முன்சொன்னயோகங்களில் ஒன்ருன கூஷிமியோகத்தில், ஜெனித்ததாக வைத்துக் கொள்வோம். அப்போது அவன் என்னபலனை யனுபவிப் பான். பரம ஏழையாகிய உண்ணவும் உடுக்கவும், வழியில் லாதவன். சிவசுப்ரமண்யக்கடவுள் கிருபையால், உண்ணவும் உடுக்கவும் குறைவின்றி இருப்பானேயொழிய, ஓர் தேசாதி பதியாய் வருவது, ஆயிரத்திற்கொருவரேயாகும். ஆதலால் சோதிடர்கள் முன்சொன்ன யோகத்தின்படி கிரகவரிசை யால் ஆராய்ந்து யோகத்திற்குத்தக்கவாறு பலன் சொல்ல வேண்டும். இந்த யோகங்களைப்பற்றிய விவரம் பின்வரும் (99) ஆம் பக்கத்தில் சிலயோக விவரங்களைப்பற்றியே கூறி யுள்ளேன் ஆகையால். மற்றுமுள்ள யோகங்களைப்பற்றி 2, 3 ஆம் பாகம் பார்க்கவும்.

யோகபாவம்

ஜெனன லக்கினுதிபதிக்கு நான்காம் வீடாகிய சுகஸ் தானமும், ஆக்ஷியாகிய கோட்களும். ஜெனன ராசியில் சந் திரனும், 3 ஆம் வீட்டோன் உச்சம் பெற்று இருந்தால் அவனுதித்த $1\frac{1}{2}$ வருடத்திற்கு மேலும் 30 வருடத்திற்கு மேலும். சகலவிதமான செல்வமும் உடையவனுகி சவுக் கியத்தோடிருப் பானென. மூன்ரும் பிரைச்சந்திரனை யொத்த புருவத்தையும், கருத்தபுருவமுடைய கண்களென அனைவரும் புகழத்தக்கப் பெண்ணை கூறுவாயாக.

ஒன்பதாமிடத்தோனுன பாக்ய ஸ்தானுதிபதி மரவிட மென்னும். மூன்ரும் ராசியிலிருக்க, அவனை குருபார்க்க அதனை சர்ப்பயோக மென்றும் கூறுவர். அவற்றின் பலனைச்

சொல்லுமிடத்து. இன்பத்தைத் தரத்தகும், அவனுதித்த வருடம் 6-க்குமேல் மூன்று வருடம் வரையில் நல்ல யோகத் தோடிருப்பானென. அழகு பொருந்திய பெண்ணை கூறு வாயாக.

ஜெனன ராசிமுதல் 5 வீடு வரையில் 7 கிரகங்கள் வரிசைபெற அமர்ந்திருக்குமாகில். காட்டில் வாசம் செய்யும் சர்ப்பயோகமென்று சொல்வர். அவற்றின் பலன் அவனு தித்த முதலினும் கடைசியினும் இங்காட்டி லடையவேண் டிய செல்வம் யாவும் அனுப்பவித்தே தீருவான்.

ஜெனன ராசிக்கு 5-ஆம் வீடான பஞ்சம ஸ்தானுதி பதி மூன்று அல்லது 11 ஆம் வீட்டிலிருக்க. குருவோடு புதன் கூடியிருக்க சூரியன் மேடராசியில் உச்சம்பெற வெண்மைப்பிரசாகமுடைய சந்திரன் 9 ஆம் இடமென்னும் பாக்கியத்திலு மிருந்தால். காந்தர்வயோக மென்றும் பெயர். அவற்றின் பலன் அவனுதித்த 6 வருடத்திற்கு மேல் எட்டு வருடம் வரையில் யோகமுண்டு என்பதாம்.

ஜெனன லக்னுதிபதி ஏவரங்கிசம் பெற்றுனே. அந்த அங்கிசாதிபதி 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் சுப கிரகங்களுடன்கூடி நிற்க 9 ஆம் வீட்டதிபதி உச்சம்பெற மிருகயோக மென்றும் கூறுவர். அவற்றின் பலன். அவனு தித்த 7 வருடத்திற்குமேல் ஒன்பது வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

பன்னிரண்டாம் வீட்டதிபதி பன்னிரண்டிலேயே ஆக்ஷிபெர. அஷ்டமாதியாகிய 8 ஆம் வீட்டோன் நற் பலனை தரும். நான்காம் வீட்டிலேனும் 12 ஆம் வீட்டி லாவதிருக்க. அவனை 9 ஆம் வீட்டதிபதி பார்க்க. அவ னுக்கு மிருகயோக மென்றே கூறுவர். அதன்பலன் அவ

னாதித்த 40 முதல் 32 வருடம் வரையில் யோகமுடையோனாகவே இருப்பான்.

குஜன் நின்ற அங்கிசாதிபதி நின்ற வீட்டிற்கும் சந்திரன் நின்ற ராசிக்குடையோன் நின்ற வீட்டிற்கும். 5, 9 என்னும் இடங்களில் நற்பலனைத் தருவோரான. குரு, சுக்கிரனிருக்க. 10 ஆம் வீட்டில் சனி உச்சம்பெற நிற்க பிறந்தவனுக்கு தூபயோகமென்றும் கூறுவர். அதன் பலன் தானுதித்த 54 வயதுக்குமேல் 9 வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

சிலர் 9 வருடத்திற்குமேல் 9 வருடம் வரையில் யோகமுடையோனாக இருப்பான் என்றும் கூறுவர்.

பெருமையும், அருமையுடைய புதன் எவரங்கிசம் பெற்றானே அந்த அங்கிசாதிபதி பஞ்சம ஸ்தானமான 5 ஆம் வீட்டிலிருக்க அவனுடன் சூரியனிருந்தாலும் பார்த்தாலும். அந்த ஜாதகனுக்கு திருவாராதனை என்னும் தூபயோகமென்றும் கூறுவர். அதன் பலன் அவனுதித்த 11 வருடத்திற்குமேல் மூன்று வருடம் யோகமுடையோனாக இருப்பான்.

உதயவர் கோத்தும ராசியில் குரு விருக்கவும் அவனை பலம் பெற்ற சுக்கிரன் பார்க்க. 9 ஆம் வீட்டோனான பாக்கியாதிபதி உச்சம்பெற அவனுக்கு தூபயோக மென்றும். அதன் பலன் அவனுதித்த 45 வருடத்திற்குமேல் 47 வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

தனாதிபதியாகிய இரண்டாம் வீட்டதிபதி 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திலிருக்க 9 ஆம் வீட்டுக்குடையோன் 11 ஆம் இடமான லாப ஸ்தானத்திலிருக்க பெரு

மையையுடைய 11 ஆம் வீட்டோன் உச்சம் பெற்றிருக்க. அவனுக்குச் சித்திரயோக மென்றும் பெயர். அதன் பலனைச் சொல்லுமிடத்து அவனுதித்த ஒன்பது வருடத்தின்மேல் 10 வருடம் வரையில் யோகத்தோடிருப்பானென. வனங்களிலுள்ள புஷ்பங்களின் அழகைப் பார்க்கிலும் மிகுந்த அழகையுடைய பெண்ணே கணிதவல்லோர் கூறுவார்.

ஆறாம் வீட்டோனாகிய சத்ரு ஸ்தானாதிபதி 9 ஆம் வீட்டோனான பாக்கிய ஸ்தானாதிபதியின் அங்கிசம்பெற்று. தெள்ளிய பிரகாசத்தையுடைய சூரியனுடன்கூட. ஜெனன ராசி திரராசி என்னும் ரிடபம், சிங்கம், விருக்ஷீகம், கும்பம் இவை ஜெனன லக்கினமாகி அவனை மேற்சொல்லிய கிரகங்களாவது ஆறாம் வீட்டோனாவது பார்க்க சண்டிகா. யோகமென்றும் கூறுவர். அதன்பலன் அவனுதித்த 11 வயதுக்குமேல் 11 வருடம் யோகத்தோடிருப்பான்.

நான்கு, பத்து என்னுமிவ்விராசிக் குடையோர். வெவ்வேறு ராசிகளிலிருக்க, புதன் உச்சம் பெற்றிருக்க. அவனுக்கு சாலயோக மென்றும் பெயர். அதன் பலன் அவனுதித்த பன்னிரெண்டு வருடத்திற்குமேல் 7 வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

ஜெனன லக்கினத்திலேயே உச்ச கிரகமிருக்க அவனை குஜன் பார்க்க. பாக்கியாதிபதியான 9 ஆம் வீட்டோன் மூன்றாமிடமான மறவிட ஸ்தானத்திலிருக்க அவனுக்குச் சடாயோக மென்றும் பெயர். அந்த யோகமுண்டாகும் காலத்தைச் சொல்லுமிடத்து அவனுதித்த 12 வருடங்களுக்குமேல் 3 வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

ஆயுஷ்தான மென்னும் எட்டாம் வீட்டோன் லக்கினத்திற்கு மூன்ருமிராசியில் உச்சம்பெற்று நிற்க. லாபஸ்தானுதிபதியான 11 ஆம் வீட்டோன் இரண்டாமிடமான தன ஸ்தானத்திலிருக்க அவனுக்கு வீணை யோகமென்றும் பெயர். அவையுண்டாகும் காலத்தைச் சொல்லுமிடத்து அவனுதித்த பன்னிரெண்டு வருடத்திற்குமேல் பன்னிரெண்டு வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

ஜெனன ராசி முதல் 7 கிரகங்களும் அடுக்காய் வரிசைப்பெற அமர்ந்திருக்குமாகில் அந்த ஜாதகனுக்கு வீணை யோகமென்றும் பெயர். அதன் பலனைச் சொல்லுமிடத்து ஆடல்பாடல் முதலிய சந்தோஷ காரியங்களில் எந்த நாளும் நீங்காத பிரியமுள்ளவனுகி இருப்பதோடு அவற்றில் மிக்க சாமார்த்திய முடையோனுகவு மிருப்பான்.

ஜெனன ராசிக்கு 10 ஆம் வீட்டோனுன கருமஸ்தானுதிபதி 9 ஆம் வீட்டுக்குடையோனங்கிசம் பெற்று பெருமையைப் படைத்த இரண்டாமிடமான தனஸ்தானத்திலிருக்க. அனனுடன் மேற்சொன்ன 9 ஆம் வீட்டோனுன பாக்கிய ஸ்தானுதிபதி கூடியிருக்க. அந்த ஜாதகனுக்கு பர்ப்பல ஜகஜாலங்களைச் செய்யும் மனவிஷ்ணு யோகமென்றும் பெயர். அவற்றின் பலன் அவனுதித்த பதினுன்கு வருடத்தின்மேல் அளவிட முடியாத சமுத்திரத்தைப் போன்ற செல்வத்தைப் படைத்து லக்ஷாதி காரியாகி வாழ்ந்திருப்பான்.

ஜெனன ராசிக்கு 10 ஆம் ராசியான கரும ஸ்தானத்தில் குஜனிருக்க சூரியன் உச்சம்பெற்று இரண்டாமிடமான தன ஸ்தானத்திலிருக்க சந்திரனும், குருவும் ஒன்பதாமிடமான பாக்கிய ஸ்தானத்திலிருக்க அவனுக்கு இரவி

யோகமென்றும் பெயர். அவற்றின் பலன் அவனுதித்த பதினுன்கு வருடங்களுக்குமேல் எட்டு வருடம் வரையில் யோகத்தையுடையவனுக இருப்பான்.

ஜெனன ராசிக்கு இரண்டாம் வீட்டோனும் பத்தாம் வீட்டோனும், 11 ஆம் வீட்டோனுன லாபாதிபதியும் ஆகிய இம்மூவர்களிலொருவர் சந்திர நின்ற ராசிக்கு 1, 4, 7, 10 என்னும் கேந்திரங்களிலொன் றிலிருக்க. மேற்சொன்ன ஜெனன லக்கினத்திற்கு 5 அல்லது 11 அல்லது 5, 9 இவ்விரண்டிற்கும் ஆக்ஷிநாதன் குருவாகவும் இருந்தால் அந்த ஜாதகனுக்கு ராஜயோகமென்றும் பெயர். அவற்றின் பலன் அவனுதித்த 15 வருடத்திற்குமேல் அந்த ராஜ யோகத்தை அனுபவிப்பானென. அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக.

ஒன்பதாம் வீட்டோனுன பாக்கியாதிபதி எவரங்கிசம் பெற்றுனே அந்த அங்கிசாதிபதி குருவுடன் சேர்ந்து ஜெனன ராசிக்கு இரண்டாமிடமான தனஸ்தானத்திலிருக்க இரண்டு ஒன்பதுக்குடையோனும் குருவாக இருக்கில் அந்த ஜாதகனுக்கு ராஜயோகமென்றும் பெயர். அதன் பலன் அவனுதித்த பதினைந்து வருடத்திற்குமேல் அவன் அந்திய வயதான 100 வயது வரையில் நல்ல யோகமுடையோனுகவே இருப்பான்.

கரும்பாம்பாகிய இராகு நின்ற வீட்டுக்குடையோன் உச்சத்திலாவது திரிகோணங்களிலாவதிருக்க குஜன் ஆக்ஷி உச்ச முதலியவைகளால் பலம்பெற்றிருக்க அவனுக்கு ராஜயோகமுண்டு. அவை அவனுதித்த 15 வருடத்திற்குமேல் 100 வயது வரையினும் யோகத்தைத் தருமென கூர்மையான கண்களையுடையவளே கூறுவாயாக.

பலத்தையுடைய திரராசிகளிலொன்றில் ஜெனனமாகி அவ்விராசியில் சுக்கிரனிருக்க சரலக்கிணத்தில் குருவிருக்க அந்த ஜாதகனுக்கு ராஜயோகமென்றும் கூறுவர். அவற்றின் பலனைச் சொல்லுமிடத்து அவனுதித்த 15 வருடத்திற்குமேல் அவனாயுளுள்ள வரையிலும் அந்த ராஜயோகமுண்டென்று கணிதவல்லோரான ஜோதிடர்கள் கூருவர்.

நான்காம் வீட்டோனான சுகஸ்தானாதிபதி நின்ற ராசிக்குடையோன், பத்தாமிடமான ஜீவனஸ்தானத்தில் நிற்க அவனுடன் புதன்கூடி இருந்தாலும், அல்லது ஒருவருக்கொருவர் பார்த்தாலும், அவனுக்கு ராஜயோகமென்றேகூறுவர். அப்பலனை அவனுக்கு வாலிப வயதாகிய வயது 16-க்குமேல் அவன் ஆயுள் உள்ளவரையில், அனுபவிப்பான்.

சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, ராகு, சுக்கிரன், சனி, ஆகிய 8 பேரும் சரராசிகளான, மேஷம், கடகம், துலாம், மகரம், என்னும் இராசிகளில், இருப்பார்களேயானால் ராஜயோகமாகும் அவற்றின் பலனைச்சொல்லுமிடத்து. அன்னியரிடம், யாசகம் செய்வோனும், ஓயாது வழிப்பிரயாணமும், அலைச்சல், திரிச்சல் உடையவனுமாவான்,

ஜெனராசிக்கு எட்டாமிடமான அஷ்டமஸ்தானத்தில் சுக்கிரனும், குருவுமிருக்க ஜெனனலக்கினத்தில் புதனிருக்க ஜெனன லக்கினம் சரராசியாயும் ஜெனன ராசிக்கு 5, 7, 11, இவ்விடங்களில் சூரியன், சந்திரன், சனி இவர்களிருக்க அந்த ஜாதகனுக்கு மந்தாகினியோகமென்றும் பெயர். அந்தபலனை, அவனுதித்த 27 ஆண்டுகளுக்குமேல் 16 ஆண்டுகள் வரையில் அனுபவிப்பான்.

ஜெனனராசிக்கு 5, 9, 7, 10, என்னுமிடங்களில் சுபர்களாகிய சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இவர்களிருக்க, அவர்களை தீயகிரகங்கள் நோக்காதிருக்குமாகில் அவனுக்கு மேதினி யோகமென்றும் பெயர். அப்பலனுண்டாகும் காலத்தைச் சொல்லுமிடத்து, அவனுதித்த 27 வருடத்திற்கு மேல் 5 வருடம் வரையில் அந்தயோகமுண்டாகுமென கூறுவர்.

பத்தாம் வீட்டோனான ஜீவனஸ்தானாதிபதி ஜெனன லக்கினாதிபதியின் அங்கிசம்பெற்று பலம் குறையாதிருக்க 10 ஆம் வீட்டோனங்கிசத்தில் ஜெனன லக்கினாதிபதி இருக்க இவ்விருவரையும் சுபகோட்களிலொருவராகிய குரு பார்க்க. அந்த ஜாதகனுக்கு கார்முகயோகமென்றும்பெயர். அந்தயோகம் அவனுதித்த 30 வருடத்திற்குமேல் 9 வருடம் வரையில் அனுபவிப்பான்.

யாவரும் போற்றப்படும் பாக்கியாதி என்னும் 9 ஆம் வீட்டோன் நின்றது வாதசாங்கிசத்தில், 5 ஆம் வீட்டோனுடன் கூடிய சந்திரனும் நிற்க அவனுக்கு ராக்ஷஸயோகமென்றும் கூறுவர். அவற்றின் பலன் அவனுதித்த 28 வருடத்திற்குபேல் 7 வருடம் வரையில் மேன்மையான யோகத்தோடிருப்பான்.

பஞ்சமாதி என்னும் 5 ஆம் வீட்டிற் குடையோன் மறைந்திருக்கவும், 2, 4, 11 ஆம் வீட்டுக்குடையவர்கள். வெண்ணிறமுடைய சந்திரனைக்கூடி இருக்க, அவனுக்கு தோணியோகமென்றுக் கூறுவர். அந்தப்பலன் அவனுதித்த 30 வருடங்களுக்குமேல் 3 வருடம் வரையில் இவ் பூமியில் மேலான யோகத்தை யுடையோனாக இருப்பானெனகற்றறிந்த மேதாவிகள் கூறுவர்.

ஜெனன ராசிக்கு 11 ஆம் ராசியான லாபஸ்தானத்தில் குருவும், குருநின்ற ராசிக்குடையோனான 11 ஆம் வீட்டோன் குருநின்ற வீட்டிற்கு 11 ல் பூரண சந்திரனுடன் கூடி நிற்க. அவனுக்கு நாபியோக மென்றும் பெயர். அவனுதித்த 30 வருடத்திற்குமேல் 3 வருடத்திற்கு 15 ஆயிரம் பொன்னைப்படைத்து இனிமையாய் வாழ்ந்திருப்பான்.

ஜெனன ராசிக்கு 10 ஆம் வீட்டில் இராகுவிருக்க 10 ஆம் வீட்டிற்காக்ஷிநாதன் உச்சம் பெற்றிருக்க அவர்களை சனியும் குஜனும் பார்க்க அந்த ஜாதகனுக்கு முசல யோகமென்றும் பெயர். அந்தயோகத்தை அவனுதித்த 31 வருடத்திற்குமேல் 3 வருடம் வரையில் நல்லமேன்மையைப் படைத்தயோகத்தோ டிருப்பானென அழகுபொருந்திய பெண்ணே கூறுவாயாக.

ஜெனன லக்கினத்திற்கு 5 ல் சந்திரனிருக்க அந்த ஐந்தாம் வீட்டிற்குடையோன் உச்சம் பெற்றிருக்க. 9 ஆம் வீட்டோனான பாக்யஸ்தானாதிபதி இரண்டாமிடமான தனஸ்தானத்திலிருக்க அவனுக்கு பூபயோகமென்றும் பெயர். அந்தயோகத்தை அவனுதித்த 32 வயதுக்குமேல் அவன் ஆயுளுள்ள வரையில் அனுபவிப்பான் என்றும் நல்ல சம்பத்துடையோனாக இருப்பான் என்றும் கூறுவர்.

ஜெனன லக்கினமுதல் 1, 2, 3, 4 ராசிகளுக்குள் 7 கிரகங்கள் அமர்ந்திருக்குமாகில் அந்த ஜாதகனுக்கு பூபயோக மென்றும் பெயர். அவன் தரும்பலனைச் சொல்லுமிடத்து யாகம் செய்பவனும் பெண்களுக்கெல்லாம் மிக்க சிறப்பு பொருந்தியவனாகவு மிருப்பானென அழகு வாய்ந்த பெண்ணே கூறுவர்.

ஜெனன ராசிக்கு 9 ஆம் வீட்டதிபதியான பாக்கிய ஸ்தானாதிபதி ஜெனன லக்னாதிபதியின் வர்க்கம்பெற. லக்னாதிபதி 9 ஆம் மிடத்திலிருக்கவும் வெண்ணிறமுடைய சந்திரனுக்கு 9 ஆம் ராசியில் மேன்மையைப் படைத்த குருவிருக்கவும் ஜெனித்தவனுக்கு கேதாரயோக மென்றும் பெயர். அந்த யோகம் அவன் ஜெனித்த பதினாரு வயதுக்குமேல் 3 வருடம் வரையில் அனுபவிப்பானென கற்றறிந்தோர் கூறுவர்.

ஏழாமிடமான காமஸ்தானாதிபதி எவரங்கிசம் பெற்றானோ அந்த அங்கிசாதிபதி உச்சம்பெற்று 10 ஆம் வீட்டோனுடன் கூடியிருக்க. அதனை வம்சயோகமென்றும் கூறுவர். அதன் பலனைச் சொல்லுமிடத்து அவனுதித்த பதினேழு வருடத்திற்குமேல் எட்டு வருடம் வரையில் மிக்க செல்வத்தோடிருப்பான் என. மன்மதனைவிட மிகுந்த இன்பசாகர்முடைய மாதே என்று கூறுவர்.

5 ஆமிடமான பஞ்சம ஸ்தானாதிபதி சுக்கிரனுடன்கூடி ஜெனன லக்கினத்திலேயே நிற்க, 11 ஆமிடமான லாப ஸ்தானாதிபதி நட்பு, ஆக்ஷி, உச்சம் முதலியவைகளிலிருந்தால் அந்த ஜாதகனுக்கு மதனயோக மென்றும் பெயர். அதன் பலன் அவனுதித்த 25 வருடத்திற்குமேல் ஏதொரு குறைவுமின்றி எட்டு வருடம் வரையில் மேற்சொன்ன யோகத்தை யனுபவிப்பான். எனக்கூறுவர்.

(எவ்விதமேனும்) 5 ராசிக்குள் 7 கிரகங்களிருக்குமாகில் அவனுக்கு பாசகயோகமென்னும் பெயர் அதன் பலன் தன் உள்ளத்தைமகிழச்செய்யும். செம்மைநிறமுடைய பொன் பூஷணங்களும் அனேக அடிமையாட்களை யுண்டாக்குவ

தோடு பூரண சுகசவுக்கியத்தை யுடையோனாகவுமிருப்பானென அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக.

யாவரும் போற்றப்படும் சந்திரனுடன் சப்தமாதியான ஏழாம் வீட்டோன்கூடி 11 ஆம் இடமான லாபஸ்தானத்திலிருக்க அவர்களை புதன் பார்க்க அவனுக்கு கஜயோகமென்றும் கூருவர். அதன்பலன் அவனுதித்த இருபத்தைந்து வருடத்திற்குமேல் ஒன்பது வருடம் வரையில் அந்த யோகத்தை அனுபவிப்பான்.

ஜெனன லக்கினத்திற்கு 11 ஆம் விட்டோனை லாபஸ்தானாதிபதி சுக்கிரனுடன் கூடி உச்சம் பெற்றிருக்க. புதன் ஜெனனராசிக்கு 1, 4, 7, 10, என்னும் கேந்திரங்களிலிருக்க அவனுக்கு மீன்யோகமென்றும் கூறுவர். அந்த அருமையான பலனுண்டாகும் காலத்தைச்சொல்லுமிடத்து அவனுதித்த 15 வருடத்திற்குமேல் 3 வருடம் வரையில் மேன்மையான சம்பத்தோடிருப்பான்.

வேதங்களுக்கு முதல்வனாகிய பிறகஸ்பதி என்னும் குரு மேன்மைப்பெற்ற பாக்கியஸ்தானத்திலிருக்க ஜெனன ராசிக்கெட்டாம் ராசியில் சுக்கிரனிருக்க 6 ஆம் ராசியில் சுபகிரகங்களிருக்க அவனுக்கு பாசயோக மென்றும் பெயர் அதன் பலன் அவனுதித்த 15 வருடத்திற்குமேல் 8 வருடம் வரையில் மேன்மையான யோகத்தை யுடையவனாக இப்பான்.

கருமஸ்தானாதிபதி என்னும் 10 ஆம் வீட்டோன். நீச்சம் பெற்று கலைகளையுடைய சந்திரனுடன்கூடி லக்கினத்திற்கு ஏழாமிடமான சப்தமத்திலிருக்க அவன் ஜெனித்தது இரவாகவும் சரலக்னமாகவு மிருக்கில் அவனுக்கு விருட்டியோக மென்றும் பெயர். அதன் பலன் அவன்

ஜெனித்த 25 வருடத்திற்குமேல் 5 வருடம் வரையில் நல்ல யோகத்தையுடையவனாக இருப்பான்.

ஜெனன லக்கினத்திற்கு மூன்றாம் வீட்டுக்குடையோன் உச்சம் பெற்றும் 10-ல் குருவிருக்கவும் அவனை சுக்கிரன் பார்க்க அவனுக்கு எழுதண்டயோக மென்றும் பெயர். அவை அவனுதித்த 25 வருடத்திற்குமேல் 8 வருடம் வரையில் நல்ல மேலான யோகத்துடனிருப்பான்.

அம்புலியான சந்திரன் ஜெனன ராசிக்கு 1, 4, 7, 10 என்னுமிடங்களிலிருக்க ஜெனன ராசிக்கு 11 ஆம்மிடமான லாபஸ்தானத்தில் குஜனும் சுக்கிரனுமிருக்க சந்திரனின்ற ராசிக்கொன்பதில் குரு விருக்க அவனுக்கு ரிஷப யோகமென்றுங் கூறுவர். அந்த யோகம் அவனுதித்த 25 வருடத்திற்ருமேல் 9 வருஷம் வரையிலுண்டாகும்.

ஜெனன லக்கினத்திற்கு 10 ஆம் ராசியில் இராகுவிருக்க 10 ஆம் வீட்டிற்குடையோன் ஜெனன லக்கினத்திலிருக்க புதன் மேன்மை பொருந்திய பாக்கிய ஸ்தானமான 9 ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகனுக்குச் சக்கிரயோகமென்றும் பெயர். அந்த யோகம் அவனுதித்த 21 ஆண்டுக்குமேல் அவன் ஆயுளுள்ள வரையிலுமுண்டு.

ஜெனன லக்கிணத்திலும் மூன்று, ஐந்து, எழு, ஒன்பது பத்து இவ்விடங்களிலே எழு கிரகங்கள் அமர்ந்திருக்குமாகில் அந்த ஜாதகனுக்கு மேன்மையைப்படைத்த சக்ர யோகமென்றும் பெயர் அந்த ஜாதகன் மேன்மையையுடைய ராஜாதி ராஜனாகவும் இருப்பான்.

குற்றமில்லாத 10 ஆம் வீட்டாதிபதி 9 ஆம்மிடமான பாக்கிய ஸ்தானத்திலிருக்க மேன்மைபெற்ற ஜெனன லக்கினத்தில் இரண்டாம் வீட்டோனைதனாதிபதி இருக்க

நான்காம் வீட்டில் புதனிருக்க அவனுக்கு கந்துகயோகமென்றும் கூறுவர். அதன் பலன் அவனுதித்த 25 வயதுக்குமேல் 5 வருடம் வரையில் யோகமுண்டு.

வாக்கு என்னும் இரண்டாமிடத்தில் சுக்கிரனும். செம்மை பொருந்திய குருவும், சந்திரனும் சேர அவர்களை 9 ஆம் வீட்டோனான பாக்கியாதிபதி பார்க்க அவனுக்குக் கதா யோகமென்றும் சொல்லுவர். அந்த யோகம் அவனுதித்த 26 வருடத்திற்குமேல் ஏழு வருடம் வரையில் நீங்காது நல்ல மேன்மையான யோகமுண்டென்று கணித வல்லோர் கூறுவர்.

பாக்கியாதிபதியான ஒன்பதாம் வீட்டோன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்குடையோன் சுக்கிரனுடன் கூடி இருக்க. மேன்மைபெற்ற 5 ஆம் ராசியில் சுக்கிரனிருக்க. சந்திரிகா யோகமென்றும் பெயர். அவற்றின் பலன் 26 வருடத்திற்குமேல் 3 வருடம் வரையில் நல்ல மேலான யோகமாகவே இருக்கும்.

ஜெனன ராசிக்கு இரண்டாம் வீடு முதல் அஷ்டம ஸ்தானம் வரையில் 7 கிரகங்களும் வரிசைப்பெற நிற்குமாயின் அந்த ஜாதகனுக்கு மேன்மைப் பலனைதரும் சந்திரிமா யோகமென்றும் பெயர். அதின்பலன் மிக்க அழகு பொருந்தியவனும் பிரதானியாகவு மிருப்பான்.

ஜென்ன லக்கினத்திற்கு 11 ஆம் வீட்டுக்குடையோனான லாபாதிபதியும் குரு, சுக்கிரன் இம்மூவரும் பாக்கிஸ்தானமான 9 ஆம் ராசியிலிருக்க அவனை இரண்டாமிடத்தோனான தனாதிபதி பார்க்க அவனுக்குச் சற்பயோகமென்றும் பெயர். அந்த ஜாதகன் ஜெனித்த 54 வருடத்திற்கு

மேல் 28 வருடம் வரையில் மேல்கண்ட யோகத்தை அனுபவிப்பான்.

குரு நின்ற ராசிக்கு 3 ஆம் வீட்டில் சுக்கிரனும், சுக்கிரன் நின்ற ராசிக்கு 9 ஆம் வீட்டில் சூரியனும் 10 ஆம் வீட்டதிபதி நான்காம் ராசியிலிருக்க. அந்த ஜாதகனுக்கு மேகயோகமென்றும் பெயர். அவனுதித்த 27 ஆண்டுக்குமேல் மூன்று வருடம் வரையில் மேற்சொன்ன யோகமுண்டென. ்மேலோர் கூறுவர்.

மேன்மையைதரும் லாபாதிபதி என்னும் 11 ஆம் வீட்டோன் நின்ற ராசிக்கு 3, 5, 9 என்லும் ராசியில் குஜன் ராகு, சூரியன் இவர்கள் நின்றாலும் அல்லது நோக்கினாலும் அந்த ஜாதகனுக்கு குரோத யோகமென்றும் பெயர். அந்த யோகம் அவனுதித்த 33 ஆண்டுகளுக்குமேல் எட்டு வருடம் வரையில் நல்ல யோகத்துடன் எல்லாவித பாக்கியங்களும் பொருந்தியனாக இருப்பான்.

ஜெனன ராசிக்கு 9 ஆம் ராசியான பாக்கிய ஸ்தானத்திலேனும் 1, 4, 7, 10 என்னும் கேந்திரத்திலாவது குருவிருக்க 11 ஆம்மிடமான லாபகேந்திரத்தில் தேவேந்திரனாகிய சுக்கிரனிருந்தாலும் குருவும், சுக்கிரனும் மேற்சொன்னபடி ஒருவருக்கொருவர் மாறி இருந்தாலும் அந்த ஜாதகனுக்கு பிரம்ம யோகமென்றும் பெயர். அவனுதித்த 36 ஆண்டிகளுக்குமேல் 12 வருடம் மேற்சொன்ன யோகத்தால் எல்லாவிதமான பாக்கியமும் பொருந்திருப்பர்.

குரு லாபஸ்தானமான 11 ஆம் இராசியிலும் குடும்பாதி என்னும் இரண்டாம் வீட்டோன் 10 ஆம் இடத்திலும் பலம் பெற்றிருக்க பஞ்சம ஸ்தானாதிபதியான ஐந்தாம் வீட்டதிபதி இரண்டாமிடமான தன ஸ்தா

னத்திலிருக்க ஒன்பதாம் வீட்டோனை பாக்யாதிபதி ஜெனன லக்கினத்திலும், ஜெனன லக்கினம் திரராசியாயும் இருக்க தேவேந்திர யோகமென்று பெயர் அவனுதித்த 6 வருடத்திற்குமேல் எட்டு வருஷம் வரையில் உண்டு.

ஜெனன லக்கினத்திற்கு 5 ஆம் ராசியில் குருவும், ஐந்தாம் வீட்டோன் ஒன்பதிலும் 10-ல் சனியுமிருந்தால் மகுட யோகமெனவும் அவனுதித்த 36 ஆண்டுகளுக்குமேல் 32 வருடம் வரையில் மேற்சொன்ன யோகத்தை அனுபவிப்பானென அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக.

நன்மையைத்தரும் சனி ஜெனன லக்கினத்திற்கு 9 ஆம் ராசியிலிருக்க கேந்திரத்தில் பேர்பெற்ற 10-ல் சுபகிரகங்களிருக்க வெண்ணிரமுடைய சந்திரனுக்கு 5-ல் சூரியனிருக்க 11 ஆம் மிடமான லாபஸ்தானத்திற்கு 1, 4, 7, 10 என்னும் ராசிகளில் குருவு மிருந்தால் சரயோக மென்றும் பெயர். அவனுதித்த 36 வருடங்களுக்குமேல் 5 வருட வரையில் மேன்மையான யோகத்தோடிருப்பான்.

சந்திரனிருந்த ராசிக்கு 9 ஆம் ராசியில் குருவிருக்க குருநின்ற ராசிக்கு 9 ஆம் ராசியில் வளமை பொருந்திய சுக்கிரனிருக்கவும், அந்தஜாதகனுக்கு மிக்க அழகைப் படைத்த பத்திரயோகமென்று பெயர். அதன் பலனவன அவனிதித்த 40 வயதுக்குமேல் 9 வருடம்வரையில் பாக்கியமுடையோனாக விருப்பான்.

பாக்யாதிபதியாகிய 9 ஆம் ராசிக்குடையோன் நின்ற அங்கிசாதிபதி மேன்மையையுடைய உச்சம்பெற்று சூரியனுடன் கூடி இருக்கில் நளயோகமென்று பெயர். அவனுதித்த 42 வருடங்களுக்குமேல் 32 வருடம் வரையில் யோகத்தையுடையோனாக இருப்பான்.

பாக்கியாதியான 9 ஆம் வீட்டதிபதி இருக்கும் இராசிக்குத் திரிகோணங்களாகிய 3, 5, 9, என்னும் இடங்களில், ஜெனன லக்கினத்திற்கு 5 ஆம் வீட்டதிபனாகிய, பஞ்சமாதிபதியிருக்க 5-ல் குருவிருக்கவும், அந்த ஜாதகனுக்கு போகயோகமுண்டாகும், அவை அவனுதித்த 42 வருடங்களுக்குமேல் 5 வருடம் வரையில் யோகமுடையவனாக இருப்பான்.

ஜெனன ராசிக்கு நான்காம் ராசியில் சுக்கிரனிருக்க, சப்தமஸ்தானத்தில், சந்திரனும், 11-ல் புதனிருக்க, இரண்டாம் இடமாகிய தனஸ்தானத்தில் குருவிருக்க, சூரியன் சுபகிரகங்களுடன் கூடி இருக்க, அந்த ஜாதகனுக்கு நன்மையை விளக்கும், காமினி யோகமென்றும் பெயர். அவற்றின்பலன், அவை அவனுதித்த 42 வருடம் வரையில் யோகத்தைத்தரும்.

ஜெனன ராசிக்கு 5 ஆம் வீட்டோன், ஒன்பதிலும் 11 ஆம் வீட்டோன் ஐந்திலும் நான்காம் வீட்டதிபதியோடு சந்திரன் கூடி இருக்க, அந்த ஜாதகனுக்கு வருத்தத்தை தரப்படமாட்டாத இந்திரயோக மென்றும் பெயர். அவை அவனுதித்த 44-க்கு மேல் 42 வருடம் வரையில் யோகத்தோடிருப்பான்.

பூரணகலைகளையுடைய சந்திரன், நின்ற அங்கிசாதிபதி உச்சம் பெற்றும் திவாவென்னும், லக்கினத்தில் ஜெனனமாகியும் இருந்தால், அவனுக்கு கருடயோகமென்றும் பெயர். அவை அவனுதித்த 44 வருடங்களுக்குமேல் 28 வருடம் வரையில் நல்லமேன்மையான யோகத்தையே அனுபவிப்பான்.

ஜெனன ராசிக்கு இரண்டாம் ராசியில் சந்திரனும், அவனோடு குருசேர இரண்டாம் வீட்டோன் ஒன்பதிலும் 11 ம் ராசியதிபதி 9 ஆம் ராசியில் இருந்தால், அவனுக்குச்சுபயோகமென்றும் பெயர். அவனுதித்த 47 க்குமேல் 32 வருடம் வரையில் யோகமுடையவனாக இருப்பான்.

ஜெனன ராசிக்கு ஏழாம் ராசியதிபதி மூலத்திரிகோணத்திலும், நேத்திர ஸ்தானமான இரண்டில் இரண்டாம் வீட்டோன். ஆக்ஷிபெற சூரியன் உச்சம் பெற்று இருந்தால். அவனுக்கு 50 வருடங்களுக்குமேல் 3 வருடம் வரையில் சுபயோகமென்னும் யோகத்தையுடையவனாக இருப்பான்.

பாக்கியாதிபதி எவரங்கிசம் பெற்றானோ, அந்த அங்கிசாதிபதி உச்சம் பெற்று லக்கினத்திற்கு இரண்டாம் ராசியில் இருக்க, இரண்டாம் வீட்டோன் 9 ஆம் இடமென்னும் பாக்கியஸ்தானத்திலிருக்க, அந்த ஜாதகனுக்குச் சுபயோகமென்றும் அவை அவனுதித்த 36 க்குமேல் 3 வருடம் வரையில் அனுபவிப்பான்.

ஜெனன ராசியில் 11 ஆம் வீட்டோனிருக்க அந்த அங்கிசாதிபதி மேற்சொன்ன 11 ஆம் ராசியிலேயே உச்சம் பெற அவனுடன் 9 ஆம் வீட்டோன் கூடி இருக்க அவனுக்குச் சரஸ்வதி யோகமென்றும் பெயர். அவை அவனுதித்த 48 வருடத்திற்குமேல் 34 வருடம் வரையில் யோகமுடையவனாக இருப்பான்.

ஜென்ன ராசிக்கு 10 ஆம் வீட்டோனென்று சொல்லும் கரும ஸ்தானத்தில் சனியும் 10 ஆம் வீட்டோன். இராகுவுடன் கூடி இருக்க, சண்டயோகமென்றும் பெயர் அப்பலனுண்டாகும். காலமாவன அவனுதித்த 50 க்குமேல் எட்டு வருடம் வரையில் யோகமுள்ளவனாக இருப்பான்.

லக்கின நோதயம்

சந்திர லக்கினத்தினால் ஆயுள் சொல்வது

இராசி ஒன்றுக்கு பாகை 30 என முன்பு கூறியுள்ளேன் ஆகையால் ஒவ்வோர் ராசியிலும் சந்திரன் எத்தனை பாகையின் அளவிலிருக்கிறானென அறிந்து கீழ்கண்ட அறிஷ்டதோஷம் கூறவேண்டும். சந்திரன் இரண்டேகால் நாள் ஓர் ராசியிலிருப்பானென, சாஸ்திரங்களில் கூறியபடி நாள் இரண்டேகாலுக்கு நாழிகை 135 ஆகும் இதனை விநாடியாக்கின் 8100 விநாடியாகும். இவ்விநாடிக்கே 30 பாகை என்பதால் மேற்கண்ட 8100 ஐ 30 தால் வகுக்க பாகை 1-க்கு 270 வினாடியாகும் இவ்வாறு ஒவ்வொரு ஜாதகர்களுக்கும், சந்திரன் எந்த ராசியிலிருக்கிறானோ, அந்த ராசியில் சந்திரன் பிரவேசித்து எத்தனை பாகைகள் ஆயினவென்றறிந்துகீழ்கண்டவாறு அதற்கு ஆயுள் சொல்ல வேண்டும் இதனையே பாலரிடம் தோஷம் என்றும் கூறியுள்ளன.

பாலாரிட்ட தோஷம்

கன்னியாராசியில் பாகை 1-ல் சந்திரனிருக்க ஷெடி தோஷம்	௵	2
விருச்சிகராசியில் பாகை 2 சந்திரனிருக்க	,,	2
தனுசில் பாகை 2-ல் சந்திரனிருக்க	,,	2
ஷெடி ராசியில் பாகை 3-ல் சந்திரனிருக்க	,,	3
துலாராசியில் பாகை 4-ல் சந்திரனிருக்க	,,	4
சிங்கத்தில் பாகை 5-ல் மதிஇருக்க	,,	5
மகரத்தில் பாகை 6-ல் சந்திரனிருக்க	,,	6
கும்பத்தில் பாகை 7-ல் சந்திரனிருக்க	,,	7.

மேடத்தில் பாகை 8-ல் மதிஇருக்க	வரு	8
இடபத்தில் பாகை 9-ல் மதிஇருக்க	,,	9
மீனத்தில் பாகை 10-ல் மதிஇருக்க	,,	10
மிதுனத்தில் பாகை 11-ல் மதிஇருக்க	,,	11
கடகத்தில் பாகை 12-ல் மதிஇருக்க	,,	12

யோக அரிட்ட தோஷம்

யோக அரிட்ட தோஷம் என்பது ஜெனித்த நாள் முதல், எத்தனை நாள் அல்லது மாதம் வருடங்கள் கழிந்து யோகமுண்டு என்பதை யறிவதேயாம். யோகபாவங்களை முன்னமே கூறியுள்ளோம். ஆயினும் எத்தனை வருடங்களுக்குமேல் என்பதைக் குறிப்பிட வில்லையாதலால் அதன் விபரம் பின் வருமாறு கிரகங்களின் அடவியால் தெரிந்து சொல்வது நலம். இவை லக்கினத்திலுள்ள கிரகங்களைக் கொண்டு சொல்லவேண்டும்.

லக்கினத்தில்	சூரியன்	நிற்கில்	17	வருஷங்களுக்குமேலும்
,,	சந்திர	,,	20	,,
,,	குஜன்	,,	18	,,
,,	புதன்	,,	13	,,
,,	குரு	,,	16	,,
,,	சுக்கிர	,,	15	,,
,,	சனி	,,	19	,,
,,	ராகு கேது	,,	14	,,

யோக அதிஷ்டம் உண்டாகும்

மேலும் லக்கின பலங்களைப்பற்றி இரவில் சரராசியாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் என்பவைகளே

பலமெனவும் பகலாகில் ரிடபம், சிங்கம், விருச்சிகம், கும்பமென்னும் ராசிகளே பலமெனவும், சந்தியாகில் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்னும் ராசிகளே பலமெனவும், கூறியுள்ளார். ஆகையால் லக்கின ஜனோதயத்தியல்பை ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

லக்கினத்தைப்பற்றி கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்கள்.

1 லக்கினமானது ஒற்றை ராசியா (அ) இரட்டை ராசியா ?

2 லக்கினமானது ஜலோதய ராசியா சிரோத ராசியா (அ) சிரபிருஷ்டோதய ராசியா ?

3 லக்கினத்துக்குறிய நாழிகை விநாடியின்படி 1, 2, 3, 4, முதலிய பாதங்களில் எத்தனையாவது பாதம்.

4 ஜெனன லக்கினமானது, ஆண்ராசியா பெண் ராசியா (அ) பெண் கிரக ராசியா ஆண் கிரக ராசியா ?

5 ஜெனன இலக்கினத்தை சூரியன், அங்காரகன், ராகு, கேது, சனி முதலிய தினசரி பாவக் கோட்கள், நோக்குகின்றனரா (அ) சந்திரன், புதன், சுக்கிரன், குரு முதலிய சுபகோட்கள் நோக்குகின்றனரா.

6 நோக்கில் பக்க பார்வையா, சுபபார்வையா, நேர் பார்வையா ?

7 லக்கினத்தோனிருக்கும் சுபா சுபம் எப்படி.

8 லக்கினாதிபதி தன் வலிவை இழந்து விட்டனனா இழக்க வில்லையா ?

9 லக்கினத்தோன் முழு சுபன், கால் சுபன், அரை
சுபன், முக்கால் சுபன் என்பவனு அல்லது முழுபாபி கால்
பாபி, அரைபாபி, முக்கால் பாபியா ?

10 லக்கினுதிபதிக்குறிய தன்மை குணம் முதலியன
இவைகளைப்பற்றி ஆருய்வது முக்கியம்.

கிரகசேகர விபரமும், உச்ச விபரமும்.

நவகோட்களால் பலன் சொல்லவேண்டிய விஷயம்.
ஒவ்வோர் ராசியிலும் நிற்கும் கிரகத்திற்கேற்றவாறு சொல்
வதாயினும் நின்ற கிரகத்தோடு மற்றுமோர் கிரகம் சேர்வ
தாலும் மற்றும் வேறு ராசியிலிருக்கும் கிரகம் நோக்குவ
தாலும் அக்கிரகத்திற்குறிய பலன் குறைந்தும், மிக்கபலமும்
பெரும் என்பதை சோதிடர்கள் மனதிலிருக்கவேண்டும்.
எப்படியெனில் குரு கடகராசியில் உச்சம் பெறப்பிறந்த
ஜாதகங்களைப்பற்றியோ வேறு கிரகங்கள் உச்சம்பெற்ற
ஜாதகங்களைப் பற்றியோ சோதிடர்கள். அவர்களைப்பற்றி
வர்ணிப்பதை அளவிட முடியாது. உச்ச கிரகத்தைப்பற்
றியே அவ்வாறு புகழ்ந்து கூறுவது. மிக்க தவறென்பதை
கவனிக்கவேண்டும். உச்சம் பெற்றாலும் அவ்விராசியில்
அந்த கிரகத்திற்குறிய முழு உச்ச கிரகணமிருக்கிறதா என்
பதை ஆராய்ந்தே உச்சபலத்தைக் கூறவேண்டுமென்பது
சாஸ்திரப்பிரமாணம் முன்கூறிய குருவுக்கு கடக ராசியில்
எத்தனை பாகம் உச்சம். அத்தனை பாகத்திற்குள் பிறந்த
வர்களே சற்றேரக்குறைய உச்சபலனை யனுபவிப்பார். அதி
லும் மேற்படி குருவை கொடியவர்களுப், சத்துருவும், நீச்
சம்பகை, அஸ்தமயம் பெற்ற கோட்களும் நோக்குவரேல்
அவன் உச்சபலம் குறையுமென்பதை ஊகித்துணரவேண்
டும். உச்சமில்லாத கிரகத்தையும் இவ்வாரே ஆலோசித்து

பலன் சொல்வது முக்கிய கடமையாகும். சாஸ்திரங்களில்
கூறியதாவது கொடிய கோட்கள் கேந்திரம் பெரலாமென்
றும் சுபகோட்கள் கேந்திரம் பெரலாகாதென்றும் கூறியிருப்
பதையும் கைக்கொள்ள வேண்டிய தேகடமையாகும். கேந்
திரம் பெற்றாலும் எத்தனையாவது கேந்திரம் என்பதை
கவனித்து அதிற்கேற்றவாறு சொல்லவேண்டும். கேந்திரங்
களில் மிக்க சிரேஷ்டமான க்ஷேத்திரம் 10 ஆம் இடமே
யாகும். சூரியன் சந்திரனைத்தவிர மற்றகோட்கள் வக்
கிரத்திலிருந்தால் மிக்கபலம் எனவும் சாஸ்திரங்கள் முறை
யிடுகின்றன. அன்றியும் ஒவ்வொரு கோட்களுக்கும் அதி
யுச்ச பாகங்களை சூரியனுக்கு 10 பாகத்தையும் சந்திரனுக்கு
3 பாகத்தையும், அங்காரகனுக்கு 28 பாகத்தையும், புத
னுக்கு 15 பாகத்தையும், குருவுக்கு 5 பாகத்தையும், சுக்கிர
னுக்கு 27 பாகத்தையும், சனிக்கு 2 பாகத்தையும் அதியுச்ச
மென கூறியுள்ளார். உச்ச கிரகமிருந்தால் மேற்சொன்ன
பாகத்திற்குள்ளாகவா பின்னுகவா என்பதை நன்கு கவனிக்க
வேண்டும். இத்துடன் கிரகசேர்க்கையால் சுபகிரகங்கள்
துற்பலனும் அசுப கிரகங்கள் நற்பலனையும் தருவது சகஜம்.
ஆனதால் சுபகோட்கள் நற்க்ஷேத்திலிருந்து விட்டதாலே
நற்பலனைத் தருவானென்பது நம்பத்தகுந்ததன்று சேர்க்கை
தோஷத்தால் துற்பலனையே தருவான். இவ்வாரே கொடிய
கிரகங்களுக்கும் மேற்சொன்னவாறு ஆராய்ந்து பலன் கூற
வேண்டும். கிரகசேகரப் பலன்களை பற்பல நூலாசிரியர்
கள் பற்பலவிதமாய் கூறியுள்ளாராயினும் இங்கு குமார
சாமியம், வீமேஸ்வர உள்ளமுடையான், சாதக சிந்தாமணி
என்னும் நூற்களை யாராய்ந்து சில விஷயங்களைச் சேர்த்தும்
நீக்கியும் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளோம். உச்சம் என்
பதை மேலே ஒவ்வோர் கிரகத்திற்கும் பாகத்தின் அளவை

கூறியதால் அநேகருக்கு சந்தேகத்திற் கிடமாகும். உதாரணமாக சூரியன் மேஷ ராசிக்கு உச்சமென்றும் அவ்விராசியில் 10 பாகங்களே அதியுச்சபலம் என்றும் கூறினோம். சூரியன் உஷ்ண பிரகாசத்தை யுடையவனென்று அனைவருக்கும் தெரிந்ததே. மேஷ ராசிக்கு சூரியன் சித்திரைமாதம் முதல் தேதியில் பிரவேசிப்பான். சித்திரை மாதம் முதல் தேதியில் சூரியன் மேஷ ராசிக்கு உச்சனாய்ப் பிறவேசித்தகாலம். தன் கிரணமாகிய உஷ்ணத்தை வீச ஆரம்பிக்கிறான். ஆயினும் கொடுமையான உஷ்ணம் 10 நாட்களே அதனை நாம் கத்திரி வெய்யலென்கிறோம். அப்போது அம்மாத உஷ்ணம் அதிகமாகவே காணப்படுகிறது. இதனையே அதிஉச்சம் என்று கூறவேண்டும். இப்போது அதியுச்ச மென்றால் மிக்கபலன் என்பது அர்த்தமாகிறது. ஆதலால் உச்சம்பெற்ற கோட்களின் பலன் எவ்வளவு நாள் அல்லது பாகம் இருக்கிறதென ஆராய்ந்து பலன் கூற வேண்டுவது அவசியமாகும்.

கிரகசேகர வர்கப்பலன் கீழ்கண்டவாறு சேகரவர்க பல மறிவதோடு கூடும்பலமும், பாவக பலமும் கூட்டிச் சொல்லவேண்டும். இங்கு சேகரப்பலன் விபரம்.

சூரியனுக்குச் சேகர		வர்க்கம்	62
சந்திரனுக்கு	,,	,,	31
குஜனுக்கு	,,	,,	14
புதனுக்கு	,,	,,	7
குருவுக்கு	,,	,,	3
சுக்ரனுக்கு	,,	,,	1
சனிக்கு	,,	,,	0
ஆகமொத்த சேகரவர்கம்			108

கிரகசேகரப் பலன்.

(சூரியன்) சூரியனோடு வளர்பிறைச் சந்திரன் கூடியிருக்கில்—பிரபல கீர்த்திப் பிரதாபசாலியாயும் தணிக்கையான வார்த்தைகளும், எக்காரியங்களிலும் சமர்த்தனாகவு மிருப்பான். அன்றியும் தன் மனைவியை தன் கைவசப்படுத்தும் சக்திவாய்ந்தவனாயு மிருப்பான்.

சூரியனோடு குஜன் கூடியிருக்கில்—வஞ்சமனத்தனும் மௌனம் சாதிப்பவனும், தைரிய வார்த்தைகளாடுபவனும், எக்காலமும் ஏதோ ஓர் விஷயத்தை ஆலோசிப்பதுபோலிருப்பவனும் ஆவான்.

மேற்படி சூரியனோடு புதன் கூடியிருக்கில்—அனைவராலும் மெச்சத்தக்க வித்தையாசாலியும், யாவரும் புகழத்தக்க அழகு வாய்ந்தவனும், ஸ்தூலசரீரமுடையவனும், கணித ஆராச்சியுள்ளவனும் ஆவான்.

சூரியனோடு குரு கூடியிருக்கில்—மன்னர்களால் தன் ஜீவியத்தை நடத்துபவனும் பரிசுத்த மனதையுடையவனும், தன் காரியத்தில் மிக்க ஜாக்கிறதையோடிருப்பவனும், பூரண செல்வத்தைப் படைத்தவனுமாம்.

சூரியனோடு சுக்கிரன் கூடியிருக்கில்—தன் மனைவியைத் தன் வசமாய் செய்து கொள்ளுபவனும், விரோதிகளை யுடையவனும், ஸ்ரீகள் மூலரோகமுடையவனும், ஸ்ரீகள் மேல் விறக்த்தி இவைகளையுடையவனுமாம்.

சூரியனோடு சனி கூடியிருக்கில்—எக்காரியத்திலும் அபஜெயமுடையவனும், தைரியமில்லாதவனும், மந்தபுத்தியை யுடையவனும், சத்துருக்களிடம் அகப்பட்டு விழிக்கும் தன்மையை யுடையவனும் ஆவானெனக் கூறுவர்.

சூரியனோடு சந்திரனும், குஜனும் கூடியபலன்—பிரயோஜனமற்ற வார்த்தைகளைப் பேசுபவனும் சவுரிய வீர பராக்கிரமங்களை யுடையவனும், கோள் சொல்லுபவனும் ஆவான்.

சூரியன், சந்திரன், குரு இவர்கள் கூடியிருக்கில்—ராஜாக்களால் மெச்சத் தகுந்தவனென்றும் ராஜாக்களுக்குச் சமான முடையவனெனவும் மேற்படி மன்னர்களால் பூஜிக்கப்படுவோனும் ஆவான்.

சூரியன், சந்திரன், சுக்கிரன் இவர்கள் கூடியிருக்கில்—விஷவார்த்தைகளைப் பேசுபவனும், தன் சுயஜெனங்களே தனக்குச் சத்துருவாக இருத்தலும், பொன் ஆபரணங்கள் நிறைந்தவனும் பாப ஈனத்தொழில்களைச் செய்பவனும் ஆவான்.

சூரியன், சந்திரன், சனி இவர்கள் கூடியிருக்கில்—பலவிதமான பேச்சு, நினைப்பு, குணம் இவைகளையுடையவனும் அன்னிய தேசங்களில் சஞ்சரிக்கப் பிரியமுடையவனும் ஆவானென சாஸ்திரங்கூறும்.

சூரியனோடு, குஜனும், குருவும் கூடியிருக்கில்—இனிய மொழியை யுடையவனும், சேனைத்தலைவனாகவும், அமைச்சுத் தொழில் செய்யத் தகுந்தவனும், பிரபல்ய மேன்பாடுடையவனும் ஆவான்.

சூரியனோடு குஜன், சுக்கிரன் இவர்கள் கூடியிருக்கில்—நயன வார்த்தைகளை யுடையவனும், இரணம், காய வியாதி முதலியவைகளை யுடையவனும், போக சுகங்களை அதிகம் இச்சிப்பவனும், செல்வத்தைச் சம்பாதித்து வீண் சிலவு புரிபவனும், நற்குலத்திலுதித்தவனும் ஆவான்.

சூரியனோடு குஜன், சனி கூடியிருக்கில்—தன் மாதா பிதாக்களிடத்தும், பந்து ஜெனங்களிடத்தும், பிரிதியுள்ளவன், எந்நாளும் நீங்காத வியாதியுடையவனும் அநேக செல்வங்களைத் தேடுவதோடு மூர்க்க குணமுடையவனாகவுமிருப்பான்.

சூரியனோடு புதன், குரு கூடியிருக்கில்—செல்வம் திரண்டவன், பொக்கிஷதாரி, பிரதாபசவுரியம், பராக்கிரமம், நல்வாக்கு ராஜாக்களுக்குச் சமமானவன், பூமி மூலமான செல்வத்தைத் தேடுபவன், தியாகி, தீரம், கேட்போர்க்கு இல்லை என்னாமை, தானதருமம் முதலியவைகளை யுடையவன்.

சூரியனோடு புதன், சுக்கிரன் கூடியிருக்கில்—பிரகாசத்தையுடைய தேகத்தையுடையவன், வித்தையாசாலி எக்காலத்தும் பலவித போக்கான பேச்சுடையவன், பிரசங்கம் செய்யும் வித்துவான், ராஜபூஜிதன்.

சூரியனோடு புதனும், சனியும் கூடியிருக்கில்—வஞ்ச மனத்தையுடையவன், துற்வசனன், குணங்களில் மாறுபட்டவன், பரிசுத்தமில்லாத தேகத்தின் வறுமை என்னும் நோயாளன் (கைத்தொழிலாலும்) சில காலங்களில் அடிமைத் தொழிலாலும் ஜீவிக்கத்தக்கவன்.

சூரியனோடு குரு, சுக்கிரன் கூடியிருக்கில்—பூரண தனத்தைப் படைத்தவன், தனது விழிகளுக்கு ரோகமுடையவன், அறிவு, நல்லொழுக்கம் முதலியவைகளை யுடையவன், சகலரையும் தன் வசமாக்கும் சக்திவாய்ந்தவனும் ஆவான்.

சூரியன், சுக்கிரன், சனி இவர்கள் கூடியிருக்கில்—பலசாலி, மனகெருவி, அவமான காரியங்களின் தலை இடாதவன், கொடிய காரியங்களில் தலையிட்டுச் செய்யத்தக்கவன்

தனாதிபதி யாத்திரைசெய்ய மனமுடையவன், ஆரோக்கிய முடையவன்.

இதுவரையில் சூரியனோடு ஒருகிரகம் கூடியபலனும் இரண்டு கிரகங்கள் கூடிய பலனையும் கூறியுள்ளோம். இப்பால் மூன்று கிரகங்கள் கூடியபலனைக் கூறுவோம்.

சூரியன், சந்திரன், குஜன, புதன் இவர்கள் கூடியபலன்.

பொய் சொல்லத்துணிந்தவன், மௌனமாய் பேசக் கூடியவன், பலத்தையும், பராக்ரமத்தைப் படைத்தவன், கல்வி, கலைக்கியான முதலியவைகளில் தேர்ந்தவன், சந்தோஷமும், செல்வமும் உடையவன்.

சூரியன், சந்திரன், குஜன் குரு இவர்கள் கூடும்பலன்.

அளவிரந்த செல்வத்தைப் படைத்தவனும், நற்குணம் நல்லறிவு, சன்மார்க்கம் முதலிய தராதன்மையை யறிந்தவனும், புத்திரப்பேருடையவனும், உத்தம நற்குண பத்தினியையுடையவனும் ஆவான்.

சூரியன், சந்திரன், குஜன், சுக்கிரன் இவர்கள் கூடியபலன்.

தன் பந்து ஜெனங்களின் நன் கொடையில்லாதவனும், விகட வார்த்தைகளை யுடையவன், விபாதியை யுடையவன் களத்திரத்தால் சில காலங்களில் வருத்தப்படத்தக்கவன்.

சூரியன், சந்திரன், குஜன், சனி இவர்கள் கூடியபலன்.

தன் பந்துஜெனத் துவேஷங்களையுடையவன், பொருளில்லாதவன், பசியாளன், திரேகத்திலடையாள முடையவன், அடிக்கடி விசனப்படுவன், கஷ்டஜீவன முடையவன், சவுக்கியமில்லாதவன் என்றும் கூறுவர்.

சூரியன், சந்திரன், புதன், குரு இவர்கள் கூடியபலன்.

பூரண அறிவுடையவன், செல்வம் திரண்டவன், அரசர்களுக்குச் சமானமான வாழ்க்கையை யுடையவன், பல்லக்கு, பஞ்சணை முதலியவைகளை யுடையவன், சவுக்கியதேகன், நல்வசனமுடையோன்.

சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் இவர்கள் கூடியபலன்.

மனவியின்மேல் நீண்ட பிரியமுடையவன், ஆடல் பாடல் முதலிய நாட்டிய வித்தைகளை யுடையோன், பிரகாசத்தையுடை சரீரமுடையோன், பூஷணங்களைச் சேர்க்க வல்லவன், பரிசுத்தமுடையவன்.

சூரியன், மதி, புதன், சனி இவர்கள் கூடியபலன்.

மதுபானங்களை இச்சிப்போன், உயர்ந்த சரீரத்தை யுடையவன், வியாபாரம் செய்யத் துணிந்தவன், ஆடையாபரணங்களை அதிகமுடையவன், சீக்கிர சந்தோஷி நல்வரவுடையோன்.

சூரியன், சந்திரன், குரு, சுக்கிரன் இவர்கள் கூடியபலன்.

களத்திரத்தால் சந்தோஷத்தை யடைபவன், புத்திரர்களால் திரண்டதனத்தைச் சேகரிப்பவன், பூரண செல்வத்தையுடையவன், ஆரோக்கியம், சவுக்கியம் உடையவன், தான்ய சேர்க்கையும், வாகன சேர்க்கையும் உடையவன்.

சூரியன், சந்திரன், குரு, சனி இவர்கள்கூடியபலன்.

தாய் தந்தையரின் சவுக்கியம், குறைந்தவன், மனைவியால் மன வியாகூலத்தை யுடையவன், ராஜத்துவேஷமுடையவன் எந்நாளும் பலவித துன்பங்களை யனுபவிப்போன், புராணங்களைக் கேட்க இச்சையுள்ளோன்.

சூரியன், குஜன், புதன், குரு இவர்கள் கூடியபலன்.

சமர்த்துடையவன், பலவான், சையோகசீலன், அன்னியஜன ஆசையுடையவன், பயங்கரத்தையுடையவன், ஆயுதம் பழக்கத்தை யுடையவன், அழகும் அயிஸ்வரியமுடையவன், தீர்க்கசந்தோஷி.

சூரியன், குஜன், புதன், சனி இவர்கள் கூடியபலன்.

திருட்டுத் தனத்தையுடையவன், இரண காயங்களை யுடையவன், தீயமார்க்கங்களிலும், துற்கருமங்களையும் செய்ய ஆசைப்படுபவன், காகத்தைப்போன்ற பார்வையை யுடையவன், ஆயுரா ரோக்கியங்களையுடையவன், அன்னதுவேஷி.

சூரியன், குஜன், குரு, சுக்கிரன் இவர்கள் கூடியபலன்.

